

# தர்ம மார்க்கம்

## திரு.க.தர்மலிங்கம் அவர்களின்

## மணிவிழா மலர்




வெளியீடு :- மணிவிழாக்குழு
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
2012

LIGHT DISPELS DARKNESS

# தர்ம மார்க்கம்

# மணிவிழா மலர்

யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

# கல்லூரிக் கீதம்

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

வாழிய வாழிய வாழியவே உடுப்பிட்டி
அமெரிக் கன்மிஷன் கல்லூரி - வாழிய

அனுபல்லவி

ஏழிசை போலவும் இன்றமிழ் போலவும்
இசைபல திசைதொறும் இசைவுற - வாழிய

சரணம்

ஓது கலைத்துறை யோடுவிஞ் ஞானமும்
ஓங்கு முயிர்நலந் தாங்குமெய்ஞ் ஞானமும்
நாத இசையொடு நங்கள் சமூகமும்
நாடும் வளம்பெறப் பீடும் பெருக்கி - வாழிய

உத்தம ஒழுக்கமும் உண்மை விழுப்பமும்
உயிரினும் மேலாய் தாங்குமெய்ஞ் ஞானமும்
நாத இசையொடு நங்கள் சமூகமும்
நாடும் வளம்பெறப் பீடும் பெருக்கி - வாழிய

தன்னலம் நீக்கி இன்னலைப் போக்கித்
தாய்த்திரு நாட்டினுக் காய்த்தினம் வாழ்ந்திடும்
உன்னத வீரரை ஓய்வில தாக்கி
ஊழிதொ றூழி ஊழிதொ றூழி - வாழிய

# மார்க்கத்தின் உள்ளே......


01. ஆசியியல்

02. வாழ்த்தியலும் வாழ்வியலும்

03. ஆய்வியல்

01. அனர்த்த சூழலில் அவசியமான சீர்மிய உளவியல் 64

02. பத்திரிகைப் பெண்ணே 68

03. ஆசிரியர்களின் வேலைத் திருப்தியில் செல்வாக்குச் செலுத்தும் அகப்புறக்காரணிகள் 74

04. இலங்கைத் தமிழர் பெருளாதாரமும் அபிவிருத்தி சார் பிரச்சினைகளும். 82

05. அரசியலும் அர்த்த சாஸ்த்திரமும் 88

06. நிர்வாக நடவடிக்கைகளில் மேலாண்மையும் தலைமைத்துவமும் 91

07. தாபன வதிக்கோவையில் வேதனக் கடன் 95

08. ஆளுமை 109


09. சம கால முறையியலில் புலத் தோற்றப்பாடு 111

10. மாணவரின் ஆளுமை வளர்சசியில் ஆசிரியரின் வகி பங்கு 114

11. தாய் மொழிக்கல்வியில் இலக்கிய நூல் 117

12. ஆசிரியர்களுக்கான (லீவு) விடுமுறைகள் 121

# மணிவிழா நாயகன்




யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர்

புகழ் பூத்த கணித ஆசான்

சிறந்த சமூக சேவையாளர்

## திரு.கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்




KT JOHN BLOCK
மணிவிழா மலர்க்குழு 2012



பாடசாலை ஆசிரியர் குழாம் 2012


பிரதி அதிபர்களுடன்


பாடசாலை முகாமைத்துவக் குழு -2012


பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் 2012


பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள்

# ஆசியியல்



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.


## அருளாசிச் செய்தி

கல்விசார் பெருந்தகையீர்:-

யாழ்ப்பாணம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் அதிபராக கடமையாற்றி ஓய்வு நிலையில் மணி விழா சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். கல்வி மனிதனை கண்ணுள்ள மனிதனாக ஆக்குவது கல்வி கல்வியை வழங்குபவன் இறைவன் எனப் போற்றப்படுகின்றான். இக்கல்விக்காக நீண்ட காலமாக பணியாற்றி அனைவருடைய நன்மதிப்பையும் தன்வசப்படுத்தியவர் திரு.கணபதிப்பிள்ளை தருமலிங்கம். எளிமையான தோற்றம் இனிமையான பேச்சு எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் செயல் திறன் அனைத்தையும் தனதாக்கி கல்விப் பணியாற்றிய அதிபர்களை வாழ்த்திப் பாராட்ட வேண்டியது. நமது கடமை இதை உணர்ந்த கல்விச் சமூகம் அதிபரை பாராட்டுவது இன்றைய இளம் ஆசிரிய சமூகத்திற்கு தெம்பூட்டுவதாக அமையும். அதிபரின் பணிகளின் ஊடாக நன்மாணாக்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். ஓய்வு நிலை காலங்களிலும் திரு.கணபதிப்பிள்ளை தருமலிங்கம் கல்விப் பணியும் சமூக சமய பணியாற்றி இறை இன்பத்துடன் வாழ வாழ்த்துகின்றோம். இவருடைய பணியை பாராட்டி மலர் வெளியிடும் ஆசிரியர் சமூகத்தை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
ஆதீன குரு முதல்வர்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.



## வாழ்த்துச் செய்தி

அமெரிக்கன் மிஷனரிமாரால் உடுப்பிட்டியில் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு பாடசாலைகளும் உடுப்பிட்டியின் இரு கண்கள் என்றால் அது மிகையாகாது. உடுப்பிட்டி அமெரிக்ககன் மிஷன் கல்லூரி அமரா்கள் K.T. ஜோன், S.S.செல்வத்துரை போன்ற புகழ்பூத்த அதிபா்களின் வழிகாட்டலில் சாதனைகள் பலவற்றைப் படைத்து அனைவா் கவனத்தையும் தன்பால் ஈா்த்தது. இடையில் தவிா்க்க முடியாத நிலைமைகளினால் தளம்பல் நிலை ஏற்பட்டாலும் மீண்டும் எழுச்சிப் பாதையில் புகழ் பரப்பி நிற்கின்றது. அதற்கு உறுதுணையாக இருந்த பல அதிபா்களில் ஒருவரான திரு.க.தருமலிங்கம் அவா்களை நான் பல ஆண்டுகளாக அறிவேன். அவரது எளிமையான தோறறமும், யாவரையும் அரவணைத்து நடக்கும் பாங்கும் குறிப்பிடத்தக்கன. பண்பாட்டு மரபுகளைப் பேணுவதில் மிகுந்த அக்கறை உடையவா். தேசிய மட்டத்திலும் சாதனை படைக்கின்ற ஒரு மிகச் சிறந்த கல்லூரியின் அதிபராக இருந்த போது எதுவித “பந்தா”வும் இல்லாமல் அமைதியாகத் தனது சேவையை வழங்கிய அவா் போற்றுதலுக்குரியவா்.

அவரது ஓய்வு கால வாழ்க்கை மகிழ்ச்சியும் மன நிறைவும் உள்ளதாகவும் தொடா்ந்தும் சமூகத்தில் பயன்பாடு உள்ளதாகவும் அமைய இறை ஆசீா்வாதம் கிட்டுவதாக.

அருட்திரு N.T. ஜெயநேசன்

தென்னிந்திய திருச்சபை

உடுப்பிட்டி.

# வாழ்த்தியலும்
# வாழ்வியலும்


# சேவைவிபரம்

1. பது/பசறைதமிழ் மகாவித்தியாலயம்
   03.06.1977 – 01.01.1981

2.பல ாலிஆசிரியர் கலாசாலை
   02.01.1981 – 30.06.0982

3.ய ா/கரவெட்டிவிக்கினேஸ்வராக் கல்லூரி
   01.07.1982 – 30.07.1997

4.ய ா/உடுப்பிட்டிஅமெரிக்கன் மிஷன் கல்லூரி
5.01 .08.1997 – 15.08.2012
6.13 .05.2002 – 19.12.2005 :- பிரதிஅதிபர்
7.20 .12.2005 – 14.08.2012 :- அதிபர்



# அர்ப்பணிப்பு மிக்க சேவையாளன்

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கல்வித்துறையில் சிறப்பான சேவையினை வழங்கி அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றிருக்கும் திரு க.தருமலிங்கம் அவர்களின் பணி நயப்பு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். எல்லோருடனும் எளிமையாக பழகும் சுபாவமும் பணிகளை நிறைவு செய்வதில் நேர்மனப்பாங்கும் சமூக முன்னேற்றத்தில் மிகுந்த பற்று உடையவராகவும் இருந்து தனது பணிகளை கடமையுணர்வுடனும் பற்றுறுதியுடனும் மேற்கொண்டமை பாராட்டத்தக்கதாகும். யா/உடுப்பிட்டி அமரிக்கன் மிஷன் கல்லூரியின் பிரதி அதிபராகவும்,அதிபராகவும் கடமையாற்றிய காலப்பகுதியில் நான் கரவெட்டிப் பிரதேச செயலாளராக கடமையாற்றினேன். அக் கல்லூரியின் வளர்ச்சியிலும் மாணவர்களின் உயர்விலும் திரு க.தருமலிங்கம் அவர்கள் ஆற்றிய பங்களிப்பினை நான் நன்கறிவேன்.

அவர் அதிபராக கடமையாற்றிய காலப் பகுதியில் இக் கல்லூரியின் மாணவன் செல்வன் கமலக்கண்ணன் கமலவாசன் கணிதப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று கல்லூரிக்கும் பிரதேசத்திற்கும் மாவட்டத்திற்கும் பெருமை தேடித்தந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மிகவும் வசதி நிறைந்த பாடசாலைகளின் அடைவு மட்டத்தினை முறியடித்து சாதாரண கிராம பாடசாலைகளும் சாதனை புரியலாம் என்ற செய்தியினை வெளிப்படுத்துகின்ற ஒரு நிகழ்வாக இது அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தனது ஓய்வுக் காலத்தில் இன்னும் பல சமூக பணிகளை ஆற்றி தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நீண்ட காலம் வாழ எல்லாம் வல்ல மூத்த விநாயகப் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்பதுடன் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.சி.சத்தியசீலன்,
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.



# வாழ்த்துச் செய்தி

தானங்களில் சிறந்தது வித்தியாதானம் என்பார்கள் அந்த வகையில் மாணவர்களுக்கு சிறப்பான கல்வியை அர்ப்பணிப்புடன் வழங்கியவர் அதிபர் திரு க.தருமலிங்கம் அவர்கள் ஒரு நல்லாசிரியனாக, அதிபராக தனது கல்விப் பணியை ஆற்றியவர். கணித விஞ்ஞான ஆசிரியராக தனது கல்விப் பணியை ஆரம்பித்து விஞ்ஞான மாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டதுடன் யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரியினது அதிபராக சிறப்பாக பணியாற்றி பாடசாலையினது வளர்ச்சிக்கு வழிகாட்டியவர்.

வடமராட்சியினதும் புகழ் பூத்த பாடசாலைகளில் யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரியும் ஒன்றாகும். இப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் புகழ் பெற்று பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். இப் பாடசாலை மாணவர்களினது தேர்ச்சி மட்டதை தேசிய மட்டத்திற்கு உயர்த்துவதற்கு இவர் அரும்பணியாற்றியவர்.

தளராத ஊக்கத்துடன் செயற்படுபவர்கள் வெற்றியடைவர்கள் என்பார்கள் இவர் எந்தவொரு வேலையை மேற்கொண்டாலும் அதில் ஒரு முகமான ஈடுபாட்டுடன் செயற்பட்டு அதனைச் செய்து முடிப்பதிலே வல்லவராக இருந்தார். இவர் தன்னம்பிக்கையுடன் பேசுவதும், செயல்படுவதும் ஏனையவர்களுக்கும் தன்னம்பிக்கையையும், மனவுறுதியையும் கொடுக்கும். அந்த வகையில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நம்பிக்கையூட்டுபவராகவும், சிறந்த வழிகாட்டியாகவும் இருந்து மணவர்கள் உயர்ந்த பெறுபேறுகளை பெற வழிவகுத்தார்.

இவர் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பாடசாலையினது வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார். பாடசாலையினதுமாணவர்கள் கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பல சாதனைகளைப் படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்க்க வழிகாட்டியவராவார். அகவை அறுபதில் ஓய்வு பெறும் அதிபரது ஓய்வுக் காலம் சிறக்கவும், நீண்ட ஆயுளுடன் மகிழ்வான வாழ்வு வாழவும் வாழ்த்துகின்றேன்.

செ.உதயகுமார்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
(நிர்வாகம்)



# வாழ்த்துரை

யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரியில் கடந்த 15 ஆண்டுகளாக சிறப்பான சேவையாற்றி 15.08.2012 இல் இருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்ற திரு.க.தருமலிங்கம்(B.Sc) அவர்களை வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

தனது 35 வருட கல்விச் சேவையில் சிறந்த கணித ஆசிரியனாக, பிரதி அதிபராக, வல்லமை மிக்க அதிபராக பணியாற்றி கரவெட்டிக் கோட்டத்தின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், கல்வி சமூகத்தினர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்று இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்கின்ற திரு.க.தருமலிங்கம் அவர்கள் தனது ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் சந்தோசமாகவும் மகிழ்ச்சியாகவும் நீண்ட காலம் வாழ எல்லாம் வல்ல புலோலி பசுபதீஸ்வரப் பெருமானை வேண்டுகின்றேன்.

தனது ஆசிரியைத் தொழிலை பதுளை மாவட்டத்தின் பசறை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்றப்பட்ட கணித ஆசிரியராகவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியாகவும் யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்று யா/ விக்கினேஸ்வராக் கல்லூரியிலும், யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரியின் சிறந்த கணித ஆசானாக திகழ்ந்து இரு கல்லூரிகளிலும் இருந்து பொறியியலாளர்கள் உருவாகுவதற்கும் சிறப்பான சேவையை வழங்கிய பெருமக்குரிய அதிபர் திரு.க.தருமலிங்கம் ஓய்வு பெற்றுச் செல்லும் இவ் வேளையில் அவரை வாழ்த்துவதில் அகமகிழ்வடைகின்றேன். யா/விக்கினேஸ்வராக் கல்லூரியில் 15 ஆண்டுகள் (உ/த) பிரிவில் கணித ஆசிரியராக கடமையாற்றி அக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அளப்பெரிய சேவையாற்றிய திரு.க.தருமலிங்கம் 1997 ஆம் ஆண்டு யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரிக்கு மாற்றம் பெற்று வந்த காலம் தொடக்கம் தன்னை அக் கல்லூரியின் வளர்ச்சியோடு ஒன்றிணைத்து நல்ஆசானாக , நல்லதிபராக கடமையாற்றி உடுப்பிட்டி பிரதேச சமூகத்தின் அன்பையும் அரவணைப்பையும் பெற்று இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்வது இக் கல்லூரிக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் பாரிய இழப்பாகவே கருதப்படுகின்றது.

2011ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவில் தேசிய மட்டத்தில் 1ம் இடம் பெற்றதன் மூலம் இக் கல்லூரியை தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் முன்னிலைப்படுத்திய பெருமைக்குரியவர். தேசிய மட்டத்தில் மட்டும் நின்றுவிடாது மாவட்ட மட்டத்தில் 1ம், 2ம் இடங்களையும் பெற்று மாவட்டத்தின் முதன் நிலைப் பாடசாலையாக நிமிர்ந்து நிற்பதற்கு அளப்பரிய சேவையாற்றிய தி.க.தருமலிங்கம் அவர்களை இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

இக் கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்ற போதும் இக் கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்கு தங்களின் பூரண ஆதரவு என்றும் கிடைக்கும் என நம்புகின்றேன்.

ஓய்வு காலத்தில் அமைதியான இன்பமான வாழ்வை குடும்பத்தினருடன் சேர்ந்து நலமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

சி.நந்தகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர்
வடமராட்சி.



# வாழ வழி காட்டிய முதல்வர்

கல்விப் புலத்திலே கணித ஆசானாகத் தடம் பதித்து அதிபராய் பதவியுயர்ந்து மணி விழாக் காணும் திரு.கணபதிப்பிள்ளை தர்மலிங்கத்தை வாழ்த்துவதிற் பெருமிதமடைகிறேன்.

திரு.க.தர்மலிங்கத்தை 1991 ஆம் ஆண்டு கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் கணித ஆசானாக கண்டேன். கணிதமெனும் கடலில் கரைசேர முடியாது தத்தளித்த மாணவர்களின் படகோட்டியாக அவர் மிளிர்ந்தார். வேம்பாகக் கசந்த கணிதத்தை அமிர்தமாக்கிக் கற்பிப்பதில் அவர் வல்லவர். அவரால் உயர்வடைந்த மாணவர்கள் பலர் மெல்லக் கற்கும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கெனத் தனியான பாணியை உருவாக்கிக் கற்பித்துச் சித்தி பெறச் செய்து,ஆசிரியர்களுக்கு வழிகாட்டியவர் திரு.க.தர்மலிங்கம்.

திரு.க.தர்மலிங்கத்தின் நல்லாசிரியப் பணியால் அவர் உடுப்பிட்டி அ.மி கல்லூரி அதிபராகப் பதவியுயர்ந்தார். பதவியை மாணவர்களின் உயர்வுக்காகப் பயன்படுத்திய பெருமை அவருக்குண்டு. கடை மாணவராக்கப்பட்ட பல மாணவர்களுக்கு வழிகாட்டிய பெருமை அவருக்குண்டு பாடசாலைக்கு அச்சுறுத்தலாக இருந்த மாணவர்களை அச்சாணியாக்கி வழி காட்டியவர் திரு.க.தர்மலிங்கம் ஆசிரியனென்பவன் மாணவர்களின் வழிகாட்டியென சிந்தனையைச் செயலாக்கி செழுமை பெறச் செய்தவர். திரு க.தர்மலிங்கத்தின் வழிகாட்டலில் உயர்வு பெற்ற மாணவர்கள் பலர் கடைமாணவராகச் சித்தரிக்கப்பட்ட மாணவர்களின் திறனை இனங்கண்டு மேடையேற்றியவர் திரு க.தர்மலிங்கம் அவரது காலத்திற் பதித்த தேசிய சாதனைகள் எமது பிரதேசத்தையே பெருமை பெற வைத்தது.

திரு க.தர்மலிங்கம் என்றுமே மாணவர் உள்ளங்களில் நிலைத்திருப்பார்.

அவரது ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகிறேன்.

வ:செல்வராசா
வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



# தரமான அதிபர்

நல்ல அதிபர்கள் உள்ள கூடாத பாடசாலைகள் இல்லை, அதேபோல் கூடாத அதிபர்கள் உள்ள நல்ல பாடசாலைகளும் சமூகத்தில் இல்லை என்பர். யார் இந்த நல்ல அதிபர்கள்? இலங்கை அதிபர் சேவைத் தரங்களைச் சேர்ந்தவர்களா? அல்லது அதிபர் ஒருவருக்குரிய ஆளுமைப் பண்புகளைக் கொண்டவர்களா? இவ் வகையில் நல்ல ஒரு அதிபருக்குரிய ஆளுமைப் பண்புகள் வாய்க்கப் பெற்ற ஒரு சிலரில் குறிப்பிடக் கூடியவர் திரு.கணபதிப்பிள்ளை தருமலிங்கம் அவர்கள்.

இவர் அதிபர் பதவியேற்றகாலம் மிகச் சவால் மிகுந்தகாலப்பகுதி, "இன்று இருப்போர் நாளை இல்லை நாளை இங்கு இருப்பதென்ன உண்மை" என வாழ்ந்தகாலம். அக்காலப்பகுதியில் யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் நோக்கிய மிகப் பெரிய சவால் அக்கல்லூரிக்கு அதிபர் ஒருவர் கிடைக்கப் பெறாமை. அவ்வேளை தான் கற்றபாடசாலை, அப் பாடசாலையின் எதிர்காலம், பலரின் அன்பான வற்புறுத்தல்கள் என்பவற்றை கருத்தில் கொண்டு இப் பாடசாலையின் அதிபர் பதவியையேற்றுக் கொண்டார். நீண்ட கல்விப் பாரம்பரியம் மிக்க இக் கல்லூரியின் புகழை மங்காது பாதுகாத்தார்.

இவரது தனிப்பட்ட நல்லகுணப் பண்புகள், நற்பண்புகள் பாடசாலையைச் செவ்வனே நிர்வகிக்க வழிகாட்டினார். பாடசாலை மாணவர் எண்ணிக்கையில் அபரிமிதமான வளர்ச்சிஏற்பட்டது. பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் தேசியம் வரை பேசப்பட்டன. இணைபாடவிதான செயற்பாடுகள் தேசியத்தை தொட்டு நின்றன. பெற்றோரும் பாடசாலைச் சமூகத்தினரும் இவர் மீதுகொண்ட நன் மதிப்பு உயர்ந்து சென்றது. புகழ் பூத்த இக் கல்லூரியின் அதிபர்கள் வரிசையில் இவரும் பேசும் பொருளானார். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி என்ற கலைக் கோயில் இருக்கும் வரை இவரது பெயரும் பேசப்படும் என திடமாக நம்பலாம். இவரது புகழும், இவர் நிர்வகித்த இக்கல்லூரியின் புகழும் மேன்மேலும் தழைத்தோங்க மனமார வாழ்த்துகின்றேன்.

ஆ.ராஜேந்திரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்விவலயம்



# நேர்மைமிக்க அதிபர்

மணி விழாக் காணும் அதிபர் திரு.கணபதிப்பிள்ளை தருமலிங்கம் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். சிறந்த கணித ஆசிரியராக இருந்து பல பொறியியலாளர்களையும் கணித வல்லுநர்களையும் உருவாக்கியது மட்டுமன்றி ஒழுக்கமுள்ள ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் பெரும்பங்கற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரியின் பழைய மாணவனாக, ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக இருந்து இப் பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளார். அதிபராக இருக்கும் காலத்தில் பல துணிச்சலான முடிவுகளை மேற்கொண்டது பாராட்டுக்குரிய விடயமாகும். இவரது நேர்மையும் துணிச்சலும் சிலருக்கு சவாலாகவும் இருந்துள்ளது. சிறந்த ஆசிரியர் ஒருவரால் தான் சிறந்த அதிபராக செயல்பட முடியும். என்பதை தனது சேவையின் மூலம் நிருபித்துள்ளார். பாடசாலை ஆசிரியர்களோடும், மாணவர்களோடும் அன்பாக பழகியதுடன் சமூக இணைப்பையும் ஏற்படுத்தி பாடசாலையின் சிறந்த முகாமையாளராக கடமையாற்றியுள்ளார். யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி க.பொ.த உயாதரப் பரீட்சைகளில் குறிப்பாக கணிதத் துறையில் பல சாதனைகளை ஆண்டு தோறும் நிகழ்த்தி வருவதில் இவரது பங்கு மிகப் பெரியதாகும். 2011ஆம் ஆண்டு கிடைத்த தேசிய மட்ட சாதனை ஓய்வு காலம் முழுவதும் கௌரவத்துடனும் புகழுடனும் வாழ வழி வகுத்தது. இவரது சேவைக்கும் அர்ப்பணிப்புக்கும் கிடைத்த பரிசாகும். அகவை அறுபதில் ஓய்வு பெற்றாலும் கணிதத் துறைக்கு தொடர்ந்தும் சேவையாற்றுவார் என நினைக்கின்றேன். இவரது ஓய்வு காலம் குடும்பத்துடன் சீரும் சிறப்புமாக வாழ இறை ஆசி வேண்டி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

சி.புஸ்பலிங்கம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)
வடமாட்சி கல்வி வலயம்.



# மனித நேய கல்வியலாளர்.............

பிரதிக் கல்விப்பணிப்பாளர்
யோகசுவாமி ரவீந்திரன்
Bsc Dip in Ed.M.ed
யாழ் வலயம்

கல்வி நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் தான் எடுத்த காரியத்தில் துரிதமாக செயற்படுபவராயும்,சிறந்த தேர்ச்சியும்,துணிவும் உடையவராயிருத்தல் அதிபர்க்கழகு இதனையே வள்ளுவர்,

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலம் ஆள்பவர்க்கு" - 983 -

என்றுரைத்தார் -

இவ் வகைப் பண்புகள் நிறைந்த எம் அதிபர் திரு.கணபதிப்பிள்ளை தருமலிங்கம் அவர்களது சேவை நயப்பு மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக பாடசாலைக் கட்டமைப்பின் அனைத்து நிருவாக படி நிலைகளிலும் தனது சேவைத்தடங்களைப் பதித்து அதனூடாக கல்வி உலகில் பல சாதனையாளர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் திரு.தர்மலிங்கம் அவர்கள்

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா பாடநெறியில் எனக்கு அறிமுகமானவர் திரு.தர்மலிங்கம் அவர்கள் அன்றிலிருந்து இன்றுவரை அவரது ஒவ்வொரு அசைவுகளையும் அருகிருந்து ரசிப்பவன் நான்,

எந்தவொரு விடயத்தையும் துல்லியமாக கணித்து செயற்பட்டு வெற்றியீட்டுவது அவருக்கேயுரிய தனித்துவம் எனலாம். யோகர் சுவாமிகள் குறிப்பிடுவது. எப்பவோ முடிந்த விடயம் இவர் குறிப்பிடுவதோ,"ஒரு பிரச்சினையுமில்லை,Don't worry" பட்டமேற்கல்வி காலத்தில் சிக்மா(£) சிக்குவதேயில்லை என கல்வியியல் அளவீடும் மதிப்பீடும், பாடஅலகில் இடர்பட்ட சகபாடிகளுக்கெல்லாம் சிக்மா(£), ஒரு பிரச்சினையே இல்லை, என எடுத்தியம்பி அவர்களையெல்லாம் கரையேற்றிய நல்லர்சான் திரு.தர்மலிங்கம் எந்த விடயத்தையும் சுருக்கக் கூறி விளங்க வைப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். இப் பண்புதான் அவரால் மாணவரிடையே தூய, பிரயோக் கணித எண்ணக்கருக்களை (concepts) துல்லியமாக விதைத்து பெரும் அறுவடை பெற காரணமாயிற்று.

மாணவரிடையே மட்டுமல்ல, தான் பங்குபற்றும் ஆசிரிய வாண்மைச் செயலமர்வுகளில் தனது கற்பித்தல் நுட்பங்கள் மூலம் ஏனைய சக பங்குபற்றுநர்களது வாண்மைவிருத்திக்கு வித்திட்டமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. இது அவரது கற்பித்தலில் நுட்பத்துக்கான பண்புத் தரச்சுட்டி என்றால் அது மிகையில்லை.

இது நல்லாசிரியர், நல்ல அதிபராக பரிணமிக்க முடியும் என்பதற்கான குறிகாட்டி. தற்போதும் அதிபர் பணியென்பது முன்னெப்பொழுதையும் விட சிக்கலானதாக மாற்றம் பெற்றுள்ளது. இது அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொண்ட உண்மை.

அதிலும் செங்கோடின்றி செங்கோலோக்குவது நடைமுறையில் கடினமானது. இதனை வெகு இலாவகமாக, கையாண்டு வெற்றிகண்ட மனிதநேய கல்வியியலாளர் திரு.தர்மலிங்கம் அவர்கள்.

நிறுவனமொன்றின் வளர்ச்சிக்கு தனியாரிடைத் தொடர்பு எந்தளவுக்கு முக்கியமானது என்பதை உணர்ந்து அதனைச் செயன்முறைப்படுத்தி வெற்றிகண்டவர் எமது அதிபர் எனலாம். விட்டுச் கொடுப்பு,சகிப்புத்தன்மை,மனிதாபிமானம் போன்ற அணிகலன்களே அவர்களது தலைமைத்துவ வெற்றிக்கு காரணியெனலாம்.

"பெருமைக்கும் சிறுமைக்கும் அவர்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்பது போல இவரது தன்னிகரற்ற சேவையின் எச்சமே, அதிபர் சேவையின் இறுதிக் காலகட்டத்தில் இவரை தேசியமட்ட சாதனை அதிபராக உயர்த்தியது என்றால் அது மிகையில்லை. இவரது அதிபர் சேவைக்கால க.பொ.த (உ/த), கணித பிரிவு தேசியமட்ட முதலிட சாதனை எமது கல்விப் பாரம்பரியத்தின் ஒரு பண்புத்தரச் சுட்டி இது உலகுள்ள வரை நிலைக்கும் சாதனையாகும்.

பாடவிதான தேசிய சாதனையுடன் இணைப்பாடவிதான தேசிய சாதனையையும் ஒருங்கு சேர வழிப்படுத்திய பெருமைக்குரிய அதிபர் என்றால் இன்றுவரை அந்தப் பெருமை திரு.தர்மலிங்கத்துக்கே உரியதாகும்.

அனுபவம் உள்ளவர்களதும், தம்மினும் பெரியோரதும் நல் ஆலோசனைகளுக்கும்,கருத்துக்கும் மதிப்பு கொடுப்பது நிறுவனமொன்றில் முகாமைத்துவ வெற்றிக்கு வித்திடும். இதனையே வள்ளுவரும்,

"தம்மிற் பெரியோரை தமரா ஒழுகுதல்
வன்மையின் எல்லாந் தலை" (444)

என்று குறிப்பிட்டார்

திரு.தர்மலிங்கம் அவர்களது செயற்பாடுகள் அனைத்திலும் இவ்வகைப் பண்புகள் நிறைந்து காணப்பட்டமையும் அவரது வெற்றிக்கு காரணமெனலாம்.

பாடசாலையானது சமூகத்தின் விம்பம் அது சமூகத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்க வேண்டும். அப்போதுதான் அது சமூகமாற்றத்துக்குரிய களமாகும் இதனை உணர்ந்து செயற்படுத்தியவர் திரு.தர்மலிங்கம் அவர்கள். (இதுதான் பாடசாலை நிகழ்வுகளில் பாடசாலை சமூகமே முன்னின்று பங்களிப்பதன் மூலம் வெளிப்படுத்தப்படுத்துவது கண்கூடு. இது இவரது சமூகம் சார் முகாமைத்துவ திறனுக்கு மேலுமொரு மகுடமெனலாம்).

எமது கல்லூரித்தாயின் அதிபர் வரிசையில் மற்றுமோர் பெருமை சேர் அதிபர் திரு.தர்மலிங்கம் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் எம்முடன் இணைந்து கல்வி சார் செயற்பாடுகளில் பங்களிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன் அவர்தன் குடும்பத்தினருடன் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டி நிற்கிறேன்.

"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு" (963)

**மணி விழா நாயகனுக்கு எனது வாழ்த்துக்கள்..........**

## "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"



கல்வித்துறையில் பல்வேறு தேசிய மட்டத்திலான சாதனைகளுக்கு வித்திட்ட வடமராட்சியின் புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்ற யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அதிபர் மதிப்பிற்குரிய திரு.க.தர்மலிங்கம் அவர்களுடைய மணிவிழா சிறப்பு மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நான் இவரை சந்தித்த காலத்திலிருந்து இன்று வரை பல்வேறு வகையில் தொடர்புபட்டுள்ளேன். அந்த வகையில், 1983ம் ஆண்டு யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் சிறிது காலம் இவரிடம் விஞ்ஞான பாடம் கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதே போல் 1987ம் ஆண்டு கணித பாடமும் கற்றிருந்தேன். இக்காலத்திலே இவர் என்னை மட்டுமல்ல ஏனைய மாணவர்களையும் மிகவும் கவர்ந்த ஆசிரியராக விளங்கினார். அத்துடன் பிற்காலத்தில் எம்மில் பலர் கணித, விஞ்ஞானத்துறைகளில் பல்வேறு சாதனைகளைப்புரிவதற்கு காரணமாகவுமிருந்தார்.

பின்னர் 2000 - 2004ம் ஆண்டு காலப்பகுதியில் நான் இப் பாடசாலையில் கணித பாட ஆசிரியராக இவருடன் சேர்ந்து கடமையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. குருவுடன் சேர்ந்து கற்பித்தலில் ஈடுபடுவதென்பது வித்தியாசமான ஒரு அனுபவம். எல்லோருக்கும் இவ்வாறாக சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இக் காலப்பகுதியில் இவரிடமிருந்து பல்வேறு கற்பித்தல் நுணுக்கங்களைப் பெற்றுக் கொண்டேன். தற்போது ஒரு பெற்றோராக நான் இவருடன் அடிக்கடி தொடர்புகொள்வதுண்டு.

எப்போதும் எல்லோருடனும் நேர்மனத்துடன் அணுகுவதும் (Positive Approach) நகைச்சுவையாக பேசுவதும் எல்லோருடனும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் பேசுவது என்பது அவருக்கே உரிய தனிச் சிறப்பென்பதனை அனைவரும்ஏற்றுக்கொள்வர்.அதுமட்டுமல்லாமல்சிறந்த குடும்பத் தலைவனாக, நற்தந்தையாக, உற்ற நண்பனாக உரியவர்களுடன் பழகுவதுடன் மிகவும் எளிமையான இயல்பினை தன்னகத்தே கொண்டவர்.

இவ்வாறான பல்வேறு வகிபாகங்களில் நான் காண்கின்ற இப்பெருந்தகை, தனது ஓய்வுக் காலத்தை தனது குடும்பத்தினருடன் உடல்,உள ஆரோக்கியத்துடன் நிறைவாக கழித்திட எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ.தமிழ்மாறன்,
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் வலயம்.



# "விழா நாயகனும் விளையாட்டுத்துறையும்"

இன்றைய விழா நாயகனும் அறுபதாவது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கும் யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு.க.தர்மலிங்கம் அவர்களைமனமார வாழ்த்தும் இத் தருணத்தில் எமது அதிபருடன் நான் சேர்ந்திருந்த காலங்களில் அவரின் நற்பண்புகளையும், அவர் கல்லூரியின் விளையாட்டுத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பையும் நினைவு கூர்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது அதிபர் எப்பொழுதும் எளிமையானவராகவே காணப்படுவார். பெயர், புகழை விரும்பாத ஒரு கண்ணியவான். எந்தவொரு விடயத்தையும் நேருக்கு நேர் ஆணித்தரமாகக் கூறக் கூடியவர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். தனக்கென வாழாது பிறருக்காகவே வாழ்பவர் எல்லோருடனும் அன்பாக பழகுபவர். கடமையே தெய்வம் என எந்நேரமும் கூறுபவர். கடவுள் பக்தியில் மூத்தவிநாயகரின் திருநாமத்தை எந்நேரமும் உச்சரிப்பவர்.

இவருடன் நான் இக் கல்லூரியில் கற்பித்த காலங்களில் விளையாட்டுத்துறையின் வளர்ச்சியானது அனைவராலும் பாராட்டப்படக் கூடியதொன்றாகவே இருந்தது. இக்கல்லூரி வரலாற்றில் மிக நீண்ட காலத்தின் பிற்பாடு 2008 ம் ஆண்டு தேசிய மட்டத்தில் இக் கல்லூரி மாணவன் செல்வன். குணசிங்கம் கோபிநாத் நீளம் பாய்தல் நிகழ்வில் வெள்ளிப் பதக்கம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த போது அம் மாணவனுக்கு விழா எடுத்து பாராட்டியதன் விளைவு இன்றுவரை இக் கல்லூரி தேசிய மட்டத்தில் பதக்கங்களைப் பெற்று சாதனை படைக்க வழி கோலியது. சென்ற வருடம் கூட இக் கல்லூரி மாணவன் செல்வன் இரத்தினசிங்கம் நிமலேந்திரா தேசிய மட்டத்தில் பதக்கங்களைப் பெற்றதும் ஆசிய நாடுகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கு பற்றியமையும் இக் கல்லூரி அதிபரின் சிறந்த வழிகாட்டல்களை எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது.

எமது அதிபர் எப்பொழுதும் மாணவர்களோடு தோழமையுடன் பழகும் மனப்பாங்கு கொண்டவர். தன் மீதான ஏனையோரின் தவறான விமர்சனங்களுக்கு அஞ்சாது. பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து சுமூகமான தீர்வைக் காணக்கூடிய ஒரு சிறந்த கண்ணியவான். சில சமயங்களில் விளையாட்டுத்துறையில் ஏற்படும் அதீதமான செலவீனங்களை கூட பொருட்படுத்தாது அச் செலவீனங்களை தானே ஏற்றுக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

இக் கல்லூரியின் கடந்த பதின்னான்கு வருடங்களாக இவருடன் இணைந்து கடமையாற்றியமை எனக்கு இன்றுவரை, என்றுமே ஒரு சிறந்த அனுபவமாகவே எனது உள்ளத்தில் நிறைந்துள்ளது. என்னை முன்னேற்றப்பாதையில் ஏற்றி விட்ட ஏணிப் படிகளில் இவரும் ஒருவர் என இத்தருணத்தில் நினைவு கூர்வதையிட்டு பெருமிதமும், பேரின்பமும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

"அகவை அறுபதில் அடியெடுத்து வைத்து
அன்பு உள்ளங்களை கவர்ந்தெடுத்து
அரிய தத்துவங்களை அறிய வைத்த
அன்புடையோனுக்கு அத்துணை
தெய்வங்களும் ஆசி வழங்கட்டும்!!"

நன்றி

திரு.ச.செல்வக்குமரன்
உதவிக் கல்விப்பணிப்பாளர்
(உடற்கல்வி)
வலயக் கல்வி அலுவலகம்
வடமராட்சி.



# வளமாக வாழ்க

உடுப்பிட்டிப் பிரதேசத்தில் அறிவொளி பரப்பிவரும் யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்கை எடுத்துக் கொண்ட திருவாளர் க.தர்மலிங்கம் அதிபர் அவர்களை ஓய்வு நிலை கருதி வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் எனும் ரீதியில் கல்வியில் மட்டுமல்லாமல் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சாதனை படைக்க வழிகாட்டியாக விளங்கிய வெற்றியாளன்.

தாங்கள் எப்போதும் சரியான பாதையிலே இருக்கின்றோம் என்று நம்புகின்றவர்கள் பொதுவாக எதையாவது சாதிக்கவே செய்கிறார்கள் எனும் அறிஞர் அல்டோஸ் ஹக்கஸ்லியின் கூற்றிற்கு அமைவாக செய்யத் தொடங்கும் எந்தக் காரியத்தையும் சரியான பாதையிலே சென்று தன்நம்பிக்கையுடன் உறுதியாக, தயக்கமின்றி திடமாக சிந்தித்து அர்ப்பணிப்புடன் செயலில் இறங்கி கல்லூரியின் பல வெற்றிகளை ஆற்றிய சிறந்த ஒரு சாதனையாளன்.

இவர் தனது ஓய்வு காலத்தில் பல சேவைகளை ஆற்றி சிறப்புற வாழ என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

திரு சி.நற்குணலிங்கம்
கோட்டக் கல்வி பணிப்பாளர்.
கரவெட்டி.




# சேவையால் உயர்ந்த செம்மல்

திரு கணபதிப்பிள்ளை தருமலிங்கம் அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். கடந்த 35 ஆண்டுகளாக கல்வித்துறையில் பல பதவிகளை வகித்து சிறந்த கல்விப் பணியாற்றியவர் திரு க.தருமலிங்கம் அவர்கள்.

எமது பிரதேசத்திற்குட்பட்ட முன்னணிப் பாடசாலையாக மிளிர்கின்ற யா/ உடுப்பிட்டி அமரிக்கன் மிஷன் கல்லூரியின் உயர்வுக்காய் அயராது உழைத்தவர். இவருடைய காலத்தில் கல்லூரி வளர்ச்சி பெற்று நிமிர்ந்து நிற்பதனைக் கண்டு மகிழ்வடைகின்றோம். நல்லதிபராய் இருந்து நல்லாசிரியர்களை நன்மாணாக்கர்களை நற்சமூகத்தினரை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. நல்ல மனிதருக்கு இருக்க வேண்டிய நற்பண்புகள் அனைத்தும் நிறையப் பெற்றவர். உயர்ந்த மனிதர் சிறந்த அதிபர்.

உண்மையில் ஒருவர் இவ்வுலகில் நன்கு வாழ்ந்தமைக்கு எடுத்துக் காட்டு அவரது சேவையே. கல்வித் தொண்டே கல்விச்சேவையே தனது மூச்சென அயராது உழைத்த திரு க.தருமலிங்கம் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் வளமுடனும் சுகமுடனும் இனிது வாழ எனது நல்வாழ்த்துக்கள்.

ச.சிவசிறி
பிரதேச செயலர்,
கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலகம்.



# வாழ்த்துச் செய்தி

நிலவளமும் நீர் வளமும் நிறையப் பெற்ற வடபுலத்தில் உயர் நிலையில் உள்ள வடமராட்சியின் வளமுள்ள தேசம் உடுப்பிட்டியாகும். இங்கு அமைந்துள்ள யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நல்லதொரு அதிபராக ஆளுமை மிக்கவராக கடமையாற்றி 14.08.2012 இல் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் அவர்களை வாழ்த்துவதில் உளமாற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்விப்புலத்தில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலான சேவைக் காலத்தில் சிறந்த கணித பட்டதாரி ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக சேவையாற்றி எல்லோரினதும் அன்பிற்கும், நன்மதிப்பிற்கும் ஆளாகி இருந்தார்.

கரவெட்டிக் கோட்ட பாடசாலைகள் மத்தியில் மட்டுமன்றி மாவட்ட, மாகாண, தேசிய, மட்டத்திலும் கல்லூரியை உயர் நிலையில் மிளிர வைத்தார். எடுத்து காட்டாக க.பொ.த உயர்தர (2011) கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் சாதனை படைக்கப்பட்டதும் இவரது சேவைக் காலத்திலே ஆகும்.

இவர் தான் கற்ற பாடசாலையிலேயே அதிபராக இருந்து ஓய்வு பெற்றுச் செல்வது பெருமைக்குரிய ஒரு விடயமாகவே உள்ளது. அயற் பாடசலைகளை நேசிக்கும் உயர்ந்த பண்பு இவரிடம் இருக்கும் சிறந்த ஆளுமையாகும்.

14.08.2012 இல் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடனும், சுற்றத்தாருடனும் சந்தோசமாகவும் மகிழ்வுடனும் நீடு வாழ எல்லாம் வல்ல கரணவாய் வடக்கு மூத்த விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

வாழ்த்துபவர்.
திரு.சு.கிருஸ்ணகுமார்
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
அதிபர்



# பழைய மாணவர் சங்க தலைவரின் வாழ்த்து

திரு க.தருமலிங்கம் அவர்கள் எங்கள் கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வு பெறும் இந் நாளில் அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இவர் உப அதிபராக இருந்த காலத்தில் கல்லூரியில் கட்டடங்கள் உயர்ந்தன அதிபராக வந்த பின் பரீட்சைப் பெறுபேறுகளிலும் கல்வி சாரா கற்றல் செயற்பாடுகளிலும் பெரும் சாதனைகளும் வெற்றிகளும் கல்லூரிக்குக் கிடைத்தன. கல்லூரியின் புகழும் மதிப்பும் அதிகளவு உயர்த்தப்பட்டது. இதற்கு அவரது அயராத தன் நலமற்ற உழைப்பும் சிறந்த ஆளுமையுடன் கல்லூரியை நிர்வகித்ததும் ஆகும்.

மனிதாபிமானம் என்னும் பண்பை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களுடன் நல்ல உறவுமுறையைப் பேணி கல்லூரியின் பல்வேறு செயற்பாடுகளை ஆசிரியர்களுக்கு அதீத நம்பிக்கையுடன் பகிர்ந்தளித்து தனது நிர்வாகத் திறனை இலகுவாக்கியவர்.இதனால் ஆசிரியர்களின் சிறந்த ஒத்துழைப்பு அவருக்கு எப்போதும் கிடைத்தது. மாணவர்களுக்கு கண்டிப்புக் கலந்த பயனுள்ள அறிவுரைகளை வழங்கி வந்தார். மாணவர்களின் உடனடித் தேவைகளை உடனுக்குடன் வழங்கினார். ஏனைய கல்லூரிச் சமூகத்துடன் பழைய மாணவர்களுடன் நலன் விரும்பிகளுடன் அன்பாகப் பண்பாகப் பழகி அவர்களுக்கு தேவைப்பட்ட விடயங்களை உடனுக்குடன் வழங்கினார். செய்து கொடுத்தார். கல்வி அதிகாரிகளுடன் சிறந்த முறையில் தொடர்புகளை ஏற்படுத்தி கல்லூரிக்குத் தேவையான உதவிகளைப் பெற்றார். பெற முயற்சித்தார். இக் கல்லூரியின் பழைய மாணவன் இளைப்பாறும் காலத்தில் கல்லூரிப் ப.மா.ச உடன் இணைந்து கல்லூரியின் வளர்ச்சிக்காக மேலும் பாடுபடுவார். என நம்பினால் அது வீண் போகாது.

தனது ஓய்வு காலத்தை அதிக பயன் தரக் கூடிய செயல்களில் ஈடுபட்டு நல்ல தேக ஆரோக்கியத்துடனும் நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துவதில் அதிக மனத்திருப்தியையும் மகிழ்ச்சியையும் அடைகிறேன்.

திரு க.சண்முகசுந்தரம்
தலைவர்,
உடுப்பிட்டி அ.மி கல்லூரி,
பழைய மாணவர் தாய்ச் சங்கம்.



## சேவை நலனைப் பாராட்டி
## வாழ்த்துகின்றோம் ! வாழ்க பல்லாண்டு !

கடந்த சில வருடங்களாக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய திருமிகு.க.தர்மலிங்கம் அகவை அறுபதை அடைவதனால் ஓய்வு நிலையில் செல்லப் போவதாக அறிந்த செய்தி மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னையும் கல்லூரியையும் தயாரிக்க வேண்டிய சூழ்நிலையில் தான் அதிபர் திரு.க.தர்மலிங்கம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபரின் கடமைகளை ஆற்ற வேண்டியிருந்திருக்கும் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை என்பதோடு குறுகிய காலத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் என பல தரப்பட்டவர்களோடும் சுமூகமான நல்லுறவைப் பேணி கல்லூரியை நெறிப்படுத்தி மாணவர்களை வழிப்படுத்தியவர் என்பதனையும் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்.

போதியளவு ஆசிரியர்களின்மை - பௌதீக வளப்பற்றாக்குறை - ஆகியவற்றுக்கு மத்தியில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தி பொதுப்பரீட்சைகளான க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த), மற்றும் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றில் சிறப்பான பெறுபேறுகளை பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றியவர். குறிப்பாக கடந்த வருடம் க.பொ.த (உ/த) பரீட்சையில் தேசிய மட்டத்தில் சாதனை ஏற்படுத்தியதும் பாராட்டுக்குரியது.

பாடவிதான செயற்பாடுகளோடு இணைப்பாடவிதான செயற்பாடுகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. விளையாட்டுப் போட்டிகளிலும் சாதனைகள் நிலைநாட்டப்பட்டதோடு மாணவர்கள் சாரணியம் கலை கலாசார நிகழ்வுகளிலும் பங்கேற்றனர். அத்துடன் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இயங்கிக் கொண்டிருக்கும் சங்கங்களுடன் நல்லுறவு பேணி நிதியையும் பொருட்களையும் பெற்று தேவைகளை பூர்த்தியாக்கியமையும் அதிபர் தருமலிங்கத்தின் சேவைகளில் குறிப்பிடக்கூடியவை. கனடா, சுவிஸ், லண்டன், கொழும்பு ஆகிய இடங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் பழைய மாணவர் சங்கக் கிளைகள் மூலம் காணி கொள்வனவு, கல்லூரி முகப்பு அமைத்தது, பல்லூடக அறைக்கான கதிரைகள் பெற்றுக் கொண்டது, அத்தியாவசிய குடிநீர் வழங்க ஆவன செய்தது இவற்றில் சில.... இவற்றுக்கு அப்பால் இன்னும் பல.

அதிபர் திரு.க.தர்லிங்கத்தின் சேவைகளை பாராட்டி இன்னும் பல்லாண்டு இவரும் குடும்பத்தினரும் நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

எஸ்.தில்லைநடராசா
தலைவர்,
பழைய மாணவர்சங்கம்,
கொழும்புக் கிளை.

# *International Forum*
*of*
# UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE & GIRLS' COLLEGE PPA

*International Co-ordinator*
**Dr. T. Vasanthakumar**
*Canada*

*International Representatives:*
**Mr. S. Thillainadarajah**
*Sri Lanka*

**Mr. S. Kanapathipillai**
*Switzerland*

**Mr. R. Jeyarajah**
*London, UK*

**Dr. S. Jeyaseelan**
*Australia*

**Dr. Geetha Raguparan**
*United States of America*

**Mrs. Selvarani Shanthakumar**
*France*

**Mr. V. Alagalingam**
*Germany*

**Mr. N. Nithiyananthan**
*Norway*

**Mr. T. Vijayakumar**
*Newzealand*



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபராகக் கடமையாற்றி, இன்று மணிவிழாக்காணும் நாயகனும், எனது நெருங்கிய நண்பருமாகிய திரு.க.தர்மலிங்கம் அவர்களின் மணிவிழா மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நாட்டிலேற்பட்ட அனர்த்தங்களினால் எமது கல்லூரிகள் நிலைகுலையும் நிலையிலிருந்த போது, கனடாவில் உதயம்பெற்ற பழைய மாணவர்சங்கம் இன்று கொழும்பு, சுவிஸ், இலண்டன், சிட்னி (அவுஸ்திரேலியா), மெல்போர்ன் (அவுஸ்திரேலியா), நியூசிலாந்து என விரிவடைந்து, தமது பாடசாலைகளுக்காக தம்மாலியன்ற உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும், பாடசாலையின் வளர்ச்சி ஒன்றையே தனது குறிக்கோளாகக் கொண்டு, இச்சங்கங்களோடு இணைந்து பணியாற்றிய பெருமைக்குரிய அதிபராக திரு. தர்மலிங்கம் திகழ்கின்றார்.

அதிபர் தர்மலிங்கம் பார்வைக்கு எளியவர், பழகுவதற்கு இனியவர், காலை, மாலை, சனி, ஞாயிறு, விடுமுறை தினங்கள் என்று பாராமல், அல்லும் பகலும் எம்முடைய பாடசாலையின் தரத்தை எல்லாத்துறைகளிலும் உயர்த்துவதற்கு அரும்பாடுபட்டு உழைத்தவராவார். இவருடைய காலத்திலே, கல்வித்துறையிலே எமது கல்லூரி உயர்தர வகுப்புப் பரீட்சைப் பெறுபேறுகளில் அகில இலங்கை ரீதியிலும், யாழ்மாவட்ட ரீதியிலும் முதலிடத்தைப் பெற்றமை எமது பாடசாலை வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு சரித்திர நிகழ்வாகும்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வரலாற்றில் இடம்பெறும் அதிபர் திரு. தர்மலிங்கம் அவர்கள், தொடர்ந்தும் தமது பங்களிப்பினை எமது கல்லூரிச் சமூகத்திற்கு வழங்கவேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுத்து, அவர்தம் மணிவிழா சிறக்க, அமெரிக்கன் மிஷன் கல்லூரி, மகளிர் கல்லூரிகள் இணைந்த சர்வதேச ஒன்றியம் சார்பில் வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அன்புடன்

த. வசந்தகுமார்

கலாநிதி. த. வசந்தகுமார்
சர்வதேச ஒருங்கிணைப்பாளர்
(உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

*85, Havagal Crescent, Markham, Ontario L3P 7G6 Canada Tel: 905.415.2244*
*www.uamcollege.com, www.ugirlscollege.com Email : info@uamc.ca*

# UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE & GIRLS' COLLEGE PPA SWITZERLAND

1

Zürich

**Patron**
*Mr. S.Mahalingam*

**President**
*Mr.R.Mathanakirirajah*

**Vice President**
*Mr.Y.Arun*

**Secretary**
*Mr.C.Ravichandran*

**Assist. Secretary**
*Mr. K. Jeyaseelan*

**Treasurer**
*Mr.N.Pushparajah*

**Central Committee**
*Mr. S Kanapathypillai*
*Mr. V.Ratnakumar*
*Mr. P.Selvasothy*
*Mr. V.Gnaneswaran*
*Mrs. Nanthimalar Tharmakulasingam*
*Mrs. Parameswary Theivendram*

**Committee Members**
*Mr.T.Paramasivam*
*Mr.Y.Gobu*
*Mr.T.Sivam*
*Mr.N.Yoganathan*
*Mrs.Vimala Sivasubramaniam*
*Mrs.Jegatheeswary Kathiramalai*
*Mrs.Manohary Theverajah*

**Auditor**
*Mr.I.Sivasothylingam*
*Mr. P.Jeganathan*

**Co-ordinater**
*Mr.K.Mathanakirirajah*
*Mr.K.Nirmalathasan*
*Mr.Y.Arun*

## அதிபர் திரு தர்மலிங்கம் அவர்களிற்கு எமது சங்கம் சார்பாக மனப்பூர்வமான பிரியாவிடை வாழ்த்துக்கள்

நமது பாடசாலை வரலாற்றில் எமது பாசத்திற்கும், மதிப்பிற்கும் உரிய திரு தர்மலிங்கம் அதிபர் அவர்களின் வருகை என்பது காலத்தின் கட்டாயமாக, தவிர்க்க முடியாதது ஒன்றாக கல்வித்தாய் சரஸ்வதி எமது கல்லூரியின் அதிபர் அரியணையில் ஏற்றினாள். அந்த அரியணை வெல்வெட்டாலோ, சொகுசாகவோ அமைக்கப்பட்டதல்ல. மாறாக கரடுமுரடாக அமைந்திருந்தது. காரணம் அதிபர் அவர்கள் பதவி ஏற்ற காலப்பகுதியாகட்டும் சரி, பிற்பட்ட காலப்பகுதியாகட்டும் சரி எமது நாட்டில் குழப்பகரமான, இஸ்திரத்தன்மையற்ற ஒரு காலப்பகுதியாகவே நகர்ந்திருந்தது. தற்போதும் நகர்ந்து கொண்டிருக்கின்றது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தொழில் தர்மம் வழுவாது அவருடைய செயற்பாடுகள் அமைந்திருந்தன. அதற்குப் பல எடுத்துக்காட்டுகளும் உள்ளன.

பழைய மாணவர் சங்கச் சுவிஸ்கிளை வளர்ச்சி கண்ட காலப்பகுதியும், அதிபர் அவர்கள் கடமையாற்றிய காலப்பகுதியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை. எமது சங்கம் வளர்ச்சியும், உத்வேகமும் பெற மிகவும் உறுதுணையாக இருந்தது மட்டுமல்லாது சுவிஸில் சங்கத்தால் முதன்முதலில் நடாத்தப்பட்ட வானவில் கலைவிழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தது மட்டுமல்லாது பல அறிவுரைகளையும், பாடசாலை சார்ந்த பல செயற்திட்டங்களையும் எம்முன் வைத்துச் சென்றார். அதற்கமைய காலங்காலமாக கம்பீரமாக காட்சியளிக்கப் போகின்ற பாடசாலையின் பிரதான நுளைவாயிலை அமைக்கும் ஓர் அரிய செயற்திட்டத்தை தாய்ச்சங்கத்தின் ஊடாக வழங்கினார். இன்று பிரதான நுளைவாயில் அமைக்கப்பட்டு பழைய மாணவர் சங்கச் சுவிஸ்கிளைக்கு பெருமை சேர்த்துள்ளதோடு பாடசாலையும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

அத்துடன் நின்று விடாது நூற்றாண்டு வரலாறு கொண்ட எமது பாடசாலையில் குடிநீர் குறை என்பது நீண்ட காலமாக தொடர்ந்து வருவதால் குடிநீர் வழங்கலுக்கான செயற்திட்டத்தை தாய்ச்சங்கத்தினூடாக எம்முன் வைத்தார். அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட எமது சங்கம் இந்த அரிய வாய்ப்பையும் செயற்படுத்துவதாக உறுதியளித்திருந்தது. அதிபர் அவர்களும் நீண்ட காலமாக பல வழிகளிலும் முயற்சித்து பின்னர் பாடசாலையின் அருகில் அமைந்திருக்கும் காளித்தாயின் ஆலயத்தின் அருகில் இருந்து குடிநீரைப் பெறுவதற்கு சங்கத்தின் உதவியைப் பெற்று ஓரளவு அக்குறையை நிவர்த்தி செய்தார். இருந்தும் எமது சங்கம் உறுதியளித்ததற்கு இணங்கவும், குடிநீர் குறை பூரணமாக நிவர்த்தி செய்யப்படவேண்டும் என்பதற்காகவும் எமது சங்கத்தை நிறுவுவதற்கு ஆணிவேராக இருந்தவரும், கடந்த காலத்தில் தலைவராக இருந்தவரும் எல்லோராலும் அன்பாக கணாமாஸ்டர் என அழைக்கப்படும் திரு கணபதிப்பிள்ளை அவர்களின் உந்துதலுக்கமைய துளைகிணறு ஒன்று பாடசாலை வளாகத்திற்குள் அமைக்கப்பட்டபோது! "நல்ல உள்ளங்கள் ஒன்று சேரும் போது நல்லதே நடக்கும்" என்ற நற்சிந்தனைக்கமைய அது நன்னீராகவே அமைந்துவிட்டது. விளையாட்டு மைதானத்திலும் தண்ணீர வசதி இன்மையால் அங்கும் ஒரு துளைகிணறு அமைத்த போது அதுவும் நன்னீராகவே ஊற்றெடுத்தது. அதை எமது மைதானத்திற்கு மட்டுமின்றி அயலில் வசிப்பவர்கள் அருந்துவதற்காகவும் ஓர் பிரத்தியேக குழாயை அமைத்துக் கொடுத்து எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இதன் மூலம் தனது பதவிக் காலத்தில் நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த குடிநீர்க் குறையை குறைந்த செலவில் நிவர்த்தி செய்ததுடன் இச்செயற்திட்டத்தை எமது சங்கத்தின் உதவியுடன் செயற்படுத்தியதன் மூலம் எமது சங்கம் மீண்டும் புகழும், பெருமிதமும் அடைந்தது.

*Address: Vanavil, Postfach 8660, 8036 Zürich. President: 0798882700, Secretary: 0798303377*
*www.uduppiddy-amc-gs-ppa.ch, E-mail:- g.velupillai@sunrise.ch*

**UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE**
**&**
**GIRLS' COLLEGE PPA**

**SWITZERLAND**

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து வசதி குன்றிய சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்களின் பிரத்தியேக கற்றலுக்கான உதவியை வழங்க சங்கம் முடிவு செய்திருப்பதாக தாய்ச்சங்கத்தின் ஊடாக தெரியப்படுத்திய போது அதிபர் அவர்கள் அதற்குரிய வழிமுறைகளை அமைத்துதவியதால் அம்மாணவர்கள் இன்று பயன் அடைந்துகொண்டிருக்கின்றார்கள்.

ஒரு பாடசாலையில் கற்பிக்கும் திறன், நிர்வாகம், பெற்றோர்களுடன் மாணவர் தொடர்பான தகவல் பரிமாற்றம், பாடசாலை சார்ந்த விழாக்கள், இவை அனைத்தும் அப்பாடசாலை வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் மிக முக்கிய காரணிகள். அதிபர் அவர்கள் இவை அனைத்திலும் முழு ஈடுபாட்டுடன் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு தற்கால நவீன உலக ஓட்டத்துடன் பயணிக்கும் இன்றைய தலைமுறை மாணவர்களுடன் அதிபராகவும், அதேசமயம் ஒரு நண்பராகவும் பழகும் பாங்கு என்பது அதிபர் எனும் வட்டத்திற்குள் நின்றுவிடாது ஒரு தொலை நோக்குச் சிந்தனை உடைய சிந்தனையாளராகவே அவரைப் பிரதிபலிக்கின்றது.

எமது கல்லூரி மாணவர்கள் விளையாட்டுத்துறையில் தேசிய ரீதியில் பதக்கங்கள் வென்றமையும் இவை எல்லாவற்றிற்கும் மேலாக எமது கல்லூரி வரலாற்றில் முதல் முறையாக 2011ம் ஆண்டு க. பொ. த உயர்தரப்பரீட்சையில் எமது கல்லூரி மாணவர் தேசிய, மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தில் தேர்ச்சி பெற்றமை ஊடாக அதிபர் அவர்களின் அர்ப்பணிப்புடனான செயற்பாடு வெளிக்கொணரப்பட்டுள்ளது. இதன் மூலம் நூற்றாண்டு கால வரலாறு கொண்ட எமது கல்லூரி வரலாற்றில் திரு தர்மலிங்கம் எனும் மனிதநேயமுள்ள, சுயநலமற்ற, விமர்சனங்களை இன்முகத்துடன் ஏற்று அவற்றைத் தன் சுயவிமர்சனத்திற்கு உட்படுத்தி பகுத்துப்பார்க்கும் மனிதரின் நாமம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுவிட்டது.

கல்வித்தாய் சரஸ்வதியின் கடாச்சம் பெற்று கல்வி கற்று, கற்றுத்தேறிய பின் கல்வித்தாய்க்கே பணிபுரியும் ஆசிரியப்பணி என்பது மிகப்பேறானது, போற்றத்தக்கது. அவரை எமது கல்லூரி அதிபர் அரியணையில் ஏற்றிய கல்வித்தாய் சரஸ்வதி இன்று தனக்காற்றிய கல்வித்தொண்டிற்காக அவருக்கு மகுடம் சூட்டி அழகு பார்த்து ஓய்வு கொடுக்கின்றாள். இத்தருணத்தில் அதிபர் அவர்களும், அவரது குடும்பமும் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் நீண்ட ஆயுளுடன் வாழவேண்டுமென பழைய மாணவர் சங்கச் சுவிஸ்கிளை நிர்வாகமும், பழைய மாணவர்களும் இறைவனை வேண்டுவதோடு விழாமலரில் அதிபர் தொடர்பாக எமது நினைவுகளையும் பதிவுசெய்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு சங்கம் சார்பாக நன்றி பாராட்டுகின்றோம்.

உடுப்பிட்டி அ. மி கல்லூரி, மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கச்
சுவிஸ்கிளை நிர்வாகம்

*Address: Vanavil, Postfach 8660, 8036 Zürich. President: 0798882700, Secretary: 0798303377*
*www.uduppiddy-amc-gs-ppa.ch, E-mail:- g.velupillai@sunrise.ch*

பண்டிதர் திரு. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை கல்வி வளர்ச்சிக்கான அறக்கட்டளை
Pandit Mr. Sinnathamby Veluppillai Charity of Educational Support



SVCES



நிறுவனர்
வே.ஞானேஸ்வரன்

## பண்டிதர் திரு சின்னத்தம்பி வேலுப்பிள்ளை அறக்கட்டளை சார்பாக வாழ்த்துச் செய்தி

அதிபர் திரு தர்மலிங்கம் அவர்கள் பதவி வகித்த காலப்பகுதில் நமது பாடசாலையின் வளர்ச்சியும், மாணவர்களின் கல்வி மேம்பாடும் மிகவும் சிறப்பாகவும், எடுத்துக்காட்டாகவும் இருந்தது. ஓர் எளிமையான மனிதராக, அனைவரையும் அரவணைத்து பாடசாலையின்பாற் ஈர்த்து ஆளுமையுடன் கடமையாற்றினார். எங்கள் கல்லூரியில் கற்ற பழைய மாணவர்கள் பலர் தங்களால் இயன்ற உதவிகளை பாடசாலையின் வளர்ச்சிக்கு வழங்கி வருகின்றனர். அதற்கு முக்கிய காரணம் அதிபர் அவர்கள் மற்றவர்களை அணுகும் முறையும், பழகும் பண்பும். அதுமட்டுமல்லாது உதவிகள் தவறான வழியில் செல்லாது சிறந்த முறையிலும், வீண்விரையம் இன்றியும் பயன்படுத்தப்படுவதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்தார். மற்றவர்களைத் தர்மத்தின்பாற் ஊக்குவிப்பதனாற் தானோ என்னவோ தர்ம, லிங்கம் எனும் நாமம் பெற்றார்.

கடலில் கனதிகளைச் சுமந்து செல்லும் கப்பலைச் சரியான திசையில் செலுத்தி அது சென்றடைய வேண்டிய இடத்தை அடைவதற்கு தலைமை மாலுமியின் பணி எவ்வளவு முக்கியமோ அதேபோல தரையில் கல்வி எனும் செல்வத்தைச் சுமந்து நிற்கும் கல்விக்கூடத்தைச் சரியான முறையில் ஆளுமையுடனும் அதேசமயம் புரிந்துணர்வுடனும் நிர்வகித்து செல்வது அதிபரின் மிக முக்கிய கடமையாகும். அதை எங்கள் அதிபர் அவர்கள் சிறப்பாக செய்து முடித்துள்ளார். அதன் அருமையான வெளிப்பாடுகள் அவருடைய பதவிக் காலத்தில் கல்லூரி தேசிய ரீதியில் விளையாட்டுத்துறையிலும், கல்வியிலும் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. குறிப்பாக கடந்த வருடம் 2011ல் க. பொ. த உயர்தரத்தில் தேசிய, மாவட்ட ரீதியில் முதலிடத்தில் தேர்ச்சி பெற்றமை இதுவே முதற்தடவையாகும். இதன் மூலம் அதிபர் அவர்கள் கல்லூரி வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்.

அதிபர் அவர்கள் தன்னுடைய பதவிக்குள் நின்றுவிடாது எல்லோருடனும் நெருங்கியும், மற்றவர்களை அனுசரித்து புரிந்துணர்வுடன் மனிதநேயமுள்ள மனிதராக பழகுவதையும் 2010 ஆண்டு பரிசளிப்பு விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்த போது கண்டு வியப்படைந்தேன். எங்கள் தகப்பனார் 32 வருடங்கள் ஆண்கள் பாடசாலையில் கற்பித்தது மட்டுமல்லாது, கல்லூரி வளர்ச்சிக்காகவும் முக்கிய பங்காற்றியிருந்தார். அதற்கமைய அன்னாரின் நினைவாக அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக எம்மால் இயன்ற மிகச்சிறிய உதவிகளை கல்வி சார்ந்து செய்ய முற்பட்டபோது அதற்குரிய வழிமுறைகளை அமைத்துத் தந்தது மட்டுமல்லாது அவ்வுதவிகள் சரியான முறையில் சென்றடையவேண்டும் என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்தார். எமக்கது நம்பிக்கையையும், மனத்திருப்தியையும் தந்தது.

சமூகமேம்பாட்டிற்காக அயராது உழைத்த ஒரு நல்ல மனிதரை வாழ்ந்து கொண்டிருக்கும் ஏககாலத்தில் நாம் பாராட்டுவதே சாலச் சிறந்தது காரணம் அவர் தம் வயது முதிர்ந்த ஓய்வுக் காலத்தில் சாய்மனைக் கதிரையில் சாய்ந்து இந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் படிக்கும்போது "ஆகா என் வாழ்நாளில் சமூகத்திற்காக நானும் சிலவற்றை சாதித்திருக்கின்றேன்" என நினைக்க விழியோரத்தில் கண்ணீர்த் துளிகள் உருண்டோடி வந்து மார்பில் பட்டு இதயத்தை குளிரச்செய்யும். அது அவர்களின் ஆயுள் நீடிப்பாக, தொடர்ந்தும் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு ஓர் மாத்திரையாக அமையும்.

இத்தருணத்தில் அதிபர் அவர்களும், அவர்தம் பாரியாரும், பிள்ளைகளும் ஆரோக்கியமுடனும், மகிழ்ச்சியுடனும் பல்லாண்டுகாலம் வாழ்கவென மனப்பூர்வமாக வாழ்த்துவதோடு இந்த மலரினூடாக அதிபர் அவர்களை வாழ்த்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்கு மிக்க நன்றி.

பண்டிதர் திரு சின்னத்தம்பி வேலுப்பிள்ளை குடும்பம்

Mr. Veluppillai Gnaneswaran, Imayanan, Uduppiddy



# தன்னலம் அற்ற சேவையாளன்

வடமராட்சியில் புகழ் பூத்த கல்லூரிகளில் ஒன்றான யா/உடுப்பிட்டி அமரிக்கன் மிஷன் கல்லூரியின் புகழை மேலும் உயர்த்திய பண்பாளன் எமது கல்லூரி அதிபர் திருக. தர்மலிங்கம் தன்னுடைய தன்னலமற்ற சேவையால் இக் கல்லூரியில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக உயர்ந்து இன்றுடன் ஓய்வு பெறுகின்றார். நாம் இருவரும் யா/தாமோதரம் வித்தியாலத்தில் ஒன்றாகக் கற்ற போது நல்லொழுக்கம் மிக்க மாணவராக இருந்தார். தன்னுடைய முயற்சியால் உயர்ந்து எமது கல்லூரியின் புகழை மேலும் மிளிரச் செய்த எம் அதிபரை வாழ்த்துவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். பிரதி அதிபர் என்ற ரீதியில் அவருடன் ஒன்றாக இருந்து பணியாற்றியது மகிழ்ச்சியைத் தருகின்றது. மற்றவர்களின் மனநிலையைப் புரிந்து சேலையாற்றிய பண்பாளன் நிர்வாக ரீதியில் என்னுடைய கருத்துக்களுக்கும் மதிப்பளித்து கல்லூரி நிர்வாகத்தை திறம்பட நடாத்தியவர். எப்போதும் மாணவர்களுக்காகவே நின்று செயற்படும் நேர்மையான அதிபர். அவர் தன்னுடைய ஓய்வுக் காலத்தில் தன் மனைவி, பிள்ளைகளுடன் சிறப்புற்று இருக்க எல்லாம் வல்ல இறைவனை மனதார வேண்டுகின்றேன்.

திருமதி. வ. கைலயங்கிரிச் செல்வம்
பிரதி அதிபர்,
யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி




# தான் கற்ற கல்லூரியை உயர்த்திய பண்பாளன்

எமது கல்லூரியின் மகுட வாசகம். "இது எனது பாடசாலை, பாடசாலையால் நான் பெருமையடைய வேண்டும், என்னால் பாடசாலை பெருமையடைய வேண்டும்" என்பதாகும். இம் மகுட வாசகத்திற்கு அமைவாக தனது திறமையான நிர்வாகத்தால் கல்லூரியின் புகழை தேசமெல்லாம் பேச வைத்தவர் எம் கல்லூரி அதிபர் திரு.க.தருமலிங்கம் ஆவார்.

பொதுவாக கூறுவார்கள் ஒருவனுடைய உண்மையான குணத்தை அறிய வேண்டுமாயின் அவனுக்கு ஓர் உயரிய பொறுப்பான பதவியொன்றை கொடுத்துப் பார் அப்பொழுதுதான் அவனுடைய அதிகார ஆசை வெளிப்பட்டு உண்மையான குணம் வெளிப்படும் என்று ஆனால் எமது கல்லூரி அதிபரோ இதற்கு நேர் மாறாக நிலை உயர உயர பணிவு மிகக் கொண்டு கல்லூரியை மிகத் திறமையாக நிர்வாகம் செய்து தேசிய ரீதியில் புகழ்பெற செய்தவர். இவருடன் இணைந்து பணியாற்றியவன் என்ற வகையில், பல நற் பண்புகளை என்னால் மறக்க முடியவில்லை. அடக்கம், எளிமை, நேர்மை ஆசிரியர்களை ஊழியர்களை மாணவர்களை மிகப் பண்பாக நடாத்துதல், சமூகத்துடன் அன்னியோன்னியத் தொடர்பு, தற்துணிவு அதிபர் என்ற அகங்காரம் இன்றி யாரும் எளிதில் தொடர்பு கொள்ளக் கூடிய மனிதாபிமானம், கடின உழைப்பு, சுறுசுறுப்பு, மற்றவர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளும் தன்மை, ஜனநாயகப் போக்கு, மாலை மரியாதையை விரும்பாத தன்மை என்பன அவரிடம் காணப்பட்ட மிகச் சிறந்த பண்புகள் ஆகும். அவருடைய அடக்கத்திற்கு கிடைத்த பரிசே 2011 க.பொ.த உயர்தரத்தில் தேசிய ரீதியில் நமது கல்லூரி மாணவன் முதலிடம் பெற்றமை ஆகும். பாடசாலையின் பெற்றோர்கள் எளிமையான அதிபரை இழக்கின்றோம் எனக் கவலை கொள்கின்றனர். ஆசிரியர்களோ தங்களது மனநிலையைப் புரிந்து பண்பாக நடாத்தும் ஓர் தற்துணிவுள்ள அதிபரை இழக்கின்றோம் என கவலை கொள்கின்றனர். மாணவர்களோ தங்கமான அதிபரை இழக்கின்றோம் என்று வேதனைப்படுகின்றனர். அந்தளவிற்கு தன் நிலை விட்டு மிகக் கீழே இறங்கி எல்லோருடனும் மிக அன்னியொன்னியமாக பழகிய எம் கல்லூரி அதிபர் இன்றுடன் ஓய்வு பெறுகின்றார். சாதனை நாயகனான எம் அதிபர் அவருடைய ஓய்வுக் காலத்தில் தேக ஆரோக்கியத்துடன் சிறப்பாக வாழ அவர் வணங்கும் மூத்த விநாயகரை மனதார வேண்டுகின்றேன்.

திரு.ஆ.விமலராஜா
பிரதி அதிபர்,
யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி



# சென்நெறியாளன்

பல்வகைச் சிறப்புக்களையும் பெருமைகளையும் கொண்ட உடுப்பிட்டிக் கிராமத்தின் உயர்பண்பாட்டின் சின்னமாக விளங்கும் எம் கல்லூரியினைக் கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாட்டிலும் தேசியநிலைக்குக் கொண்டுவந்தபெருமை எம் அதிபரின் 15 ஆண்டுகளாக உழைத்த உழைப்பிற்கான அறுவடை எனலாம்.

ஆசிரிய குழாத்தினரை ஒன்றிணைத்து அவரவர் அறிவு, திறன், மனப்பாங்குகளுக்கேற்ப பொறுப்புக்களையும், கடமைகளையும் வழங்குகின்ற நுட்பத்தையும் மாணவச் செல்வங்களின் கல்வியினை நவீனகாலத்திற்கு ஏற்றாற் போல் வழியமைத்துக் கொடுக்கும் தன்மையையும்,அனைவருடனும் மிக எளிமையாகவும் தோழமையோடும் பழகும் இயல்பினையும் எம் கல்லூரிச் சமூகம் மறக்கமுடியாது.


எமது கல்லூரியின் வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு தனது பணிதனைச் செவ்வனே செய்து தனது சேவைக்காலத்தில் அசிரியர்களாகிய எமது நலன்களில் அக்கறை கொண்டு வழிகாட்டி அறிவுரை கூறி எம்மைவழி நடத்திய எம் அதிபர் தனது ஓய்வுக்காலத்தில் குடும்பத்துடன் நல்லாரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ இறைவன் அருள் புரியவேண்டும் என ஆசிரியர் நலன்புரிக் கழகம் சார்பில் வாழ்த்துகிறேன்.

திரு.சி.லிங்கனதாஸ்

தலைவர்

ஆசிரியர்நலன்புரிக் கழகம்

யா/உடுப்பிட்டிஅ.மி.கல்லூரி.



# அதிபர்களுள் மாறுபட்டவர்

எமது அதிபர் திரு.கணபதிப்பிள்ளை தருமலிங்கம் அவர்கள் 15.08.2012 அன்றுடன் தனது சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். எனும் கசப்பான செய்தி என் நெஞ்சைய கனதியாக்குகிறது. 01.08.1997 அன்று எமது கல்லூரியில் ஆசிரியராக கடமையேற்றதிலிருந்து இன்று வரை ஒவ்வொரு ஆசிரியர்களினதும், ஒவ்வொரு மாணவரினது மனதிலும் நீங்கா இடம்பெற்றவர். எமது அதிபர் மிக எளிமையான தன்மையும், சிறந்த மனிதாபிமான பண்புகளும், எல்லோரையும் சமமாக மதிக்கும் தன்மையுமே இதற்கான காரணம் என சுருக்கமாக கூறிவிட முடியும்.

ஒரு ஆசிரியராக அவர் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் கணிதத்தை ஐயம் திரிபுபட கற்பித்த பெருமைமிக்கவர். மாணவர்களின் சந்தேகங்களை மிகவும் சாதுரியமான முறையில் தீர்த்து வைப்பார். நான் உயர்தரம் கற்ற காலத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் அவரின் கற்பித்தல் தொடர்பில் காலாபித்திருப்பதை நான் கேள்வியுற்றிருக்கின்றேன். எமது கல்லூரியில் கணிதப் பிரிவில் பல சாதனைகளைப் படைக்க வித்திட்டவர் என்ற பெருமையும் அவரையே சாரும் 20.12.2007 இல் அதிபராக கடமையேற்றதிலிருந்து வேலைப்பளு காரணமாக தனது கற்பித்தல் பணியை மட்டுப்படுத்தியிருந்தாலும் அடிக்கடி வகுப்புகளை தரிசித்து விசேட வகுப்புக்களையும் ஏற்பாடு செய்து கற்பித்தல் பணியை இன்று வரை தொடர்ந்து கொண்டே இருந்தார். இணைந்த கணிதம் தொடர்பில் பல இற்றைப்படுத்திய அலகுகள் தொடர்பில் எம்முடன் ஆர்வமாக வினாவி தொடர்ந்தும் கணிதம் கற்பிக்கும் திறனை பேணிக் கொண்டவர் ஆவார்.

திரு.கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் அவர்களின் அதிபர் சேவைக்காலப்பகுதி பல முகங்களைக் கொண்டது. அவர் தன்னை ஒரு நிர்வாகியாகவோ அதிகாரமிக்கவராகவோ கருதியது கிடையாது. அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டும் தனது அதிகாரத்தை இறுகிய மனதுடன் பிரயோகிக்கும் மனப்பாங்கு கொண்டவர். பின்பு அதனை நினைத்து மனம் வருந்துவார். ஆசிரியர்களை மனிதாபிமான ரீதியில் அணுகியவர். ஒவ்வொரு ஆசிரியர்களினதும் தனிப்பட்ட பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றை விசாரித்தறிந்து அவர்களை தனிப்பட அழைத்து மற்றவர் அறியா வண்ணம் அதற்கான பரிகாரத்தை வழங்கும் மனப்பக்குவம் உடையவர். கல்வித் திணைக்களத்தின் பொதுவான விதிமுறைகளுக்கு புறம்பாக சில மனிதாபிமான விடயங்கள் கருதி அசாத்தியமான முடிவுகளை சரியான நேரத்தில் திறம்பட தீர்மானிக்கும்

திறமை வாய்ந்தவா். இந்த இடத்தில் எமது அதிபா் மற்றைய அதிபா்களை விட மாறுபட்டு நிற்கின்றாா். திரு.கணபதிப்பிள்ளை தா்மலிங்கம் அவா்கள் மிகச் சிறந்த யதாா்த்தவாதி ஆவாா். எந்தவொரு விடயத்தையும் யதாா்த்தமாகச் சிந்திக்கும் மனப்பக்குவமுடையவா். இலட்சிய வாதம் தொடா்பில் எமது அதிபா் எதிா் மறையான சிந்தனைப் போக்கைக் கொண்டவா். எமது அதிபரின் அசாத்தியமான துணிச்சலை மற்றைய அதிபா்கள் பாா்த்து வியா்ந்த பல சந்தா்ப்பங்களும் உண்டு. மற்றவா்களுடன் எப்போதும் சிரித்த முகத்துடன் பழகுபவா். சிறந்த தொடா் பாடல் திறன் படைத்தவா் கல்வி மேலதிகாாிகளுடன் சிறந்த தொடா்பாடலையும் சிறந்த இடைத் தொடா்புகளையும் கொண்டிருந்தாா். கல்வி மேலதிகாாிகளின் நட்பையும் மதிப்பையும் பெற்ற அதிபராக மிளிா்ந்தவா். பாடசாலை மாணவா்களுடன் நல்ல தொடா்புகளை பேணியவா் எங்கள் அதிபா். மாணவா்களை பிள்ளைகளாகவே கருதி அவா்களின் மனோபாவங்களிற்கு மதிப்பு கொடுத்து வழி நடாத்தியவா்.

மிக அண்மையில் மும்மொழி கலாசார இணைப்பு திட்டத்தின் கீழ் அநுராதபுரம் நிக்கவேவா அநுரா மகா வித்தியாலத்திற்கான கல்விச் சுற்றுலாவின் போது எங்கள் அதிபாின் வித்தியாசமான ஆளுமை நன்கு பளிச்சிட்டது. அங்கு இடம்பெற்ற கலாச்சார நிகழ்ச்சியில் எங்கள் அதிபாின் உரை எல்லோா் மனதையும் கவா்ந்தது. அங்குள்ள கல்வி அதிகாாிகளினால் எங்கள் அதிபா் பெரிதும் வியந்து நோக்கப்பட்டாா். தனது சிறந்த ஆங்கில மொழி தொடா்பாடல் திறனினால் அங்கே வந்திருந்த எல்லோா் மனதிலும் நீங்காது இடம்பெற்றாா். தனது கடைசி பதவிக் காலத்தில் இப்படியான ஒரு கல்விச்சுற்றுலாவில் சென்றது தனது பெரும்பேறு என அதிபா் அவா்கள் கூறியிருந்தாா்.

இவ்வாறான சிறந்த ஆளுமைப் பண்புகளையும் மனித நேயப் பண்புகளையும் கொண்ட எங்கள் அதிபாின் ஓய்வு உண்மையில் எங்கள் கல்லூாிக்கு ஓா் தவிா்க்க முடியாத பேரிழப்பாகும். எங்கள் கல்லூாி வரலாற்றில் தேசிய ாீதியாக பெறப்பட்ட சாதனைகள் எல்லாம் இதற்கு தக்க சான்றாகும். எமது அதிபா் திரு.கணபதிப்பிள்ளை தா்மலிங்கம் அவா்களை எங்கள் கல்லூாி வரலாற்றில் ஒரு முக்கிய பதிவாகவே கொள்ள வேண்டும். எங்கள் அதிபாின் சிறந்த பண்புகள் காரணமாக அவரும் அவரது குடும்பத்தினரும் சீரும் சிறப்புமாக வாழ்வா் என்பது திண்ணம் அவரது ஓய்வுக்காலம் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

திரு.செ.ஜெயமோகன்
ஆசிாிய நலன்புாிச் சங்க செயலாளா்,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூாி,
வல்வெட்டித்துறை.



# எமதுகல்லூரியின் புகழ் தேசமெங்கும் மணம் வீசச் செய்த எமது அதிபர்.....

சாதனை பல படைத்து வேதனைகள் பல தாங்கி தலை நிமிர்ந்து புகழ் பூத்த எங்கள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையின் வடிவங்களில் பல வல்லவர்கள் நல்லவர்கள் வழிசமைத்துச் சென்ற வரலாற்றுத் தடங்கள் வடித்து வைத்த சரித்திரங்கள் சான்று பகிர்கின்றன. அந்த வரிசையில் வந்த பெருமகன் ஓய்வு பெறும் எங்கள் அதிபர் திரு.க.தருமலிங்கம் அவர்கள்.

காலம் காலமாக கட்டி வளர்த்த வளங்களையும் வடிவங்களையும் இழந்து துயர் படிந்து புகழ் குறைந்து ஒளி குன்றிய காலமான நாட்டின் சீரற்ற காலம் நமது கல்லூரியின் பௌதீக வளமும் மிகவும் குறைவான நிலைக்கு சென்றது. சீரான காலம் வந்ததும் படிப்படியாக வந்த அதிபர்கள் மெதுமெதுவாக எழுந்து நிமிர்ந்து நின்று தலைதூக்கி புகழ் சேர்த்த போதும் இப்பெருமகன் காலத்தில் கல்லூரியின் புகழ் தேசியத்தில் முதலாவதாக மிளிர்ந்தது தெய்வம் தந்த பேறு அந்த பேற்றைப்பெற உழைப்பவர்களுக்கு வழிகாட்டிய ஒளிவிளக்கு எங்கள் அதிபர். பற்றாக்குறையான கட்டடங்கள் இருந்தும் இயல்புக்கு ஏற்ற வகையில் துரிதமாக துடிப்பாக கல்வி அபிவிருத்திக்காக உழைத்தவர். நீண்டகாலமாக இருந்த குடிநீர் பிரச்சினை நிறைவாக நிரந்தர தீர்வு பெற்ற பொற்காலமும் இவரின் காலமாகும்.

பார்ப்பதற்கு எளிமையாக பழகுவதற்கு இனிமையாக பாசம் உள்ள தந்தையாக தேசம் போற்றும் கல்விக்காவலன், கல்வி அபிவிருத்தி மட்டுமல்லாமல் விளையாட்டுத்துறையிலும் எமது கல்லூரியின் பெயர் காக்க பெருமுயற்சி எடுத்தார். பிரதேச, மாகாண, தேசிய ரீதியில் பல்வேறு போட்டி நிழ்வுகளில் பங்கு பற்றி பரிசில்கள் பெற வழி செய்தவர்.

ஒரு கல்லூரியின் நற்பெயர் என்பது அக் கல்லூரியின் கட்டிடங்களிலோ, பௌதீக வளங்களிலோ அல்ல, நாளை சிற்பிகளை நாட்டிற்கு வழங்கும் நற்பணியிலேயே தங்கியுள்ளது. கல்வி மட்டுமல்ல நல்ல ஒழுக்கமும் பண்பாடும் இங்கு முன் நிற்கின்றது. தேசமெங்கும் புகழ்பரப்பி வாழ்ந்துவரும் எங்கள் கல்லூரியின் பழைய மாணவர்கள் தாம் சென்ற இடங்களில் புகழ்பரப்பி வாழ்வதில் இருந்து எங்கள் கல்லூரி கல்விக்காக மட்டுமல்ல மனித விழுமியங்கள் மாறாத மனிதனாக மணம்பரப்ப வழிகாட்டுகிறது. என்பது வெளிப்படை. தேசம் போற்றும் பல பெரியவர்களை பெற்றெடுத்து புகழ்பரப்ப காரணம் ஓய்வு பெறும் எங்கள் அதிபர் போன்ற நல்வழி காட்டிகளின் வழித்துணையே ஆகும்.

எங்கள் கல்விப் பூஞ்சோலையில் மலர்ந்து மணம்வீசி மகிழ்ந்திருந்த கல்லூரியின் புகழ் தேசமெங்கும் மணம் வீசச் செய்த மலர்களில் ஒருவாச மலர் ஓய்வு பெற இருக்கின்ற செய்தி நமக்கு நல்லதாக இல்லாத போதும் காலத்தின் கட்டாயம் ஆனால் நல்லவர்கள் செய்த சேவை காலத்தால் அழியாதது. அதிபர் அவர்களது நற்பணிகளும் அவர் ஈட்டிச் சென்ற வெற்றிகளும் என்றும் வாழும், எங்கள் அதிபரின் ஓய்வுக் காலம் சிறப்பானதாகவும் சேவைமிக்கதாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுகின்றோம்.

சு.லிங்கேஸ்வரன்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
(யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி)

# வாழ்க வளமுடன் வாழ்த்துகின்றேன் வாயார.......



எமது சகோதர பாடசாலையின் அதிபர் திருவாளர் க.தர்மலிங்கம் அவர்கள் உடுப்பிட்டி அ. மி. கல்லூரியில் என்னுடன் கல்வி கற்ற சக மாணவராவர். அந்த வேளை உருவத்திலே யேசு பாவத்திலேயோ எவ்வாறு இருந்தார்களோ இன்றும் அத்தோற்றமும் சுபாவமும் என்றும் மாறாமலே எல்லோருடனும் சகஜமாக பழகுகின்ற தன்மையும் அன்றைய காலத்தை நினைவூட்டுகின்றன. இன்றும் என் மனதில் நிழலாடுகின்றன. தாம் கற்ற பாடசாலையிலேயே ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக சேவையாற்றுகின்ற பெருமைக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எத்தகைய பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து இலகுவாகவும் உறுதியாகவும் முடிவெடுக்கின்ற பண்புகொண்டவர். எமது சகோதரபாடசாலையின் அதிபர் திருக.தர்மலிங்கம் அவர்கள் என்றால் அதுமிகையாகாது.

தமது பாடசாலையிலேயே சேவையாற்றும் போது எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் சுபாவம் உடையவர். ஆசிரியர்கள்,மாணவர்கள் என எல்லோருக்கும் ஏற்றவகையில் அணுகி அவரவர் கடமைகளை ஆற்றுவதற்கு நல்வழி காட்டிய எமது அதிபர் அவர்களின் அருஞ்சேவையைப் பாராட்டி, ஆண்டவனை வேண்டிவாழ்த்துவதிலும் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் தமது ஓய்வுக்காலத்தில் தேகாரோக்கியத்துடன் வளங்கள் பலவும் பெற்றுவாழ வேண்டுமென மீண்டும் வாழ்த்துகின்றேன் வாயார.

L.N.யோசேப்
அதிபர்
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி



# "யா/இமையாணன் அ. த. க வித்தியாலய அதிபரின் ஆசிச் செய்தி"

யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரியின் வளர்ச்சியில் பல அதிபர்கள் சிறப்பாக பணியாற்றியுள்ளனர். அந்த வரிசையில் திரு.க.தருமலிங்கம் அவர்கள் தமது காலத்தில், பாடசாலைக் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடையவராக இருந்தார். அதிபர் அவர்கள் மாணவனாக, ஆசிரியராக , பிரதி அதிபராக ,அதிபராக என இக் கல்லூரியுடன் நீண்ட தொடர்பு கொண்டவர். மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும், பாடசாலைச் சமூகத்துடனும், கல்வித்திணைக்களத்துடனும், சக பாடசாலைகளுடனும் இணக்கமான நடைமுறைகளைக் கடைப்பிடித்து இக்கல்லூரியை வளர்த்துச் சென்றதில் அவரது ஆற்றல் சிறப்பானது.

நீண்ட கால வளர்ச்சியில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி, சாதனையில் தொட்டும் இக் கல்லூரி, இவரது காலத்தில் கணிதப் பிரிவில் கமலக்கண்ணன் கமலவாசன் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றமை மூலம் சாதனையின் உச்சத்தைத் தொட்டது.

கடமையில் உயர்ந்து, கல்லூரியை வளர்த்த அதிபர் திரு.க.தருமலிங்கம் அவர்களின் புகழ் உடுப்பிட்டி அமரிக்கன் மிஷன் கல்லூரி உள்ளவரை நிலைத்திருக்கும், மேலும் அவரது மணிவிழா சிறப்புற வாழ்த்துவதுடன் அன்னாரது ஓய்வு காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

திருமதி.ந.சந்திரசேகரம்
அதிபர்
(யா/இமையாணன் அ.த.க.வி)



ஓம் கணபதி துணை

# வல்லைவாளி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
# Vallaivali Sri Siththivinayagar Thevasthanam
## திருப்பணிச்சபை

Uduppiddy Junction,
Imayanan,
Uduppiddy.

உடுப்பிட்டிச் சந்தி,
இமையாணன்,
உடுப்பிட்டி.

15.09.2012

உடுப்பிட்டிக் கிராமத்தின் மத்தியில் சிறப்பு மிக்க கல்லூரியாகிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அதிபர். திரு. கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் அவர்களின் கல்லூரிச் சேவையை வியந்து நோக்குவதில் நாம் பெருமையடைகின்றோம். குறிப்பாக அவர் சமூகத்துடன் மிக நெருக்கமான முறையில் தொடர்புகளை வைத்திருந்தார். எல்லோருடைய குடும்ப அங்கத்தவர்களின் சுக துக்கத்திலும் பங்கெடுத்தவர். உடுப்பிட்டி கிராம மக்களின் நன் மதிப்பைப் பெற்றவர். அது மட்டுமன்றி எமது ஆலயத்திலும் வருடாந்த விநாயக சதுர்த்தி விழாவை கல்லூரியின் சார்பில் மிகச் சிறப்பாக நடாத்தியவர். கல்லூரியில் பெற்றோர்களை மிகப் பண்பாக நடாத்திய மிகச் சிறந்த அதிபர். இவர் தன்னுடைய ஓய்வுக் காலத்தில் தேக ஆரோக்கியத்துடன் சிறப்பாக வாழ எல்லாம் வல்ல வல்லை வாழ் சித்தி விநாயகரை மனதார வேண்டி நிற்கின்றோம்.

திருப்பணிச் சபையினர்



# வாழ்த்துச்செய்தி

தலைமைத்துவம்,நிா்வாகம் இரண்டும் ஒன்றோடுஒன்று இணைந்தவை. அவை முரண்பாடு கொண்டனவல்ல. நிருவாகம் என்பது நிறுவனத்தின் இலக்குகளை அடையவேண்டிய தொழில்களை ஊழியரைக் கொண்டு செய்விப்பது. தலைமைத்துவம் என்பது ஊழியரை விருப்பத்துடன் செய்யவைப்பதாகும். இவ்விரண்டிலும் இக் கல்லூரியில் பிரதிஅதிபராக இருந்து பெற்றுக் கொண்ட அனுபவப் பேற்றினால் சிறந்த அதிபராக அவரால் விளங்க முடிந்தது.எமது கல்லூரிசிரியா்களிடையே தோன்றும் முரண்பாடுகளை களைந்து, புரிந்துணா்வினூடாக ஒருமுகப்படுத்தி வெற்றிகண்டவா். தலைமைத்துவம் பற்றிய கோட்பாடுகளில் குணக் கூற்றுக் கோட்பாடு (Traittheory) அதிபரின் முழுமையான ஆளுமையை வெளிப்படுத்துவது. நோ்மை, புரிந்துணா்வு, திறந்தமனம், பொறுமை, நிதானம் போன்றவற்றை உடையவா்கள் சிறந்ததலைவா்களாக திகழ்வா். இது எமது தருமலிங்கத்திற்கு மிகப் பொருத்தமானது.

கடந்தகாலவரலாற்றினைத் திரும்பிபாா்க்கும் போதுஎமதுகல்லூரி அதிபா்கள் மக்கள் மனதில் மறையாததெய்வங்களாயுமிருந்தனா்.வாழ்வின் முன்னேற்றத்திற்கு அத்திவாரமிட்டவா்களாகவும், நல்லொழுக்கத்திற்குமுன் உதாரணமாகவும் இருந்திருக்கிறாா்கள். எமதுஅதிபரிடம் அா்ப்பணம். நெருக்கமானமேற்பாா்வை, இலட்சியநோக்கு,மனிதநேயம்,தனியாள் கவனம்,ஆசிரியா்களைமகிழ்வூட்டி வேலைவாங்கும் மனப் பாங்கு,கலகலப்பாக திறந்தமனத்துடன் பழகுதல் போன்ற நல்லியல்புகள் காணப்பட்டன.

"நல்ல அதிபா் உள்ள கூடாத பாடசாலையும் இல்லை. கூடாதஅதிபா் உள்ள நல்ல பாடசாலையும் இல்லை"இது கல்வியியலாளரின் கூற்று. இக் கூற்று பாடசாலைகளில் அதிபா் அதிமுக்கிய பங்கினை வகிக்கின்றனா். என்பதை அழுத்திகாட்டுகின்றது. ஆசிரியா்,மாணவா் பெற்றோருக்கிடையிலான முப்பரிமானத்தைநிறைவுசெய்தவா். வெற்றிகரமாகதன் பணியை செய்து முடித்த அதிபா் தருமலிங்கம் ஓய்வுகாலத்தில் சிறப்புற நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

கிருஷ்ணபிள்ளைநடராசா
முன்னாள் அதிபா்
உடுப்பிட்டிஅ.மி.கல்லூரி

# விக்னேஸ்வராவும் தர்மலிங்கமும்

விக்னேஸ்வராக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் என்ற வகையில் கல்லூரிக்கு புகழ் சேர்த்த ஆசிரியர்களை நாம் என்றும் மறந்துவிடலாகாது. ஆம் அந்த வகையில் எண்பது தொண்ணூறுகளில் விக்னேஸ்வராக் கல்லூரியில் பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளில் கணிதப் பேராசானாக கடமையாற்றிய அதிபர் தருமலிங்கத்தை எம் கல்லூரி என்றும் மறந்துவிடாது.

உயர்தர வகுப்பு மாணவருக்கு ஆசிரியர் தருமலிங்கம் என்றால் கரும்பு போன்றென்பார். அந்த வகையில் எப்போதும் பிரச்சினைகளை அணுகும் போது மாணவர் பக்கம் நின்று அதனைத் தீர்த்து வைப்பதில் வெற்றி கண்டவர். அது போன்று கணித பாடத்தை கற்பிப்பதில் மாணவர் மனங்களை வென்றெடுத்த நல்லாசான் என்றால் மிகையாகாது. குறிப்பாக அக் காலத்தில் உயர்தர வகுப்புக்களில் தூய கணிதத்தை இலகு முறையில் புகுத்தி மாணவரின் விருப்புரிமை பாடமாக மாற்றிய பெருமை அவரது தனிச் சிறப்பு எனலாம்.

அக்காலம் விக்னேஸ்வராவில் இளம் ஆசிரியர் சமுதாயம் கோலோச்சிய காலம் எனலாம். அதன் வகையில் ஆசிரியர் யாவரையும் ஒன்று சேர்த்து ஒரு கூட்டுக் குடும்பமாக்கி கல்லூரியின் வளர்ச்சிக்கு உழைத்த பெருந்தகையாவார்.

அவரது எளிமையான கோலம், புன்சிரித்த முகம், எல்லோரையும் சமமாக மதிக்கும் பண்பு எதையும் துச்சமென மதித்து பிறருக்கு உதவும் பண்பு,புகழுக்கு மயங்காத இயல்பு, சகலரையும் நண்பனாக கருதும் பண்பு என்பன இவரை எம்மிடையே ஓர் உயர்ந்த நிலையில் வைத்தது. விருந்தோம்பலும், ஏழைப் பிள்ளைகளுக்கு பலனை எதிபாராது உதவும் பண்பும் மாணவர், ஆசிரியர், சக அதிபர்களிடையே அவருக்கு நற்பெயரை ஈட்டித்தந்துள்ளது. கருத்துக்களை பகிரும் போது மற்றோர் கருத்துக்கு மதிப்பளித்தலும் எதையும் பிழை என்றால் நேருக்கு நேர் எடுத்துரைத்தலும் அவரின் விசேட குண இயல்புகள் எனலாம். அதிபர் அவர்களுடன் எனது உறவு 1993 இலிருந்து ஏற்பட்டது.

பல சந்தர்ப்பங்களில் நானும் அதிபர் அவர்களும் பாடசாலையில் நிலவும் பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடுவோம். இதன் போது நேர் சிந்தனைகளும், தெளிவான கருத்துக்களும் அவரிடம் காணப்பட்டது. கண்டு நான் வியந்தேன். அனுபவங்களுக்கூடாக யதார்த்தங்களை புரிந்து செயற்படும் சிறந்த அதிபராக அவர் எம் முன் காட்சியளிக்கிறார். பிரச்சினைகளை அணுகும் போது ஆசிரியர் பக்கம் நின்று மேலான கல்வி அதிகாரிகளின் மனங்களை வென்றெடுத்து சாதுரியமாக தொலை நோக்கு சிந்தனையுடன் செயற்படுவது அவரது தனிச்சிறப்பு எனலாம்.

கற்பித்தலுடன் நின்று விடாது இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் மாணவருடன் மாணவராக நின்று மாணவர்கள் எம் கல்லூரியில் சாதனை படைக்க அந்நாள் அதிபருக்கு வலக்கரமாக நின்று செயற்பட்டவர் என்பது நாம் அறிந்ததே.

எம் கல்லூரியின் அவர் பெற்ற அனுபவங்கள் அவரின் அதிபர் சேவைக்கு பல வழிகளில் உதவியது எனலாம். குறிப்பாக உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி வடமராட்சியில் தனக்கோர் இடத்தை நிலை நிறுத்த அவரது ஆளுமைப்பண்பு நட்பு ரீதியான நிர்வாக அணுகுமுறையும் மேலதிகாரிகளுடன் கொண்ட சிறந்த தொடர்பாடல் என்பன காரணம் எனலாம்.

பாண்டவர்கோ தருமன் போன்று எம்போன்ற அதிபருக்கு தருமராக இருந்து எம்மவர் மனங்களை வென்றெடுத்த பிதா மகனை என்றென்றும் விக்னேஸ்வரா சமூகம் நன்றியுடன் நினைவு கூறும்.

வே.சிவசிதம்பரம்
ஓய்வு நிலை அதிபர்,
விக்னேஸ்வராக் கல்லூரி

**சஞ்சிகைக்கு.........**

அன்புள்ள தருமு உம்மை அப்படித்ததான் அழைப்பேன். உம்முடன் மிக நீண்ட காலம் நெருங்கிப் பழகிய காரணத்தால் நீர் கல்விச் சேவையிலிருந்து விடுதலை பெறும் வேளையிலே சில வார்த்தைகள் உதிர்க்கின்றேன்.

உடுப்பிட்டி அ.மி கல்லூரி சாதனையாளர் பட்டியலில் முன்னனிப் பாடசாலைகளில் ஒன்று என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்டதே. இத்தனைக்கும் அது தெரிவுப் பாடசாலையுமல்ல, தெரிவு செய்து மாணவரை அனுமதிக்கும் பாடசாலையுமல்ல. அயலில், அயல் கிராமங்களில் உள்ள மாணவரை அள்ளியெடுக்கும் பாடசாலை அப்படியான பாடசாலையில் இப்படியான சாதனைகள் பெற முடிந்தால் அதன் தலைமைத்துவத்தில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டும்.

இதற்காக நாங்கள் ஒன்றாக அனுபவங்களைப் பெற்றுக் கொண்ட விக்கினேஸ்வராக் கல்லூரி என்ற களத்தை நினைவு கூருகிறேன். அங்கே உமது பொறுப்புக்களை சுமக்கும் ஆற்றல் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறன் சிரிப்பினால் நிலமைகளை சுமுகமாக்கும் பண்பு ஆகியவற்றையும் மற்றவர்களை மதித்து மரியாதை செய்யும் பண்பையும் நன்கு அனுபவித்தவன் நான்.

உமக்கு உடுப்பிட்டி அ.மி கல்லூரி தலைமைத்துவம் கிடைத்ததும் இப் பண்புகளை உமது மாணவர்கள் அனுபவித்தார்கள். இதனால் உயர்ந்தார்கள். வளமான ஆசிரிய சமூகத்தை நன்கு நிர்வகித்தீர். அதனால் நல்ல மாணவ அறுவடையைப் பெற்றீர். இதற்கு விவசாயத்தில் நீர் கொண்டுள்ள அனுபவம் வழிகாட்டியிருக்கும்.

தருமு இப்போது பாடசாலையைக் கட்டிப்பிடித்து வாழ்ந்த வாழ்க்கையிலிருந்து உமக்கு ஓய்வு கிடைத்திருக்கின்றது. சமூகப் பணியும் குடும்பப் பணியும் தொடர்கிறது. நான் நேரிலும் சில தடவை சொல்லியிருக்கின்றேன். வீட்டைக் கவனித்து வீட்டுப்பணியுடன் இனி நாட்டுப் பணியையும் முன்னரைப் போல் தொடரலாம் சமூகம் உம் பின்னே நிற்கும். நீர் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவர்.

உம் பணி தொடர இறைவன் உமக்கு நல்ல உடல் வலிமையையும் நீடித்த ஆயுளையும் குறைவில்லா வளங்களையும் நேர்மையான குணவியல்புகளையும் தர ஆசிக்கின்றேன். அன்பினால் உலகை வெல்லுங்கள்.

அ.ம.ஜெபரத்தினம்,
ஓய்வு நிலை பிரதி அதிபர்,
யா/இருதயக் கல்லூரி,
கரவெட்டி.

# கரணவாய் வடக்கு என்ற கிராமத்தில், விவசாயக் குடும்பத்தில்......

கணபதிப்பிள்ளை தங்கம் தம்பதிக்கு 1952-08-15ம் திகதி திரு.தர்மலிங்கம் அவர்கள் பிறந்தார். இவரிற்கு இரு சகோதரிகள் உடன் பிறப்புக்களாகும். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த இவர் பெற்றோரினதும்,உறவினரதும் கூடியகவனிப்புடன் வளர்க்கப்பட்டார். இவர் தனதுஆரம்பக் கல்வியை தாமோதரா வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் கல்விபயின்றார். க.பொ.த(ச.த), க.பொ.த(உ.த) பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற இவர், பல உத்தியோகங்கள் கிடைத்தும் ஆசிரியர் தொழிலிலேயே நிலைத்து நின்றார். 1977ம் ஆண்டுஆசிரியர் தொழில் நியமனம் பெற்று தனது முதல் கடமையை பது/பசறை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஏற்றார். கணித விஞ்ஞான ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் அப்பாடங்களில் சிறந்த ஆசிரியராகத் தனது கடமையைநிறைவேற்றினார். 1981 பலாலி ஆசிரியர் கலாசாலைக்குத் தெரிவாகி கணித பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக தன்னைமாற்றிக் கொண்டார். பின்னர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரிமாணவனாகத் தோற்றி விஞ்ஞானமானி (B.Sc) பட்டத்தைப் பெற்றார். 1982-07-01 கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு, ஆசிரியர் கலாசாலைபயிற்சி முடிந்ததும் நியமனம் பெற்றார். அக்கல்லூரியில் புகழ் பூத்தஅதிபராகக் கடமையாற்றிய திரு.க.சிவபாதசுந்தரம், பிரதிஅதிபர் திரு.க.சுப்பிரமணியம்(Artist) ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்று சிறப்பாக தனது கற்பித்தல் செயற்பாட்டுடன், இணைப்பாடவிதானச் செயற்பாட்டிலும் சிறந்து விளங்கினார். இவரின் காலத்திலேயே விக்கினேஸ்வராக் கல்லூரியில் இருந்து பொறியியல், விஞ்ஞான பிரிவுகளிற்கு முதன் முதலில் மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றனர் என்பது முக்கியமான அம்சமாகும். 16 வருடங்கள் விக்கினேஸ்வராக் கல்லூரியில் சக ஆசிரியர்கள், மாணவர்கள், சமூகம் என பலதரப்பட்டவர்களால் பாராட்டப்பட்டார். இக்காலம் ஒரு பொற்காலம் என இவரின் காலத்தில் படித்த மாணவர்கள் சொல்வதை இப்போதும் அறியலாம். இதற்கும் சான்றுபகிர்வனவாக இவரின் ஓய்வுபெறும் நாளன்று இவரிடம் படித்த விக்கினேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் இவரைக் கௌரவித்து ஒரு நிகழ்வு நடாத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

தான் படித்த கல்லூரியில் கடமையாற்ற வேண்டிய அவசியத்தை பலரின் வேண்டுகோளுக்கு இணங்க உணர்ந்த இவர் 01-08-1997 இல் இடமாற்றம் பெற்று உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு வந்தார். இவரின் இடமாற்றம் ஆனதுகல்லூரியின் அதிபர் மேன்மைக்குரிய திரு.கி.நடராசாஅவர்களின் பெருமுயற்சியினால் ஏற்படுத்தப்பட்டது. பௌதீகவள விருத்தியிலும், கல்வி அபிவிருத்தியிலும் அதிபரிற்கு வலது கரமாக நின்று செயற்பட்டார். பலமாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு காரணியாவார். தரைமட்டமாகக் காட்சியளித்த கல்லூரிக்கு G.T.Z இன் உதவியுடன் தொடங்கிய முதல் கட்டிடத்துடன் அதிபருடன் சேர்ந்து உழைத்த உழைப்பின் பயனே இன்றைய இக் கல்லூரியின் கம்பீரமாகும். ஆசிரியராகபின்னர் பிரதிஅதிபராக கல்லூரிக்காக கடுமையாக உழைத்த திரு.க.தர்மலிங்கம் அவர்கள் 2005ம் ஆண்டு பொறுப்பை ஏற்றார். இவர் கல்லூரியின் பொறுப்பை ஏற்றகாலம் கல்லூரிக்கும் சமூகத்திற்கும் பொற்காலமாகும். மிகவும் நெருக்கடியான காலகட்டத்திலேயே அதிபர் பொறுப்பை ஏற்ற இவர் தனது வித்தியாசமான நிர்வாகத்தினால் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்லூரிச் சமூகம் என்பவற்றைத் தன்பக்கம் ஈர்த்து விசுவாசமிக்கவராக்கினார். அவர்களை வெற்றி கொண்டார். இதனால் கல்லூரி எவ்விதபங்கமும் இல்லாமல் சிறப்பாக இயங்கியது. இதன் வெளிப்பாடே இணைப்பாடவிதான செயற்பாடு (விளையாட்டுத்துறை)யில் இரு மாணவர்கள் தேசியமட்டத்தில் சாதனைகளை ஏற்படுத்தியது. மற்றையது க.பொ.த (உயர்தரம்) கணிதப் பிரிவில் மாணவன் கமலக்கண்ணன் கமலவாசன் தேசியமட்டத்தில் முதல் நிலை மாணவனாக வந்து கல்லூரியின் பெருமையைசர்வதேசமட்டம் வரை தெரியப்படுத்தியமை. இந்தநேரத்தில் எல்லாம் இப்பெருமைகளிற்குரியவர்கள் தான் வணங்கும் விநாயகப் பெருமானும், எனது கல்லூரி ஆசிரியர்களும்தான் காரணம் எனச் சொல்லியமை அவரின் ஆணவச் செருக்கு இல்லாத உயர்ந்த மனப்பாங்கினால் எல்லோர் மனதிலும் தங்கமான அதிபராக்கியது. இவர் காலத்திலே 2008ம் ஆண்டு 10 மாணவர்கள் 3A எடுத்தமை இவர் காலத்திலே (2005-2011வரை) மாவட்ட நிலையில் கல்லூரி, கணிதப் பிரிவில் 10 இற்குள்ளே வந்தமை எல்லாம் கல்வியின் தரத்தில் கல்லூரியின் உன்னத நிலையை எடுத்துக் காட்டியது. இவர் அதிபராக இருந்த காலப்பகுதியில் கல்வியின் தரத்தில் ஏற்பட்ட விருத்தியை க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் அட்டவனை ஒன்றின் மூலம் தருகின்றேன்.

இதன் வெளிப்பாடே இணைப்பாடவிதான செயற்பாடு (விளையாட்டுத்துறை)யில் இரு மாணவர்கள் தேசியமட்டத்தில் சாதனைகளை ஏற்படுத்தியது. மற்றையது க.பொ.த (உயர்தரம்) கணிதப் பிரிவில் மாணவன் கமலக் கண்ணன் கமலவாசன் தேசியமட்டத்தில் முதல் நிலை மாணவனாக வந்து கல்லூரியின் பெருமையைசர்வதேசமட்டம் வரைதெரியப்படுத்தியமை. இந்தநேரத்தில் எல்லாம் இப்பெருமைகளிற்குரியவர்கள் தான் வணங்கும் விநாயகப் பெருமானும், எனது கல்லூரி ஆசிரியர்களும்தான் காரணம் எனச் சொல்லியமை அவரின் ஆணவச் செருக்கு இல்லாத உயர்ந்த மனப்பாங்கினால் எல்லோர் மனதிலும் தங்கமான அதிபராக்கியது. இவர் காலத்திலே 2008ம் ஆண்டு 10 மாணவர்கள் 3A எடுத்தமை இவர் காலத்திலே (2005-2011வரை) மாவட்ட நிலையில் கல்லூரி, கணிதப் பிரிவில் 10 இற்குள்ளேவந்தமைஎல்லாம் கல்வியின் தரத்தில் கல்லூரியின் உன்னதநிலையை எடுத்துக்காட்டியது. இவர் அதிபராக இருந்த காலப்பகுதியில் கல்வியின் தரத்தில் ஏற்பட்ட விருத்தியை க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் அட்டவனை ஒன்றின் மூலம் தருகின்றேன்.

| இல | ஆண்டு | முழுப்பெயர் | பெறுபேறு | பிரிவு | மாவட்ட நிலை | தேசிய நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2006A/L | குமாரசாமி கணேசானந்த் | 3A | கணிதம் | 1 | 9 |
| 2. | | இராமகிருஷ்ணன் சயந்தன் | 3A | கணிதம் | 2 | 5 |
| 3. | 2007A/L | சிவபாதசுந்தரம் பிரண்யா | 3A | உயிரியல் | - | - |
| 4. | | சிவபாதசுந்தரம் பிரசாந் | 3A | கணிதம் | 14 | 124 |
| | | | 3 | | | |
| 6. | | திரவியம் செல்வமலை | 3A | கலை | 49 | 1477 |
| 7. | | சிறீஸ்கந்தராஜா சேயந்தன் | 3A | கணிதம் | 3 | 48 |
| 8. | | பேரின்பமூர்த்தி கிரிசாந்த் | 3A | கலை | 45 | 774 |
| 9. | | பாலையாகிருஷ்ணா | 3A | கலை | 69 | 1189 |
| 10. | | மோகராசா கஜன் | 3A | கலை | 56 | 840 |
| 11. | 2008A/L | செல்வச்சந்திரன் ஸ்ரீநிசாந்த் | 3A | கலை | 93 | 1573 |
| 12. | | யோகேந்திரம் நிரோஜனா | 3A | கலை | 36 | 699 |
| 13. | | குணராசா மனோரூபினி | 3A | கலை | 30 | 605 |
| 14. | | துரைசாமி தயாதர்சன் | 3A | கலை | 205 | 3330 |
| 15. | | வன்னிமரம் ரதீனா | 3A | கலை | 68 | 1165 |
| 16. | | தர்மதுரைதாரணி | 3A | கலை | 302 | 4798 |
| 17. | | சித்திரவேல் சஞ்சய் | 3A | கணிதம் | 10 | 82 |
| 18. | | அன்ரன்செல்வராசாடெய்சன் கமிலஸ் | 3A | கலை | 182 | 4312 |
| 19. | 2009A/L | கிருபாகரன் தாமிரா | 3A | கலை | 62 | 1610 |
| 20. | | சர்வலோகநாதன் கல்யாணகுமாரி | 3A | கலை | 147 | 3592 |
| 21. | | பரமேஸ்வரன் சுபத்திரா | 3A | கலை | 120 | 29664 |
| 22. | | கமலக்கண்ணன் கமலவாசன் | 3A | கணிதம் | 1 | 1 |
| 23. | 2010A/L | கிருஷ்ணகுமார் தனிரோஜன் | 3A | கணிதம் | 2 | 15 |
| 24. | | சதுலிங்கம் திவ்யா | 3A | கலை | 86 | 1500 |

- கடந்த வருடம் கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்திய பெருவிளையாட்டுக்களில் எமது கல்லூரி
  - ✦ உதைபந்தாட்ட அணியினர் 1ம் இடத்தையும்
  - ✦ கரப்பந்தாட்ட அணியினர் 2ம் இடத்தினையும் பெற்றது.

- கடந்தவருடம் இலங்கைப் பொலீஸ் திணைக்களத்தின் காங்கேசன்துறைப் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் பல பாடசாலை அணிகளுடன் எமது கல்லூரி அணி மோதி அப்போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

- கரப்பந்தாட்ட, மெய்வல்லுனர் பயிற்சி முகாம்களில் எமது கல்லூரி மாணவர்கள் கடந்தவருடம் பங்குபற்றினர். தமது திறமைகளை தேசிய பயிற்றுநர்கள் முன் தெரியப்படுத்தினார்கள். அதில் மெய்வல்லுநர் போட்டியில் 15 வயதுப் பிரிவில் செல்வன் துரைராசா சங்கீர்த்தனன் தேசிய பயிற்சி முகாமில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்டார்.

**துடுப்பாட்டம் (Cricket) (கடினபந்து)**

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தின் (S.L.S.C.A) ஏற்பாட்டின் கீழ் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில்

- ✸ 13 வயதுப் பிரிவினர் முதலாவது சுற்றில் யா/ சென்பற்றிக்ஸ் கல்லூரியுடன் சமநிலையிலும், யா/ சென்ஜோன்ஸ் கல்லூரியின் 'B' அணியுடன் 10 விக்கட்டுகளால் வெற்றியீட்டியதும் குறிப்பிடத்தக்கது.

- ✸ 15 வயதுப் பிரிவினர் யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யா/ மகாஜனாக் கல்லூரி, யா/ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன் போட்டியிட்டனர்.

இறுதியாக

* வடமராட்சியில் பெரியார் சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்களின் 103ஆவது விழா நிகழ்வில் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டியில் எமது கல்லூரி மாணவன் செல்வன் கணேசன் ஜெர்சன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கீழ்ப் பிரிவு (சிறந்த விளையாட்டு வீரன்)
செல்வன் ரசீந்திரன் நிரோசன்
மேற்பிரிவு (சிறந்த விளையாட்டு வீரன்) செல்வன் இ. வஜிதரன்

**என்றும் நன்றிக்குரிய கல்லூரியின் நிரந்தர நிதியங்கள்**

01. தொழிலதிபர் நெல்லியடி திரு. ந. ப்ரஸ்கரன் புலமைப்பரிசில் நிதியம் (கணிதத் துறையில் அதி சிறந்த புள்ளிகள் பெற்ற மாணவருக்குரியது)

02. லண்டனில் இருக்கும் கல்லூரியின் பழைய மாணவர் திரு அப்புத்துரை சிவரஞ்சன் புலமைப்பரிசில் நிதியாக (வர்த்தகத்துறை, கலைத்துகளில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்குரியது)

03. ஆசிரியர் கழகத்தின் புலமைப்பரிசில் நிதியம் (கலை, வர்த்தகத்துறையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்குரியது)

04. அமரர் தங்கராசா ரமணன் ஞாபகார்த்த புலைப்பரிசில் நிதியம் (க.பொ.த (சா/த) சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்குரியது)

05. G.T.Z சேமிப்பிலிருந்து பெறப்பட்ட நிதியம் பாடசாலை அபிவிருத்திக்குரியது

06. எமது கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்ற கணித ஆசிரியர் திருமதி செல்லப்பாக்கியம் கிருஷ்ணபிள்ளை அவர்களின் புலமைப் பரிசில் நிதியம்.

**வலயமட்ட சாதனைகள்**

01. **தமிழ்த்தினப் போட்டி**

1. செல்வி வி. விஜயதீபா (தரம் 12, சங்கீதம்)
2. செல்வன் இ. சஞ்சயன் (தரம் 8, பேச்சு)
3. செல்வன் த. துவாரகன் (தரம் 10, இசை தனி)

02. **கணித வினாடி வினாப் போட்டி மாகாண வலயமட்டம்**

1. செல்வன் கு. ஜான்சன் (தரம் 6)
2. செல்வன் ஜெ. ராஜேந்தர் (தரம் 10)
3. செல்வன் த. வினோதன் (தரம் 11)

03. **விஞ்ஞான வினாடி வினாப் போட்டி**

1. செல்வன் அ. திருபரன் (தரம் 8)

04. **ஆங்கில தினப் போட்டி வலயமட்டம்**

ஆங்கில எழுத்துருவாக்கம் - செல்வன் ஜெ. ராஜேந்தர் (தரம் 10)

**ஆரம்பப் பிரிவு**

**வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி**

பிரிவு I ஆக்கம் எழுத்து - செல்வன் த. தேனுஜன் 3ம் இடம்

**வலயமட்ட கோலப் போட்டி**

தரம் 1 செல்வன் அ. உமாகேசன் 1ம் இடம்

# இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

## விளையாட்டுக்கள்

### பெருவிளையாட்டுக்கள் - 2010

| பிரிவு | நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|---|
| 15 வயதின் கீழ் ஆண் | கரப்பந்து | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் | பங்குபற்றியது |
| 17 வயதின் கீழ் ஆண் | கரப்பந்து | 1ம் இடம் | 3ம் இடம் | பங்குபற்றியது | |
| 19 வயதின் கீழ் ஆண் | கரப்பந்து | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் | பங்குபற்றியது |
| 19 வயதின் கீழ் ஆண் | உதைபந்து | 2ம் இடம் | 1ம் இடம் | 4ம் இடம் | |
| 19 வயதின் கீழ் ஆண் | சதுரங்கம் | 3ம் இடம | பங்குபற்றியது | | |

### மெய்வல்லுனர் போட்டிகள் - 2010

| பிரிவு | பெயர் | நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|---|---|
| 13 ஆண் | சி. வனஜன் | 100m | 1ம் இடம் | 1ம் இடம் | 3ம் இடம் | ............ |
| | பொ. ராகுலன் | 200m | 1ம் இடம் | ......... | ........... | ............ |
| | | 4×100m | 1ம் இடம் | 1ம் இடம் | ........... | ............ |
| 15 ஆண் | து.சங்கீர்த்தனன் | 100m | 2ம் இடம் | 1ம் இடம் | ........... | ............ |
| | சி. நிலக்ஜன் | 200m | 1ம் இடம் | ......... | ........... | ............ |
| | | நீளம் | 1ம் இடம் | 3ம் இடம் | ........... | ............ |
| | | 4×100m | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | பங்குபற்றியது |
| 17 ஆண் | ர. நிரோஜன் | 100m | 1ம் இடம் | ........... | ........... | ............ |
| | | 4×100m | 3ம் இடம் | ........... | ........... | ............ |
| 19 ஆண் | தி. கோபிராஜ் | நீளம் | 1ம் இடம் | 1ம் இடம் | 3ம் இடம் | |
| | | முப்பாய்தல் | 1ம் இடம் | 1ம் இடம் | 4ம் இடம் | பங்குபற்றியது |
| | | ஈட்டி | 1ம் இடம் | ........... | ........... | ............ |

**இவற்றைவிட**

- D.S.I சுப்பர் ஸ்போட்ஸ் பாடசாலை கரப்பந்தாட்ட வெற்றிக்கிண்ண சுற்றுத் தொடர் போட்டியில் வருடாவருடம் எமது கல்லூரி பங்குபற்றுவதுண்டு.

2010ம் ஆண்டு,

- 12 வயதுப் பிரிவு மாவட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவாகியது குறிப்பிடத்தக்கது.
- 14 வயதுப் பிரவு மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியது குறிப்பிடத்தக்கது.
- 18 வயதுப் பிரிவு மாவட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியது குறிப்பிடத்தக்கது.

## வலய மட்ட சாதனைகள்

### தமிழ்த்தினப் போட்டி

1. நாட்டார் பாடல் குழு இசை 2ம் இடம்
2. ர. ராகவேந்தன் தனி இசை 2ம் இடம்

### கணித புதிர்ப்போட்டி

1. ஜெ. ராஜேந்தர் 1ம் இடம்
2. சு. வரதராஜன் 1ம் இடம்
3. கு. ஜனன்சன் 3ம் இடம்
4. க. கஜிராஜ் 2ம் இடம்

### மாகாண மட்ட கணித புதிர்ப்போட்டி

ஜெ.ராஜேந்தர் 2ம் இடம்

### விஞ்ஞான வினாடி வினாப் போட்டி

த. கார்த்திபன் ஆங்கில மொழி மூலம் 3ம் இடம்

### ஆங்கில தினப் போட்டி

த. கார்த்திபன் 2ம் இடம்
த. தேனுஜன் 1ம் இடம்

**இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் இள பிடிப்பாளர்களிற்கான தேசிய மட்டப் போட்டியில் பரிசு பெற்றோர்.**

*1. ப. மதுசன் தரம் 9*
*2. இ. ஜதுசன் தரம் 9*
*3. த. கஜவதனன் தரம் 6*
} வெண்கலப் பதக்கம்

*4. சி. ஜனகன் தரம் - 9*
*5. வி. குணாளன் தரம் 9*
*6. ச. குமணன் தரம் - 9*
*7. அ. அட்சரன் தரம் - 8*
} சான்றிதழ்

## இணைபாட விதானச் செயற்பாடுகள் - 20

### விளையாட்டுக்கள்

பெருவிளையாட்டுக்கள் :-

கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட போட்

| பிரிவு | நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தே |
|---|---|---|---|---|---|
| UN 15 | கரப்பந்து | 1ம் இடம் | 1ம்இடம் | 2ம் இடம் | பங்கு |
| UN 17 | கரப்பந்து | 1ம் இடம் | பங்குபற்றியது | | |
| UN 19 | கரப்பந்து | 1ம் இடம் | 4ம் இடம் | | |
| UN 15 | சதுரங்கம் | 3ம் இடம் | 6ம் இடம் | | |
| UN 19 | சதுரங்கம் | 2ம் இடம் | 5ம் இடம் | | |

கரம், எல்லே போன்ற விளையாட்டுக்கள் வலய மட் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## மெய்வல்லுனர் போட்டிகள் – 2011

| பிரிவு | பெயர் | நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் | மாகாணம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|---|
| 11 | சி. பாநுஜன் | 75m | 1ம் இடம் | 1ம் இடம் | 4ம் இடம் | |
| 11 | சி. பாநுஜன் | 100m | 1ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் | |
| 19 | வே. குகன் | 800m | 1ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் | ப.பற்றியது |
| 19 | வே. குகன் | 1500m | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | |
| 19 | வே. குகன் | 5000m | 1ம் இடம் | 1ம் இடம் | | |
| 19 | தி. கோபிராஜ் | நீளம் | 1ம் இடம் | 2ம் இடம் | 4ம் இடம் | |
| | | மு.பாய்தல் | 1ம் இடம் | 3ம் இடம் | 3ம் இடம் | |
| 19. | இ. நிமலேந்திரா | குண்டு | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் |

### இவற்றை விட

☞ கடந்த வருடம் D.S.I சூப்பர் ஸ்போட்ஸ் நடாத்திய கரப்பந்தாட்ட வெற்றிக்கிண்ண சுற்றுத் தொடரில் எமது கல்லூரி 12, 14, 18 வயதுப்பிரிவினர் மாவட்டமட்டத்தில் பங்குபற்றி தேசியமட்டப் போட்டிக்கு தெரிவாகியது குறிப்பிடத்தக்கது.

☞ கடந்த வருடம் இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட மாவட்டப் போட்டியில் எமது கல்லூரி தரம் 8 மாணவன் செல்வன் சுதாகரன் சுதர்சன் 7 போட்டிகளில் 5 போட்டியில் முதன்மை பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றதுடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். இவ்வீரர் தினக்குரல் நடாத்திய சதுரங்கப் போட்டியில் பங்குபற்றி எமது கல்லூரிக்கு பெருமை அளித்துள்ளார் என்பதை இவ்விடத்தில் தெரிவிக்கின்றோம்.

☞ யாழ்மாவட்ட சதுரங்கச்சம்மேளனம் நடாத்திய மாவட்டச் சதுரங்கப் போட்டியில் தரம் 6 ஐச் சேர்ந்த செல்வன் கிருஷ்ணசாமி கஜந்தன் 1ம் இடத்தைப் பெற்றுள்ளார்.

☞ கடந்த வருடம் வடமராட்சி வலயம் நடாத்திய சதுரங்கச் சுற்றுப் போட்டியில்

செல்வன் அருந்தவச் செல்வன் அபிராம்
செல்வன் வியஸ்ரீ ஜினோசன்
செல்வன் தங்கவேலு தேனுஜன்
செல்வன் சுதாகரன் சுதன் ஆகியோர்
வெற்றிபெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

## கடின பந்து

கடந்தவருடம் எமது கல்லூரி 17 வயதின் கீழ் கடின பந்து அணியினர் யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, யா/ விக்கினேஸ் வராக் கல்லூரி, வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், மற்றும் மன்னார் சென்சேவியர் கல்லூரிகளுடன் போட்டியிட்டு பல சாத னைகளைப் புரிந்துள்ளது. இப்போட்டிகளில் செல்வன் சிவலிங்கம் நிலக்ஜன் அபார ஆட்டம் ஆடியுள்ளார்.

## மெய்வல்லுனர் போட்டி

செல்வன் இரத்தினசிங்கம் நிமலேந்திரா - குண்டு போடுதல் அகில இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடாத்திய மெய்வல்லுநர் போட்டியில் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தையும் இதே வருடம் Srilanka Open Meet இல் 9ம் இடத்தையும் பெற்றுள்ளார்.

கடந்த வருடம் இதே வீரர் மாவட்டம், மாகாண மட்டம் பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் மாகாணத்தில் புதிய சாதனையைப் (13.67m) பதிவாக்கியுள்ளார். அவர் தொடர்ந்து தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டியில் 2ம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை எமது கல்லூரிக்கு மிட்டுத்து தந்துள்ளார்.

இவ்வருடம் யூன் மாதம் இலங்கையில் நடைபெற்ற கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் இலங்கை மெய்வல்லுனர் குழாமில் வடமாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒரேயொரு ஆண் போட்டியாளர் செல்வன் இரத்தினசிங்கம் நிமலேந்திரா ஆவார். இவர் சர்வதேச மெய்வல்லுனர் தர வரிசையில் தெரிவு செய்யப்பட்டதும் எமது கல்லூரி வரலாற்றில் முதல் மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எளிமையான தோற்றத்தில் எல்லோருடனும் அன்பாகப் பழகும் இவரின் இயல்பான குணம் மிகவும் சிறப்பானது. கல்லூரியில் எந்நேரமும் மகிழ்ச்சிகரமான நிலையிலேயே தனது கடமைகளை ஆற்றிக்கொண்டு இருந்த திரு.க.தர்மலிங்கம் அவர்கள். தனது வாழ்வில் பல பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கும் நிலையில் அதிபர் பணியிலிருந்து மாத்திரம் விலகியுள்ளார். எனவே மற்றைய அவரின் பணிகள் மிகவும் சிறப்பானதாக அமைய வாழ்த்துவதோடு இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

ஆனந்தராஜா விமலராஜா

2011 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சையிலும் விளையாட்டு நிகழ்விலும் அகில இலங்கைச் சாதனை படைத்த மாணவர்களுடன் அதிபர் ஆசிரியர் குழாம்






அகில இலங்கைப் பாடசாலை மெய் வல்லுநர் போட்டி 2011 இல் பங்கு பற்றிய எமது கல்லூரி தடகள வீரர்களுடன்...




கல்லூரியின் சிரமதானத்தின் போது.....

# பௌதிக வள விருத்தி






# மேலாண்மைத்தெரு விலகும் தா்மரதம்



இ.சு.முரளிதரன்
**B.A(Hons)P.G.Dip.in.Ed**

பாசாங்கற்ற பரிபாலனத்தை வாழ்த்த
மனமுடக்கங்களைத் தகா்த்த
வாா்த்தைத் தோரணங்களோடு வருகின்றேன்.

மணிவிழாக் காணும் முதல்வரே!
உங்கள் ஆட்சிக் காலத்தில்
அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்
ராஜபாட்டையில்
என் நடை வண்டியும் பவனி வந்தது.

“தா்மம் தலை காக்கும” என்பா்
தா்மமே “தலையாக” அமைவது
கொடுப்பினை தானே?
சிம்ம சொப்பனங்களுக்கு கொம்பு சீவும்
அதிபா்கள் மத்தியில் - நீங்கள்
வசந்தகால வாத்சல்யம்!

பதவி உங்களைத் தேடி வந்த போது
நமத்துப் போன தீக்குச்சி ஒன்று
நாற்காலியில் அமா்வதாக விஷமப் புன்னகை சிந்தினாா்கள்
சுய சூட்டில் பற்றி வேய்ங்காட்டில் விழுந்தீா்கள் கானகமே ஜ்வாலித்தது
எரிமலை ஒப்பனையிட்ட ஏகாதிபத்தியங்கள் அதிா்ந்தன.

21 ம் நூற்றாண்டில்
‘கிசு கிசு’ இல்லாமல்
‘கறை படாத கரங்களோடு’
அதிகாரிகளின் பாதணியை வணங்காத
சுய கௌரவத்தோடு
‘வசை மொழிக்குள்ளாகாத வசீகரத்தோடு’
ஓய்வு பெறும் ஒரே அதிபா்
நீங்களாகத்தான் இருக்கும்!

ஒவ்வொரு கல்லூரியிலும்
கலைமகளின் ஆசனத்தை
திருமகளே கைப்பற்றி வைத்திருக்கிறாள்.
உங்கள் ஆட்சியில்தான்
திருமகளின் சிந்தனை காலாவதியானது!

தமிழர்கள்
புத்தகத்துள் புதைத்த மயிலிறகு
குஞ்சு பொரிக்காத துயரத்தைச் சுமந்த
கோடி விழிகளில்
உங்கள் ஜோடி விழி
முதன்மையானது.
மாலையின் ஸ்பரிசத்திற்கு புரிந்த எதிர்வினை
ஏக்கத்தின் சமாதிகளில் எதிரொலிக்கிறது.

அவஸ்த்தைக் கிரீடம் அகன்று விட்டது
நாற்காலிச் சிறை நகர்ந்து விட்டது.
அதிகார மேலாண்மையற்ற
விவசாய ராஜ்யம்
யுவனுக்காக் காத்திருக்கிறது.
தூசு படிந்து நூல்களாகிய அகலிகை
உங்கள் தொடுகைக்கு தவமிருக்கிறாள்.
உறவுகளாகிய கதை சொல்லிகள்
ஓய்வான செவிகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.
அனுபவ மாளிகை
ஒரு இராஜகுமாரனுக்காக
வாசல் திறந்து வைத்துள்ளது.
அர்த்தமற்ற அடம்பிடிப்புகளை
ஓரங்கட்டி விட்டு
உற்சாக இளைஞனாக மறு கூர்ப்பு அடையுங்கள்!
60 இற்கு பின்னர்தான் வாழ்க்கை அழகானது.

# பிற தொடுபடான் தன்மதம் கொளல்



## மணிவிழாக் காணும் அதிபர் திரு.க.தர்மலிங்கம் அவர்களின் கொள்கை பற்றிய பதிவு

செல்லத்துரை சுதர்சன்

மெல்லெனப் பாயும் மகாவலி ஆறு மாலை வேளை நான் காலாற நடக்கிறேன். மகாகவியின் பாடல் காற்றில் பூசி வரும் ஓசை அந்த ஓசையோடு தொலைபேசி ஓசை சுதர்சன் நான் ஜோதீஸ்வரன் சேர் பேசுறன்..... அறிந்திருப்பீர்கள்தானே தருமலிங்கம் சேருக்கு மணிவிழா மலரில் போட நீர் ஒரு கட்டுரை தர வேணும் சரியோ? வேளைக்கு, என் நெஞ்சுக்குள் நிறைந்த ஆசிரியரின் வேண்டுகோளும், செய்தியும் மாலை நேர மனசுக்கு மேலும் இதமூட்டியது. "ஓம்சேர் தாறன்" என்று கூறி கேட்டதற்கு நன்றியும் சொல்லிவிட்டு எழுதுவது பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன். எதை எழுதலாம்? பணியாலும் பதவியாலும் உயர்ந்தோரைப் பற்றி எழுதும் போது மனதைத் தொற்றிக் கொள்ளும் வினா இது. எதை எழுதலாம்.

கல்விச் சேவை ஒன்றிலிருந்து பணியால் உயர்ந்து மணிவிழாக் காணும் ஒருவரைப் பற்றி எழுதும் பொழுது அவரது பெற்றோரில் இருந்து தொழிற்பணி வரை எழுதும் போக்கே பொதுவாக நிலவுகிறது. இந்த அடிப்படையில் திரு.க.தருமலிங்கம் அதிபரை எழுதினால்.....

கணபதிப்பிள்ளை தங்கம் தம்பதிகளின் செல்வப் புதல்வர் 15.08.1952 அன்று கரணவாய் கிழக்கில் பிறந்தார். ஆரம்பக் கல்வியைத் தாமோதரா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை அ.மி கல்லூரியிலும் பெற்றவர். பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக இருந்து விஞ்ஞானப் பட்டதாரியாக உயர்ந்து கல்வித்துறையில் டிப்ளோமா பட்டமும் பெற்றவர். கணித விஞ்ஞான ஆசிரியராக தொழில் பூண்டவர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயின்றவர். பசறை தமிழ் வித்தியாலயம், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றியவர். பின்னர் உடுப்பிட்டி அ.மி.கல்லூரியில் உதவி அதிபராகவும், அதிபராகவும் உயர்ந்தவர் சிறந்த சமூக சேவையாளர் இன மொழிப் பற்றாளர்.... இப்படி இவரைப்பற்றி பட்டியலிட்டு எழுதினால் அவர் வாழ்க்கையில் இருந்து நாம் கற்றுக் கொள்ளும் விழுமியம் தான் என்ன? எதுவுமில்லை.

திரு. தர்மலிங்கம் அவர்களின் வாழ்க்கையில் இருந்து பலரும் பல பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். கண்டு மகிழலாம். ஆனால் அவர் கொள்கையில் உயர்ந்து நிற்பது "பிற தொடுபடான் தன்மதம் கொளல்" ஆகும். தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னர் தோன்றிய வழக்காறு அற்றுப்போன இலக்கணங்களை விடுத்துத் தோன்றிய சீரும் சிறப்பும் வாய்ந்த நூல் நன்னூல் காலத்தால் அழியாக் கல்விக் கொள்கையை

அது தமிழருக்கு வழங்கியது ஒரு கல்விச் சேவையாளனுக்கான கொள்கையை தனது பதினோராவது சூத்திரத்தில் அது விரித்துரைக்கிறது. "ஏழுவகைமதம்" என்பதே அதுவாகும். மதம் என்ற பதம் கோட்பாடு அல்லது கொள்கை எனக் கொள்ளப்படுகிறது. ஒருவன் கல்விச் சேவையில் மணிவிழா நாயகர் க.தருமலிங்கம் அவர்கள் ஒரு கணித விஞ்ஞான ஆசிரியர் என்ற வகையில் அவரின் இக் கொள்கையை விஞ்ஞான விதி ஒன்றுடன் பொருத்திப் பார்த்து பொருந்துகிறதா எனச் சிந்திக்கத் தலைப்படலாம்.

விஞ்ஞான மேதை சேர்.ஐசாக் நியூட்டனின் முதலாவது விதியை நாம் அறிவோம். "புறவிசைகள் தாக்காத போது ஓய்வில் உள்ள பொருள் ஓய்விலும் சீரான இயக்கத்திலுள்ள பொருள் தொடர்ந்தும் அதே நிலையில் இருக்கும்" என்பதே அவ்விதி. அதாவது புறவிசை தாக்காத போது இயங்கிக் கொண்டிருந்த உள்ள பொருள் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் என்பதே அவ்விதியின் தாற்பரியம் விசையைப் பயன்படுத்தி ஒரு பொருளின் வேகத்தைக் கூட்டலாம், குறைக்கலாம், இயக்கத்தை நிறுத்தலாம். திசையை மாற்றலாம், பருமனை மாற்றலாம். கல்வி மற்றும் சமூக காரணியை இலட்சியமாக வைத்துக் கொண்டு பயனிக்கும் மணிவிழா நாயகர் க.தர்மலிங்கம் அவர்கள் "ஏது வரினும் இடர்படமாட்டோம்" எனும் அடிப்படையில் எந்தத் திசையில் இருந்து எந்த எதிர்ப்புவிசை வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாதவர். எதிர்ப்பு விசைகளால் அவர் தனது சேவைப் பயனத்தை நிறுத்திவிடவில்லை. ஆனால் நியூட்டனின் விதிப் படி அவர் இயங்கியிருந்தால் அவரின் சேவைப் பயனம் தடைப்பட்டிருக்கும். பாதை மாறியிருக்கும். பயனற்றுப் போயிருக்கும். எனவே புறவிசையின் தாக்குதலால் பொருளின் நிலையில் மாறுபாடுகளை ஏற்படுத்தலாம். என்ற நியூட்டனின் விதி இவரது தலைமைத்துவ ஆளுமைக்குச் செல்லுபடியற்றதாகிறது. எந்த எதிர்ப்பு விசைகள் தாக்கினாலும் கல்லூரியின் வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டு உழைத்ததை உயர்தரப் பெறுபேறுகளும், இணைப்பாடவிதானச் செயற்பாட்டு வெற்றிகளும் காட்டி நிற்கின்றன.

எதிர்ப்பு விசைகண்டு கலங்கித் தடுமாறியிருந்தால் இவை கிட்டா. தன் கொள்கையில் இருந்தபடியே எந்தப் புறவிசைகள் தாக்கினாலும் தன்னை மாற்றாது செயற்பட்டதால் இவர் நியூட்டனின் முதல் விதியை மீறி விடுகின்றார். அவர் கற்ற நியூட்டனின் விதியை மீறியது அவரது தலைமைத்துவ ஆளுமையின் சிறப்பே ஆகும். எனவே கணித, விஞ்ஞான ஆசிரியரான இவருக்கு விஞ்ஞான விதி செல்லுபடியாகததால், "பிற தொடுபடான் தன்மதம் கொளல்". என்ற தமிழர் இலக்கணவிதியே ஏற்புடையதாகிறது.

எனவே அவரின் விதியில் அவர் பயணிக்க அவர் வணங்கும் மூத்த விநாயகப் பெருமானை அவருக்காக வணங்குதலே ஏற்புடையது ஈடுபடும் போது கொண்டிருக்க வேண்டியது ஏழு கொள்கைகளில் தலையாயது "பிறதொடுபடான் தன் மதம் கொளல்" என்பதாகும். இக் கொள்கையே தலைமைத்துவ ஆளுமையின் அடிப்படை அதாவது பிறர் கொள்கைக்கு உடன்படாமல் ஒருவன் தன் கொள்கையையே கொள்ளுதல் என்பது இதன் விளக்கமாகும். செயலாற்றும் போது பிறர் கொள்கைக்கு உடன்படுதல்,

பிறர் கொள்கையை மறுத்தல் முதலிய பிற ஆறு கொள்கைகளும் ஒருவரின் அதிகப்படியான, அருவினையை வெளிப்படுத்த மாட்டாது மணிவிழா நாயகர் க.தர்மலிங்கம் அவர்களின் தலைமைத்துவ ஆளுமையின் வழி நிற்பதே அவரின் செயற்பாட்டில் அதிகம் வெளிப்படுத்துவது இக் கொள்கையே.

போரின் கொடூரங்களில் இருந்து தமிழ்ச் சமூகம் விடுபடத் தொடங்கிய காலத்தில் பௌதிக வளத்தினால் உடுப்பிட்டி அ.மிகல்லூரி மீண்டும் நிமிரத் தொடங்கியது. அக் காலத்தில் தான் கற்ற கல்லூரிக்குச் சேவையாற்ற வேண்டும் எனும் பெருவிருப்பு உந்த இடமாற்றம் பெற்று எமது கல்லூரியில் இணைந்து உதவி அதிபராய், அதிபராய் தொடர் பணி ஆற்றி வருகிறார். கற்பித்தலோடு மட்டும் நிறைவு பெறாத அவர் பணி நிர்வாகத்திலும் வெளிப்பட்டது. கல்லூரியின் பௌதீக முன்னேற்றத்தில் தன் முகத்தை முனைந்து காட்டாது பின்னணியில் இருந்து பல பணிகளை ஆற்றியுள்ளார். எமது கல்லூரியில் நடைபெற்ற புதிய கட்டிட வேலைகள் மற்றும் புனரமைப்பு வேலைகளில் தனது பெயரை அதிகம் வெளிப்படுத்தி தம்பட்டம் அடிக்காது தன்னையே வெளிக்காட்டாது பணியாற்றினார். திரு.க.தர்மலிங்கம் தான் அதிபராகும் வரை கல்லூரியின் முன்னேற்றத்தில் வெளித்தெரியாத ஒரு முக்கியமான மறைமுக செயற்பாட்டளராய் விளங்கினார்.

அவர் அதிபராகிய பின்னர் கல்லூரியின் கல்வி சார் முன்னேற்றத்தை அதிகம் முதன்மைப்படுத்தியவர் கல்லூரியின் பழையமாணவன் என்ற வகையிலும் அவருடன் நெருங்கிப் பழகியவன் என்ற வகையிலும் பல தரப்புகளிலும் இருந்து அவருக்கு ஏற்பட்ட எதிப்புகள் மற்றும் ,நெருக்கடிகள் பற்றி நான் நன்கு அறிவேன் ஆனால் அவர் அவற்றை ஒரு பொருட்டாகவே எண்ணியதில்லை. தன்னை முதன்மைப்படுத்தாது. பணியை மட்டும் முதன்மைபடுத்தும் இவரை எந்த நெருக்கடியும் எதிர்புகளும் எதுவும் செய்து விடப் போவதில்லை. தான் எண்ணித் துணிந்த கருமத்தை நிறைவேற்றுவது தலைமைத்துவ ஆளுமை சார்ந்தது. திரு.க.தருமலிங்கம் அவர்கள் செயலைத் தொடங்கினால் அச்செயல் முடியும் வரை உழைப்பார். இடையில் வரும் எந்த விதமான இடையூறுகளையும் பொருட்படுத்தாது விமர்சனங்களையும் , விதண்டா வாதங்களையும் பார்த்து விளக்கமளிக்காது செயலினை முடித்துக் கல்லூரியை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டவர் எந்தச் சூழ்நிலையின் தாக்குதலுக்குட்படாமல் பணி செய்பவர். தாக்குதல் கண்டு தளராதவர் செயலில் திறம்பாதவர். இந்த பிறர் கொள்கைக்கு உடன்பட தன் கொள்கையை நிறைவேற்றும் ஆளுமைப் பண்பு இவரிடம் கண்டு மகிழத்தக்கது. இதுவே, ‘பிறதொடுபடான் தன்மதம் கொளல்’ எனும் நன்னூற் கொள்கையோடு அவர் பொருந்தும் மாண்பு.

# Fluency and Accuracy in English language.



By: Mr Thiraviam Don Rolojan
(Dip. in English)
Teacher of English – J/U.A.M. College

## What is fluency?

Fluency doesn't merely mean speaking fast without hesitating. It can be said that being able to express one self despite of making mistakes, despite of lacking all the vocabulary he or she needs. It means hesitating in a way that others keep listening and wait for you to continue, rather than finishing your sentences for you. Even native speakers of English may make mistakes while they communicate with different people and they can't think of exactly the right words some of the time. The opposite of fluency is being **tongue – tied** when speaking English or not speaking at all. Fluency is closely connected with confidence, and it takes time to develop.

However in writing, you can stop for a while after each word you want to write because you can think of the next words. But you can't do it in the conversation. You should keep talking otherwise people would be tired of waiting and stop listening to you. Fluency means speaking slowly and clearly, not speaking fast and unclearly. **In a nutshell**, it means using simple words to express meaning.

Speaking generally, there are two types of language learners:

* The first type of language learner doesn't really care about making mistakes or errors. They have an idea in their head of what they want to communicate, and they say it with whatever words and language feel the most natural. They make frequent mistakes, sometimes in every sentence. Their grammar can be a mixture of English and their native language.

**These learners have high fluency, but low accuracy.**

**What is Accuracy?**


Accuracy means not making too many mistakes. We certainly think our students should become more fluent in the mean time we want them to become more accurate. During our lessons, we do different exercises to help students speak more accurately. We guide them to learn and correct their errors themselves. For the students in a classroom, specially grammar lessons help them to become more accurate.

* The other type gets really worried of making errors. They think about everything that they say carefully. Sometimes, if they start to say something and then realize they have made a mistake, they will stop and correct the mistake, may be returning to the beginning of the sentence. They might pause between each word, thinking what the right words to use before they say it.

**For these learners, generally, their accuracy is high, but their fluency is low.**

Anyhow, students can't be expected to express their ideas fluently without making mistakes. Expressing an idea in English becomes difficult average students as it is a second language. Making mistakes is a part of learning a language. They should be very careful and should pay much attention to what they are saying.

# ஆய்வியல்



# அனர்த்த சூழலில் அவசியமான சீர்மிய உளவியல்



கலாநிதி த.கலாமணி -
சட்டத்துறைத் தலைவர்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சீர்மிய உளவியலானது (COUNCELLING PSYCHOLOGY) மனிதருக்கு நாளாந்த வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து, சவால் மிக்க நிலமைகளை வெற்றி கரமாகச் சமாளித்து நாளாந்த வாழ்வியற் தொழிற்பாட்டை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டது. இன்று சீர்மிய உளவியலாளர்கள் பலரும் தனியாட்களுடனும் சோடிகள் அல்லது குழுக்களுடன் இணைந்து அவர்களின் நலன்களுக்காக உழைக்கின்றார்கள். மனிதரின் நல்வாழ்வை முன்னேற்றுவதும் மனத்துயரங்களை குறைப்பதற்கு உதவுதலும் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு தாமே தமது தீர்மானங்களை மேற்கொள்ள உதவுதலும் சீர்மிய உளவியலின் குறிக்கோள் ஆகும். அனர்த்தங்களுக்கு அனைவருக்கும் அவசியமான ஒன்றாகக் காணப்படுவதே இந்த சீர்மிய உளவியலாகும்.

எமது நாட்டில் ஏற்பட்ட போர்க்கால சூழல் அனைவரிலும் ஏதோ ஒரு விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தொடர்ந்து கொண்டிருந்த போரினாலும் போர்ச் சூழலாலும் வளர்ந்தோம். சிறுவர் என்ற பேதமின்றி எல்லோரது மனங்களும் ஏதோவொரு தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன. பல சந்தர்ப்பங்களில் போர் தொடர்ந்து கொண்டு, அனர்த்தங்களை தொடர்ந்து உருவாக்கிய வண்ணம் இருந்தமையால் அதிலிருந்து மீண்டு எமது பழைய வாழ்க்கைக்குத் திரும்ப முடியாதுள்ளது.

நாம் சூழலிலுள்ள புதிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்ற போது அவை எங்கள் உள்ளத்திலும் உடலிலும் நெருக்கீடுகளாக உணரப்படுகின்றன. சில வகையான கொடூர நெருக்கீடுகள், கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தவல்லன. இவற்றைவிட சாதாரண வாழ்வியல் அனுபவங்களுக்குள் வராத பேரழிவுகள், உயிரிழப்புகள், எதிர்பாராத வகையில் ஏற்படுகின்றன, எங்களது கட்டுப்பாட்டிற்குள் இல்லாத நெருக்கீடுகள் பெரும்பாலானோரில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

திரும்பத் திரும்ப இடம்பெறுகின்ற தொடர்ச்சியான யுத்த சூழ்நிலை, தனி மனிதர்களை மாத்திரமன்றி ஒரு சமூகத்தையே ஒட்டுமொத்தமாகப் பாதிக்கிறது. பாதிப்புக்குள்ளான சமூகம் அதற்கென உரித்தான பல இயல்புகளைக் காட்டி நிற்கும். மந்தை இயல்பூக்கம், மறுப்பு நிலை, நியமங்களின் சிதைவு, சமூக முன்னேற்றத்திற்கான உற்சாக மின்மை, சமூக விழுமியங்களின் சீரழிவு, சமூகச் சீரழிவு என்பன இவற்றுள் சிலவாகும். இப்படியான சமூக நிலமையில் சமூகமானது நோயுற்ற சமூகம் எனவும், இந் நிலைமை சமுதாய வடு எனவும் அழைக்கப்படுகின்றன. இந்நிலையானது, சிறுவர்களை மட்டுமன்றி அடுத்துவரும் சந்ததியினரையே அழிக்கக் கூடியதாகும்.

நெருக்கீடுகளின் தாக்கங்கள் மாணவர்களில் தீவிர பாதிப்புகளை ஏற்படுத்திவிடுகின்றன. இவ்வாறான நிலைமைகளில் அவர்களின் மீது நெருக்கீடுகளினாலான தாக்கங்களைக் குறைப்பதற்கு அவர்களுக்கு உதவியளித்தல் அவசியமாகும். பிள்ளைகளுக்கு மாத்திரமன்றி வளர்ந்தோருக்கும் கூட, போர்ச் சூழலிலும் வேறு அனர்த்தம் நிகழும் சுழலிலும் ஏற்படும் நெருக்கீடுகளின் தாக்கங்களைக் குறைக்க ஆலோசனையும் உதவியும் அவசியம். இந்த வகையிலேயே சீர்மிய உளவியலின் அவசியம் குறித்து நாம் சிந்திக்க வேண்டியவர்களாவோம்.

இன்று உள் நாட்டில் இடம்பெற்ற போரினால் பிள்ளைகள் எதிர்கொண்ட சில அவலங்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

* குடும்ப சமூக இணைப்புகளை இழந்து புதிய சூழலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை
* தாங்கள் பழகிய சூழலில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை
* அகதி என்ற நிலையில் புதிய கலாசாரத்தை கற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை.
* நெருங்கியவரின்/தெரிந்தவரின் கொலை,சித்திரவதை,பயமுறுத்தல் என்பவற்றை நேரடியாகக் கண்டுள்ளமை.
* நேரடியாக வன்செயல்களால் பாதிக்கப்பட்டுள்ளமை.
* உடலியற் காயங்களுக்கு ஆளானமை
* தமது விருப்பத்திற்குரிய செல்லப்பிராணிகள்,விளையாட்டுப் பொருட்களை இழந்தமை.

போர்க்காலச் சூழலினால் நெருக்கீடுகளுக்குள்ளான பிள்ளைகள் பல்வேறு நடத்தை மாற்றங்களைக் காட்டுபவராயிருப்பார். இப்பிள்ளைகள் பொதுவாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. மனதை ஒருமுகப்படுத்தாமை
2. பயம்
3. பாடசாலைக்குச் செல்ல மறுத்தல்
4. கற்றலில் இடர்பாடு
5. சோதனை அழுத்தம்
6. பேச்சில் சிரமம்
7. கூட்டாகச் செயற்படுவதில் இடர்பாடு
8. தாழ்வு மனப்பான்மை
9. புலன் உறுப்புகளின் குறைபாடு

இதே வேளை பாரிய நெருக்கீடுகளுக்கு உள்ள பிள்ளைகளின் பிரச்சினைகள் சற்று வேறுபட்டவையாகும். இவை பின்வருமாறு அமையும்.

1. அதீத செயற்பாட்டு நிலை
2. அதீத முரட்டுத்தனம்
3. அதீத பயம்
4. பிரிவுப் பதகளிப்பு
5. ஒதுங்குதல்
6. மனச்சோர்வு

இவ்வாறாக நெருக்கீடுகளுக்கு உள்ளாகும் பிள்ளைகளை அவர்களின் பிரச்சினைகளிலிருந்து மீட்டெடுப்பதற்கு சீர்மிய உளவியல் (Psychology) பெரிதும் உதவுகிறது. சீர்மியம் என்பதற்கு Carl R.Rogers பின்வரும் விளக்கத்தைக் கொடுக்கிறார்.

"ஒரு மனிதருக்கு அவரைப் பற்றிய சுய விளக்கத்தை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் அவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவரே தீர்த்துக் கொள்ளுமாறு வழங்கும் உதவியே" சீர்மியம் ஆகும்.

சீர்மிய உளவியலானது பல்வேறுபட்ட சீராக்கப் பிரச்சினைகளுடனும்

தெரிவுப்பிரச்சினைகளுடனும் சம்பந்தப்பட்டதாகும். சிகிச்சை உளவியலானது (Chamical Psychology) மனிதர்களின் தவறான நடத்தைகளுக்கும் பரிகாரம் காண்பதாக அமையும். ஆனால், சீர்மிய உளவியலின் அடிப்படை கல்வியூட்டலாகும். ஒவ்வொரு தனியாளும் தனக்கேயான கல்வி சார் நோக்கங்களையும் தொழில்சார் நோக்கங்களையும் வகுத்துக்கொள்ள சீர்மிய உளவியல் உதவுகிறது. சீர்மியம் என்பது உளவளத்துனை என்ற அடிப்படையில், சீர்மியருக்கும் சீர்மிய நாடிக்கும் இடையே ஏற்படும் புரிந்துணர்வு வளர்ச்சியினூடான ஒரு மனிதத்துவ செயன்முறை அதுவாகும்.

இன்று கல்வி நிறுவனங்களிலும் தொழில்சார் நிறுவனங்களிலும் ஆற்றுப்படுத்துநர்களை(Comsellors) நியமனஞ்செய்திருத்தல் வேண்டுமென வற்புறுத்தப்பட்டு வருகின்றது. இந்நிறுவனங்களிலுள்ளோர் முகங்கொடுக்க வேண்டியுள்ள பல்வேறு பிரச்சினைகளிலிருந்தும் விடுபடுவதற்கான சீர்மியத்தை சீர்மிய உளவியலாளர்கள் அல்லது ஆற்றுப்படுத்துநர்கள் அல்லது உளவளத்துணையாளர்கள் வழங்குவர். இவ்வாறாக ஆற்றுப்படுத்தலை வழங்கும் ஆற்றுப்படுத்துனரிடம் பல்வேறு சிறப்பியல்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அவையாவன:-

1. ஒத்துணர்வு
2. பிறர்நல விருப்பு
3. நேர்மானம்
4. நிபந்தனையின்மை
5. திடநிலை
6. நகைச்சுவையுணர்வு
7. துன்பியல் உணர்வு
8. தன்னுணர்வு
9. இரகசியம் பேணல்
10. புரிந்துணர்வு

மேலும், பிரச்சினைகளை இனங்காணுதல் , வகைப்படுத்தல், பிரச்சினைகள் தொடர்பான தெளிந்த புலக்காட்சியை ஏற்படுத்தி சீர்மியத்தை வளம்படுத்துதல் முதலியவை சீர்மியரால் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன.

நேரடியான முனைப்பு வினாக்கள்,ஆழ்ந்து கிரகித்து கேட்டல், சீர்மிய நாடிக்கு உற்சாகமளித்து பேச வைத்தல்,ஆலோசனை பெறுபவரின் வினாக்கள் மீது குவியப்படுத்தலை முன்னெடுத்தல் முதலிய நுட்பவியல்களைக் கையாண்டு பிரச்சினையின் இயல்பையும் செறிவையும் இனங்காண முடியும்.

சீர்மிய நாடியின் வாழ்நிலை இயல்புக்கேற்றவாறு பிரச்சினைகள் பல வகைப்பட்டவையாயும் பல கோணங்களை கொண்டவையாகவும் காணப்படும். ஏற்கனவே குறிப்பிட்ட போர்க்காலச்சூழல் சார்ந்த பிரச்சினைகளோடு

1. பரீட்சைகள் தொடர்பான பிரச்சினைகள்
2. கற்றல் இடர்பாடுகள்
3. தொழில்சார் பிரச்சினைகள்
4. பாலியற் பிரச்சினைகள்

5. பொருளாதாரப் பிரச்சினைகள்
6. தொடர்பாடல் பிரச்சினைகள்

என்பவற்றையும் கருத்திற் கொண்டு சீர்மியத்தை வழங்கலாம்.

சீர்மியருக்கு பிரச்சினை விடுவித்தல் நுட்பங்கள் பற்றிய அறிவு இன்றியமையாதது. பிரச்சினை விடுவித்தற் சுற்று (Problam) பின்வரும் படிநிலைகளை உள்ளடக்கியது.

படிநிலை 1 :- இக்கட்டத்தில் பிரச்சினை பற்றிய தெளிவை சீர்மிய நாடியும் சீர்மியரும் செப்பமான உரையாடல் வாயிலாக அறிந்து கொள்வார்கள்.

படிநிலை 2 :- பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்புடையதான நடவடிக்கைகளை அவ்விருவரும் சேர்ந்து உருவாக்கிக் கொள்வர். இதற்கு சிந்தனைக்கிளறல் (brainstorming) என்ற உபாயம் பயன்படுத்தப்படும்.

படிநிலை 3 :- படிநிலை 2 இல் உருவாக்கப்பட்ட தீர்வுப்பட்டியலிருந்து சரியான தீர்வை சீர்மிய நாடியின் விருப்புடன் தெரிவு செய்தல்

படிநிலை 4 :- பிரச்சினைக்குரிய பொருத்தமான தீர்வை சீர்மிய நாடி செயற்படுத்தல்.

படிநிலை 5 :- தீர்வுச் செல்முறை வினைத்திறன் மிக்கதா அல்லது எதிர்பார்த்த வெற்றியைத் தந்துள்ளதா என இருவரும் ஒன்று சேர்ந்து மதிப்பிடல்.

இவ்வாறாக சீர்மியம் இடம்பெறும் ஒரு சீர்மியநாடிக்கு ஒரு சீர்மியர் என்ற ஒன்றுக்கு ஒன்று என்ற நிலையிலேயே சீர்மியம் இடம்பெறும். சீர்மிய உளவியல் பற்றிய கற்கை சீர்மியராக வருவதற்குரிய பயிற்சியையும் உள்ளடக்கியது. பயிற்சி பெற்ற சீர்மியர் ஒருவரால் கையாளப்படக், கூடிய பிரச்சினைகளே சீர்மியம் எனும் செயன் முறையில் எடுத்துக்கொள்ளப்படும். இதற்கு அப்பாற்பட்ட பிரச்சினைகள், சிகிச்சைக்குரியன (therapeutic) என்பதால் இவை சிகிச்சை உளவியல் (Clinical pychology) எனும் துறையின்பாற்பட்டவையாகும்.

எனவே சீர்மிய உளவியலானது சீர்மியத்தை அடிப்படையாகக் கொண்ட உளவியல் அம்சங்களை உள்ளடக்கிய ஓர் ஒழுக்கம் (discipline) அல்லது கற்கைநெறி (Course of study) ஆகும். இன்றைய அனர்த்த சூழலில் இது அனைவருக்கும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

# பத்திரிகைப் பெண்ணே!

(கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்)

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்களில் புரட்சிக்கவி பாரதிதாசன் புகழ் பெற்றவர். 29.04.1891 இல் புதுவையில் பிறந்தவர். இவரது தந்தை கனகசபை முதலியார் பெரிய வணிகர் தாயின் பெயர் இலக்குமி அம்மாள் பாரதிதாசனுக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுப்புரத்தினம் சிறுவயதிலேயே பிரஞ்சு மொழியையும் பயின்றார் ஆயினும் தமிழ் மொழியிலே கொண்ட விருப்பினால் "கல்வே" கல்லூரிக்கு சென்று தமிழை பயின்றார். அங்கு இரண்டு ஆண்டு தமிழைக் கற்று கல்லூரியிலேயே முதலாவதாகத் தேர்வுற்றார். 18 வயதிலே அரசினர் கல்லூரித்தமிழாசிரியரானார். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் பெரு விருப்புக் கொண்டிருந்தார். தமிழ் மொழியறிவும் இசை உணர்வும் சீர்திருத்தச்சிந்தனைகளும் அவர் உள்ளத்திலே கவிதையுருவில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. அதனால் சிறு வயதிலேயே சிறிய சிறிய பாடல்களைச் சுவையாக எழுதி வந்தார்.

சுப்பரத்தினம் நண்பர் ஒருவருடைய திருமணத்திற்குச் சென்றிருந்த போது பாரதியரின் நாட்டுப் பாடலைப் பாடினார். அவ்விருந்திற்கு பாரதியாரும் வந்திருந்தார். அந் நாட்டுப் பாடலே சுப்புரத்தினத்தைப் பாரதியாருக்கு அறிமுகம் செய்து வைத்தது. பாரதியார் இவருடைய கவியாற்றலைப் பிறர் அறிய வைக்கும் பொருட்டுப் பாடுமாறு கேட்ட போது "எங்கெங்கு காணிலும் சக்தியடா" என்ற பாடலைச் சுப்புரத்தினம் எழுதிப் பாடினார். அப்பாடல் வருமாறு,

"எங்கெங்கு காணினும் சக்தியடா! தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா! அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியுண்டாம் - அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா! - ஒரு
கங்குலில் ஏழுமுகிலினமும் - வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ? - எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் - அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!

காளை ஒருவன் கல்விச் சுவையைக் - கரை
காண நினைத்த முழு நினைப்பில் - அன்னை
தோளசைத்தங்கு நடம்புரிவாள் - அவன்
தொல்லறிவாளர் திறம் பெறுவான் - ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே - இந்த
வையம் முழுதும் துண்டு செய்வேன் - என
நீள இடையினின்றி நீ நினைத்தால் - அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே!''

இந்தப் பாடல் பல பத்திரிக்கைகளில் பல மொழிகளில் வந்துள்ளது மேலும் இவர் பாரதியாரிடம் ஏறக்குறையப் பத்தாண்டு பழகியவர். பல புனைபெயர்களிலே பாடல்கள் எழுதியுள்ளார். முறுக்கான மீசை, கம்பீரமான தோற்றம் ஆணித்தரமான பேச்சு, தலைக்கேறிய தமிழ் மயக்கம் என்பன இவருடைய தோற்றம். இவர் எழுதிய "பிசிராந்தையார்'' என்ற நாடக நூலுக்கு 1970 ல் சாகித்திய அகாதாமியின் பரிசும் கிடைத்துள்ளது. இவருடைய பாடல்களில் சாதிபேதத்தையும் சமய பேதத்தையும் வெறுப்பபையும் தெளிவாகக் காணலாம். பாரதிதாசனின் புலமைத்திறனைக் காண்பதற்கு ஒரு பாடலே சான்றாக உள்ளது. இவருடைய பத்திரிகை என்ற பாடல் அதற்கான எடுத்துக் காட்டாகும். பத்திரிகையை ஒரு பெண்ணாக பாவனை செய்து பாடிய பாடலாகும் அப் பாடலின் கட்டமைப்பு 7 சிறிய பாடல்களாக அமைந்துள்ளது. அவற்றின் உள்ளடக்கம், தொகுப்பு நிலை , கவிதைச் சுவை, சமூகச் செய்தி என்பவற்றை நோக்கும் போது அவருடைய பாடற் புனைதிறன் நன்கு வெளிப்படுகின்றது.

## உள்ளடக்கம்

பாடல்களிலே புலவர் பொதிந்துள்ள விடயங்கள் பெண்ணின் குண நலன்களைப் பத்திரிகையின் குணநலனாகக் காணும் முயற்சியின் வெளிப்பாடுகளாக உள்ளன. உலகை ஒன்று சேர்க்கும் பெண்ணாகப் பத்திரிகையை உருவகித்துள்ளார். "நறுமண இதழ்ப் பெண்ணே" எனச் சிலேடையாகப் பெண்ணின் உறுப்பையும் பத்திரிகையின் உறுப்பையும் சுட்டிச் சென்றுள்ளார். எல்லாவற்றையும் சேர்த்துப் பிறருக்கு அளிக்கும் பெண்ணின் கொடையுள்ளம் பத்திரிகைக்கும் உரியதெனக் கூறியுள்ளார். "தேனிதழ்" எனப் பத்திரிகையின் உறுப்பையும் பெண்ணின் இதழ்களையும் எடுத்துக் கூறிச் சுவையூட்டியுள்ளார். தாய்மையின் கதை கூறும் பண்பு பத்திரிகைக்கும் உண்டென நிலை நாட்டியுள்ளார். ஏற்ற அறிவுரைகள் கூறி ஆற்றுப்படுத்தும் தாய்மைப் பணியைப் பத்திரிகையும் செய்கிறது என்கிறார். பத்திரிகையின்

ஊடாக ஓவியம், சிற்பம், கவிதை, போன்ற கலைகள் வளர்வதையும் எடுத்துக் காட்டுகிறார். பேச்சுத்திறன், நகைச்சுவை , காதல்நிலை, வீரம் என்பவற்றையும் பத்திரிகைப் பெண்ணின் குணநலன்களாக இவர் எடுத்துக் காட்டியிருப்பது மிகச் சிறப்பானதொரு உத்தியாக உள்ளது. எல்லோரையும் வழி நடத்தும் பண்புடையது பத்திரிகை எனக் கூறும் கருத்து அவருடைய சமூக நோக்கைக் காட்டுகிறது.

## தொகுப்பு நிலை

கவிதை என்பது கருத்துக்களை ஓர் ஒழுங்கிலே அமைக்கும் பண்பையும் உள்ளடக்கிய ஒரு வடிவமாகும். எனவே பத்திரிகை என்னும் கவிதையில் பாரதிதாசனும் இவ்வடிவத்தைச் செம்மையாக அமைத்திருப்பது சிறப்பாகும். பத்திரிகையை ஒரு பெண்ணாக உருவகிக்கும் போது ஒரு தொகுப்பு நிலையிலே கவிதைகளைப் பாடியுள்ளார். முன்னுரையாக அமைந்த முதலாவது கவிதை பத்திரிகையின் தோற்ற நிலையைக் கூறிநிற்கிறது. “பேரறிவாளர்கள் நெஞ்சிலே பிறந்த பத்திரிகைப் பெண்” என்ற சிறப்புத் தொடர் இதனை விளக்கி நிற்கிறது. இருள் நிறைந்த உலகிற்கு ஒளியூட்டக் காலையிலே தோன்றும் கதிரொளி போலப் பத்திரிகை விளங்குவதை எடுத்துக் காட்டியுள்ளார். அடுத்துப் பெண்ணின் பேச்சுப் போல பத்திரிகையும் அறிவுரையாற்றும் தன்மை குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்ணின் ஆற்றல் உலகம் முழுதும் செறிந்திருப்பது போலச் செய்திகளை எல்லோருக்கும் வழங்கும் பண்புநிலையும் பாடப்பட்டுள்ளது. செயற்கை நிலையான செய்திகளையும் இயற்கை நிலையான செய்திகளையும் பத்திரிகை வெளியிடுவது பற்றி அடுத்த கவிதை அமைந்துள்ளது. கதை கூறும் தாய்மைக் குணத்தைப் பத்திரிகையும் செய்யும் பண்பினை அடுத்த கவிதை காட்டுகிறது. தாய் தன்னுடைய குழந்தைகளுக்குப் பல்வேறு கலைகளையும் பயிற்றும் வளர்ப்பு நிலைச் சிறப்பு அடுத்த கவிதையிலே பதிவு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு தொழில் செய்வோரும் தாயின் அன்பான வளர்ப்பில் ஐந்து ஆண்டுகள் கழந்த பின்னர் பத்திரிகையால் வாழ்க்கை பெற்றதாகப் பாரதிதாசன் நிறைவாக அமைத்துள்ள கருத்து அவர் நோக்கத்தைத் துல்லியமாகக் காட்டிநிற்கிறது. பத்திரிகை வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் என்ற கருத்தை முன்னிறுத்தி எல்லோரையும் நாளும் படிக்கத் துண்டும் பத்திரிகையைப் பாராட்டியுள்ளார்.

## கவிதைச் சுவை

ஒரு கவிதையைப் படிக்கும் போது அது உள்ளத்தில் ஆழமாக பதிய வேண்டும் பத்திரிகைப் பெண் என்ற கவிதை இத்தகையது. பாரதிதாசன் பெண்மையின் பண்புகளைப் பத்திரிகையில் காண வைப்பது ஒரு புதிய பாவனை பண்டைய புலவர்களும் பெண்ணின் குணவியல்புகளைப் பாவனை செய்து கவிதை இயற்றியுள்ளனர். ஆனால் பாரதிதாசன் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியாலும் மேலைத்தேய அறிவு நிலையாலும் தமிழுக்கு அறிமுகமன பத்திரிகையிடம் பெண்ணின் குணநலன்கள் இருப்பதாகக் கூறியிருப்பது புதுமையாகும். வெள்ளைத் தாளிலே கறுப்பு எழுத்துருவில் வெளிவரும் பத்திரிகையைப் பாரதிதாசன் காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி எனக் கவிச்சுவையுடன் அறிமுகம் செய்கிறார். காலையில் வெளிவரும் பத்திரிகை உறங்குபவரை எழுப்பும் எழுச்சியைப்

பதிவு செய்துள்ளார். "நறுமண இதழ் பெண்" என்ற தொடர் பெண்ணின் சுவையும் நறுமணமும் உடைய இதழையும் பத்திரிகையின் வெளிவரும் இதழையும் ஒன்றாக்கிக் காட்டுவது ஒரு புதுச் சுவையைத் தருகிறது.

ஆனால் கவிதை என்பது ஒரு கருத்தை உள்ளத்தில் விதைப்பதாகவும் இருக்க வேண்டும். அறிஞர் எண்ணங்களை மக்கள் உள்ளத்திலே விதைத்து அவர்களது எண்ணங்களையும் செழிக்க வைப்பது பத்திரிக்கை. எனப் பாரதிதாசன் கூறுவது.கவிதையைச் சிறப்பாக்கி உள்ளது. நல்லதொரு உருவகத்தின் மூலம் இதனை விளக்கியுள்ளார் ஓடையிலே நீரை மொண்டு பயிருக்கு ஊற்றிச் செழிக்க வைப்பது. போல அறிஞர்களுடைய இதய ஓடையிலே உள்ள அறிவு என்னும் நீர் மொண்டு மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றி நெறிப்படுத்த வேண்டுமெனக் கூறியுள்ளார். பத்திரிகையின் உள்ளடக்கம் எவ்வாறமைய வேண்டுமென்பதையும் புலப்படுத்தியுள்ளார். காவியம் தருதல், ஓவியம் தருதல், விகடம் செய்தல், காதல் தந்து கூவுதல், வீரப் பேச்சுக் கொட்டுதல் எனப் பத்திரிகைத் தாளிலே அமையும். எல்லா விடயத்தையும் கூறுவதன் மூலம் ஒரு சிறந்த விமர்சனத்தையும் செய்துள்ளார். சமூகத்திலே ஒரு சமநிலை பேணும் கருவியாகவே பத்திரிகை இருப்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார். சாதாரண பொதுமக்களும் உலகைக் காக்கும் பெரியோரும் எடுத்துப் படிக்கும் நிலையில் பத்திரிகை அமைய வேண்டும் என்பதே அவருடைய கவிதை கூறும் செய்தியாக உள்ளது. பத்திரிக்கையைப் படியாதவர் நிலை பற்றிக் கூறும் போது வருமாறு கூறியுள்ளார்.

"நறுமண இதழ்ப் பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்"

உலக நடப்புக்களை நாமறிவதற்குப் பத்திரிகையே பேருதவி செய்யும் பாரதிதாசன் வாழ்ந்த காலத்தில் இன்றுள்ள தகவல் தொழில்நுட்பக் கருவிகள் தோண்றியிருக்கவில்லை. எனவே பத்திரிகை மூலமே எல்லாவற்றையும் அறிய வேண்டியிருந்தது. பெண்ணின் நலம் உலகைக் காப்பது போலப் பத்திரிகையே அறிவு நலத்தைக் காப்பதை மிக அழகாகப் பாடியுள்ளார். அவருடைய உலகு பற்றிய சிந்தனையைக் கவிதையில் பயன்படுத்தியுள்ள பார், உலகம், குவலயம், நெடும்புவி, மாநிலம், செகம் போன்ற சொற்கள் நன்கு புலப்படுத்திக் காட்டுகின்றன.கவிதையின் சிறப்புக்கும் கருத்துப் புலப்பாட்டிற்கும் சொற்களே பெரிதும் காரணமாகின்றன. இச் சொற்களை நன்கு பொருள் துலங்கும் வகையில் அவற்றைத் தொடராகச் சிறப்புற அமைத்துள்ளார். அவற்றை வருமாறு காணலாம்.

" பாரிடைத்துயில்வோர்"
"குவலயம் ஓங்கச் செய்வாய்"
"நெடும்புவி மக்கள்"
"மாநிலத்தில் ஊனிடை உயிர்"
"உலகினை ஒன்று சேர்க்க"
"செகங்காக்கும் பெரியோர்"

இத்தகைய உலகு தழுவிய சிந்தனை ஒன்று பாரதிதாசனிடம் இருந்ததைக் கவிதை சான்று காட்டி நிற்கிறது. அவருடைய தமிழ்மொழிப் புலமையும் கவிதைக்குப் புதிய சுவையை காட்டி நிற்கிறது. பாரதிக்கு பின் எளிய மொழி நடையில் புதிய விடயங்கள் பற்றி பல கவிதைகளைப் பாரதிதாசன் பாடியுள்ளார். அவற்றுள் பத்திரிகையென்னும் கவிதை தனிச்சிறப்புடையது.

## சமூகச் செய்தி

பத்திரிகை என்னும் கவிதையில் கவிஞர் கூறும் சமூகச் செய்தியானது கூர்மையான கவனத்திற்குரியது. கடைசியாக அமைந்த கவிதையில் அச் செய்தி கூறப்பட்டுள்ளது.

" தெருப் பெருக்கிடு வோருக்கும்
செகம் காக்கும் பெரியோர்க்கும் கை
இருப்பிற் பத்திரிகை நாளும்
இருந்திடல் வேண்டும் மண்ணிற்
கருப் பெற்றுருப் பெற்றிளருடை
பெற்றுப் பின்னர் ஐந்தே ஆண்டுகள்
வரப் பெற்றார் பத்திரிகை நாளும்
உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்".

உலகத்திலே வாழும் மக்களிடையே சமநிலை தோன்றுவதற்குக் கல்வியறிவே துணை செய்யும். அந்தக் கல்வியும் ஏற்றத் தாழ்வின்றி கிடைக்க வேண்டும். ஏற்றத் தாழ்வில்லாத கல்வியறிவைப் பத்திரிகையே வழங்கவல்லது. பள்ளிக் கல்வியைப் பெறும் வாய்ப்பற்றவரும் பத்திரிகையைப் படிப்பதன் மூலம் அறிவைப் பெறுவார். சாதாரண கூலியாகத் தெருவைப் பெருக்கித் தொழில் செய்வோரும் உலகைக் காக்கின்ற பொறுப்பை வகிக்கின்றவர்களும் நாள்தோறும் பத்திரிகையைப் படிக்க வேண்டும். பத்திரிகையில் பல்வேறு செய்திகளும் இருக்கும். அச் செய்திகளையும் பாரதிதாசன் தொகுத்துக் கூறியுள்ளார்.

"வானிடை நிகழும் கோடி
மாயங்கள் மாநிலத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
உட்புறம் வெளிப்புறத்தே

ஆன நற்கொள்கை அன்பின்

அற்புதம் இயற்கைக் கூத்துத்

தேனிதழ் தன்னிற் சேர்த்துத்

தித்திக்கத் தருவாய் நித்தம்"

வானத்துக் கோள்கள் பற்றிய அறிவும் உலகத்து உயிர்களின் வாழ்க்கையின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் அறியப் பத்திரிக்கை உதவும். நல்ல கொள்கைகளையும் அன்பு வயப்படும் அற்புதமான நிலைகளையும் பத்திரிகை விளக்கமாகக் கூறும். இயற்கையின் தோற்றப்பாடுகளையும் அழகுக் கோலங்களையும் சீற்றத்தின் கொடுமையையும் விரிவாக எடுத்துரைக்கும். எனவே பத்திரிகையை படிப்பதன் மூலம் பள்ளிக் கல்வியில் கற்கும் அத்தனை விடயங்களையும் கற்கும் வாய்ப்பு எல்லோருக்கும் ஏற்படுகிறது.

கருவாக உருவாகிப் பிறந்து வளர்ந்து ஐந்தாண்டு நிறைந்த ஒரு மனிதனுக்குப் பத்திரிகை நாள் தோறும் படிக்கும் பாடசாலையாகும். வாசிப்புத்திறனையும் கிரகித்தல் திறனையும் குழந்தைப் பருவத்திலேயே பெறுவதற்குப் பேருதவி செய்கிறது. அதனால் ஒவ்வொருநாளும் பத்திரிகையைப் படிப்பவர் வாழ்க்கையைப் பெற்றார். என்று பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார். சுயமான கற்றலை வளப்படுத்தப் பத்திரிகை துணை நிற்கிறது. பாடசாலை சென்று கல்வி கற்றவரும் வாய்ப்பற்றவரும் பத்திரிகையைப் படிப்பதால் அறிவு பெறுவர். உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடுடின்றி எல்லோரும் கையிலெடுத்துப் படிக்கும் பத்திரிகை மனித அறிவை மேம்படுத்த பெரிதும் துணை நிற்கும் என்பதே இக் கவிதை மூலம் பாரதிதாசன் கூறும் சமூகச் செய்தியாகும். மனிதர்க்கு ஒரு அறிவூட்டல் பணியை இக்கவிதை செய்துள்ளது.

மேலைத்தேசக் கல்வி மரபும் ஆங்கில மொழிச் செல்வாக்கும் எமது மக்கள் வாழ்வியலிலே வேகமாக உட்புக முயன்ற வேளையிலே பாரதிதாசன் மக்களை ஆற்றுப்படுத்த இக் கவிதையை எழுதியுள்ளார். தமிழ் மொழியை தானாகவே கற்று உலக நடப்புகளையும் ஏனைய அறிவு சார் விடயங்களையும் அறிந்து கொள்ள பத்திரிகையே உதவுகிறது. எனவே ஒரு நாட்டிலே பத்திரிகை உண்டென்றால் அந்நாட்டில் வாழும் மக்கள் வாழ்வும் உயர்ச்சி பெறும் என்ற அவருடைய கவிதைக் கூற்று எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் பொருந்தி நிற்கும்.

# ஆசிரியர்களின் வேலைத் திருப்தியில் செல்வாக்குச் செலுத்தும் அகப்புறக்காரணிகள்



திருமதி.கலாநிதி ஜெ.இராசநாயகம்

சிரேஷ்ட விரிவுரையாளர்

யாழ் பல்கலைக் கழகம்

## அறிமுகம் :-

சமூகம் போற்றுகின்ற ஒரு தொழிலாக ஆசிரியத் தொழில் விளக்கமுறுகின்றது. என்ற கருத்தில் மாற்றமேற்பட்டு சமூகத்தினர். விமர்சிக்கப்படுகின்ற ஒரு தொழிலாக இன்று இத் தொழில் நிலை மாற்றம் அடைகின்றது. சமூகத்தால் உருவாக்கப்பட்ட முறை சார்ந்த பாடசாலை என்ற நிறுவனம் இல்லையெனில் ஒருவன் தனது திறன்கள், ஆற்றல்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சமூகத்தில் முன்னேற முடியாது. இத்தகைய உயர்ந்த சார் நிறுவனத்தை இயக்குகின்ற பணியினை நிறைவேற்றுபவர்கள் ஆசிரியர்களேயாவார்கள். காலத்தின் தேவை கருதி புதிய நூற்றாண்டுக்கான கல்வி எதிர்பார்ப்புகள் சாத்தியமாகும். வகை ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளது. என்ற சர்வதேச ஆணையத்தின் தொலர்ஸ் அறிக்கையும் எடுத்துக் கூறுகின்றது. பிளேட்டோவின் காலத்திலிருந்து பாடசாலை என்ற நிறுவனத்தின் தேவை அதிகமாக உணரப்பட்டிருந்தது. அதே போல் அங்கு பணி புரியும் ஆசிரியர்கள்,மேலதிகாரிகளும் கருத்திற் கொள்ளப்பட்டார்கள்.

இரு குல முறையிலேயே சமூகத்தின் தேவையை உணர்ந்து வழங்கப்பட்டு வந்த கல்வி முறைகளுள் மனித வாழ்வை வளம்படுத்தி வந்துள்ளன. அதனை வழங்கிய குரு கடவுளுக்குச் சமமாக மதிக்கப்பட்டார். இவர்கள் சமூகத்தின் மிகச் சிறந்த மேதைகளாகக் கணிக்கப்பட்டார். ஆனால் இன்று நிலை பெருமளவுக்கு மாறிவிட்டது. ஆசிரியர்கள் ஆசிரியப் பணியாளர்களாக உரு மாற்றம் பெற்று விட்டார்கள். திட்டமான சம்பளங்கள்,சம்பள உயாவுகள்,பதவி உயர்வுகள், ஆதர உயர்வுகள்,ஓய்வு என ஆசிரியர்கள் சமூகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு விட்டார்கள்.கல்வி நிறுவனங்களுக்கும் இவர்களுக்கும் இருக்கும் உறவுகள் கூட இவ்வாறு முறைப்படுத்தப்பட்டவைகளே ஒரு வகையில் பார்த்தால் ஆசிரியர்கள் மீது இவை ஒடுக்கு முறையையே செலுத்துகின்றன எனலாம்.

## வேலைத் திருப்தி என்பதன் விளக்கம் :-

வேலைத் திருப்தி (work statisfaction) என்ற எண்ணக்கரு ஆரம்ப காலங்களில் ஏனைய துறைகளோடு தொடர்புபட்டதாக இருந்து வந்துள்ளது. இன்று கல்வித் துறையோடு மிகவும் தொர்டர்பு கொண்ட ஒரு சொல்லாக அமைந்துள்ளது.தனக்கு ஒரு வாழ்க்கைத் தொழிலைச் செய்யும் போது ஒவ்வொருவனும் தனது வேலையின் மூலம் திருப்தியைப் பெற்றுக் கொள்ளல் வேலைத் திருப்தி எனலாம் தான் செய்யும் வேலை தொடர்பாக எல்லாம் காரணிகளும் சாதகமாக அமையும் பட்சத்தில் ஒருவன் தனது தொழில் தொடர்பாக திருப்தியடைகின்றான். இதனையே வேலைத் திருப்தி என்பர்.

**ஆசிரியர்களும் வேலைத்திருப்தியும் :-**

ஒருவனிடம் வேலைத் திருப்தி ஏற்படுவதாயின் அதற்குப் பல காரணிகள் இதில் செயற்பட வேண்டும். பாடசாலை சார் காரணிகள் முக்கியமான அமசங்களாகும். இன்றைய நிலையில் ஆசிரியர் மத்தியில் பல்வேறு வகையான உள நெருக்கீடுகள் ஏற்படுவதால் அவர்கள் வேலை உலகில் தம்மை முற்றாக ஈடுபடுத்துவதில் சில தடைகளும் காணப்படுகின்றன. ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினை இன்று ஆசிரிய உலகை ஆட்டிப் படைக்கின்றது. தகுந்த, சரியான முறையில் அமைந்த இடமாற்றங்களைக் கூட அவர்கள் ஏற்படுத்திப் பல பிரச்சினைகளை அனுபவக்கின்றார்கள். குறிக்கப்பட்ட காலத்துக்குத் தொடர்ந்து ஒரே பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இடமாற்றப்படுகின்றார்கள். ஆனாலும் இடமாற்ற காலத்தின் போது ஒரு ஆசிரியர் நோய்வாயப்பட்டிருக்கலாம். அல்லது பெண் ஆசிரியர்களின் கருத்தரித்திருக்கலாம் அல்லது பாலூட்டும் தாயாக இருக்கலாம். இல்லையேல் வேறு சில தவிர்க்க முடியாத காரணங்கள் இருக்கலாம். இந் நிலையில் பொருத்தமற்ற காரணிகள் ஆசிரியர்கள் தமது வேலையைச் சரிவரச் செய்யாமல் தடுத்து நிறுத்துகின்றன.

**பாடசாலை அமைந்துள்ள சூழல்:-**

கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெறுவதற்குச் சூழல் ஒரு பிரதான காரணியாகச செயற்படுகிறது. ஒருபாடசாலையின் அமைவிடம் அதிக ஆரவாரம் இல்லாததும் போக்குவரத்து சரியான வகையில் அமைந்துள்ள இடமாகவும் இருக்க வேண்டும். இன்றும் பல பாடசாலைகள் எதுவிதமான போக்குவரத்து வசதிகள் இன்றிக் காணப்படுகின்றன. இதனால் இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் விருப்புடன் கற்பிப்பதில்லை. போக்குவரத்தில் உள்ள சிரமங்கள் காரணமாகக் கற்பித்தலிலும் நாட்டம் காண்பிப்பது குறைவு இதனால் அவர்கள் மத்தியில் தொழில் திருப்தி ஏற்படுவது குறைவாகும்.

**பாடச் சுமைகளினால் ஏற்படும் வெறுப்புக்கள்:-**

இன்று பல பாடசாலைகளில் வெவ்வேறுபட்ட பாடங்களுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக காணப்படுகிறது. இதனால் குறிக்கப்பட்ட பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு பாடவேளை கூட ஓய்வு கிடைப்பதில்லை. இதனால் பல்வேறான உடல் உபாதைகளுக்கும் மன உளைச்சல்களுக்கும் ஆளாகும் நிலை காணப்படுகிறது. அத்துடன் குறிக்கப்பட்டதொரு பாடத்துடன் தொடர்பு இல்லாத ஆசிரியர் கூடச் சில பாடங்களை எடுத்துக் கற்பிக்க வேண்டியவராகின்றனர் இதனாலும் கற்பித்தலில் வெறுப்பு ஏற்படும் போது அவர்களுக்குத் தமது தொழிலேயே வெறுப்பு ஏற்பட இடமுண்டாகிறது.

**பாடசாலையின் பௌதீகப் பற்றாக்குறை :-**

ஆசிரியர் தனது கற்பித்தற் பணியை முழு மனநிறைவோடு செய்வதற்கான பௌதீக வளங்கள் தொடர்பான தடைகளை எதிர் கொள்கின்றார்கள். பாடசாலைக்குள்ளே இத்தயை காரணிகள் செயற்படுகின்றன. இன்றைய சூழலின் இலவசக் கல்வித் திட்டத்தின் அமுலாக்கம் பல பிள்ளைகளை பாடசாலை செல்லத் தூண்டியது. அத்துடன் இடை விலகலும் குறைவு பாடசாலையின் சேர்வு வீதம் 92 வீத்தினைத் தாண்டிவிட்டது. ஆனாலும் ஆசிரியர்கள் தொகை மாணவர்களது விகிதாசாரத்துடன் ஒப்பிடும் போது குறைவாக உள்ளது. எனினும் ஆசிரியர்களின்

வளப் பங்கீட்டிலும் பெரும் பிரச்சினை உள்ளது. சில பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் உள்ள போதும் கிராமப் புற பாடசாலைகள் இன்னமும் ஆசிரியர் பற்றாக்குறையை அனுபவித்து வருகின்றன. ஆசிரியரின் பரம்பலில் பிரச்சினைகள் உள்ளதனால் ஆசிரியர்களது அதிகரித்த வேலைப்பளு அவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துகிறது.

மாணவர்களின் தனியாள் வேறுபாட்டுக்கேற்ப கற்பிப்பதற்கும், விசேட தேவையுடையோர்களை அவதானிப்பதற்கும் ஆசிரியர்களால் இயலாததாகி விடுகிறது. அத்துடன் ஒரு வகுப்பில் அதிக மாணவர்கள் காணப்படும் நிலை,கட்டிட தளபாட வசதிகள் இன்மை, தொழில்நுட்ப கல்விக்கான வசதிகள் குறைவு, கற்பித்தல் உபகரணங்களின்மை போன்ற பல காரணிகளும் ஆசிரியர்கள் மீது குழப்பத்தை விளைவித்து விடுகின்றன.

பாடசாலைகளில் கட்டிட தளபாட வசதியீனம் பாடசாலைகளின் அடிப்படைப் பிரச்சினையாகும். இன்று பல பாசாலைகளில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட குழப்பங்களின் காரணமாக பாடசாலைகளின் சில அழிவுக்குட்பட்டன. அவற்றை மீள் திருத்திக் கல்விச் செயற்பாடுகள் நடைபெறுகின்ற போதிலும் தளபாடங்கள் பற்றாக்குறையாக காணப்படும் நிலமைகளும் உண்டு. சில பாடசாலைகள் தற்போது மீள் குடியமர்வின் பின் இயங்கி வருகின்ற போதிலும் பூரணமாக நிறைவு பெறாத நிலையிலும் சில பாடசாலைகள் இருக்கின்றன. பௌதீகவளப் பற்றாக்குறை என்பது முக்கியமானதொரு பிரச்சினையாகும். தனியாக பிரிக்கப்படாத வகுப்பறைகள்,போதியளவு காற்றோட்டம், வெளிச்சம் இல்லதா வகுப்பறைகள் மலசலகூட வசதியின்மை போன்றவையும் கல்வியில் இடர்பாடுகளை ஏற்படுத்துவதனால் ஆசிரியர்களுக்கு தமது தொழிலில் வெறுப்பு ஏற்படுகிறது.

சம்பள முரண்பாடுகள் :-

ஒரு மனிதனின் வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டுமானால் ஒரு தொழில் தேவை. அத் தொழில் சிறப்பாக,மகிழ்வுடன் சேவையாற்ற வேண்டுமானால் பொருத்தமான சம்பளம் அவசியமாகின்றது. தனியார் துறையினருடன் ஒப்பிடும் போது ஆசிரியர்களின் சம்பளம் குறைவாக உள்ளது. இதனால் வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பளம் அமையவில்லை. என்பது ஆசிரியர்களின் கருத்தாகும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஆசிரியர்களின் சம்பளம் கூடுதலாக இருக்கின்றது. ஆனால் இலங்கையில் ஆசிரியத் தொழில் போதிய வருமானம் கிடைப்து. குறைவாக இருக்கின்றமையால் சிலர் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும்,பிரத்தியோக வகுப்புகளுக்கும் செல்கின்றனர். கூடுதலான நேரம் வேலை செய்வதனால் வேலையில் சலிப்பும் ஏற்படுகின்றன. இதன் காரணமாகத் தொழில் வெறுப்பு ஏற்படுகின்றது.

பொருத்தமான பாடசாலைகள் கிடைக்காமை:-

இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்களின் சேவை அவரின் சொந்த மாவட்டத்தில்தான் என்ற நிலை மாற்றமடைந்து குறிக்கப்பட்ட காலம் அவர் தனது மாவட்டத்துக்கு வெளியிலும் வேலை செய்ய வேண்டும். என்ற நிலைப்பாடு உள்ளது. இது ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் மிகப்பெரியதொரு பிரச்சினையாகும். இந்த

இடமாற்றத்தினால் அவர்களின் உடலும் உள்ளமும் பலவழிகளிலும் பாதிப்படைகின்றன.

மிகவும் திறமையான ஆசிரியர்கள் கூடப் பாடசாலைகள் மிகத் தூரத்தில் இருப்பதன் காரணமாகப் போக்குவரத்தில் பல பிரச்சினைகள் இருப்பதனால் சரியான முறையில் கற்பிப்பதற்கு முடியாமல் உள்ளனர். வெளிமாவட்டங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் நாளாந்தப் பயனத்தில் அதிகம் நேரச் செலவினையும் உடல் உபாதைகளையும் அனுபவிக்கின்றார்கள். ஆனால் வேலை செய்யும் இடங்களில் தங்குவதற்கும் வசதிக் குறைவுகள் காணப்படுகின்றன. அவ்வாறு தங்குவதற்கும் அவர்களின் குடும்ப நிலைமைகள் இடம் கொடுப்பதில்லை. தற்போது அநேகமான குடும்பங்கள் தனிக்குடும்பங்களாக இருப்பதனால் குடும்பங்களுக்கு அவர்களின் உறவுகளின் உதவி ஒத்தாசைகளும் கிடைப்பதில்லை. இதனால் குடும்பத் தலைவனோ அல்லது தலைவியோ தனது குடும்பத்தை விட்டுத் தொழிலின் நிமித்தம் எங்கும் தங்க முடியாத நிலை உண்டு. இத்தகைய நிலையில் சரியான முறையில் இடம் பெறும் இடமாற்றங்கள் கூட ஆசிரியர்களைப் பெறுத்த வரையில் ஏற்றுக் கொள்ள முடியாத அளவில் உள்ளமையினால் அவர்கள் தமது வேலையில் திருப்தி காணபதில்லை. அண்மைக்காலமாக ஆசிரியர்கள் மத்தியில் காணப்படும். பிரச்சினைகளில் முக்கியமானது இடமாற்றப் பிரச்சினையாகும். முக்கியமாகப் போக்குவரத்தில் அவர்கள்படும் இன்னல்கள் அவர்களைத் தொழிலையே வெறுக்கும் அளவுக்கு மாற்றிவிட்டது.

## அரசியல் பிரச்சினைகள் :-

கல்வியில் அரசியலின் செல்வாக்கு காலம் காலமாக இருந்து வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. கல்வித் தத்துவயியலாளர்கள் பலரின் கருத்துக்களில் ஒரு நாட்டின் அரசு சிறப்பான முறையில் அமைய வேண்டுமானால் அதற்குப் பொருத்தமான முறையில் கல்வி அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும் என்கின்றனர். இன்னும் கல்வியின் சகல துறைகளிலும் அரசியல் ஊடுருவி இருப்பதனைக் காண முடிகின்றது. இலங்கையின் அரச துறைகள் பெரும்பாண்மையான உத்தியோகத்தர்களைக் கொண்ட துறையாகக் காணப்படுவதால் இதில் அரசியல் தலையீடு அழுத்தமாக அமைந்துள்ளது. ஆசிரிய நியமனத்தில் இருந்து இடமாற்றம் வரையுள்ள நடவடிக்கைகளில் அரசியல் அதிகாரம் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. உண்மையில் ஆசிரியர்களின் பிரச்சினைகளில் தேசிய ரீதியாக முக்கியத்துவம் பெற்றது. இடமாற்றப் பிரச்சினையேதான் மலையக பிரதேசங்களில் இது ஒரு அரசியல், சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அரசும், தொழிற்சங்கங்களும், கல்வித்திட்டமிடுவோரும் இணைந்து ஒழுங்கான முறையில் இந்த இடமாற்றப் பிரச்சினையை வடிவமைக்கும் போது ஆசிரியர்கள் சிறப்பான முறையில் மனமகிழ்வுடன் சேவையாற்ற முடியும்.

உள்நாட்டு அரசியல் பிரச்சினை காரணமாக இன்று ஆசிரியர்கள் பல தமது உறவுகளையும், உடைமைகளையும் இழந்துவிட்டதனால் அவர்களின் நடைப்பிண வாழ்க்கை முறைகள் தொழில் உலகில் தம்மை அர்ப்பணிப்பதற்கு மிகப் பெரும் தடைக்காரணியாக உள்ளது. யுத்தம் பல ஆசிரியர்களை இன்று வெளிநாடு சென்று வாழ்வதற்கு முக்கியமானதொரு காரணியாக அமைந்துவிட்டதனால் அந்த

வெற்றிடங்களுக்கு பொருத்தமான போதிய அனுபவம் உள்ள ஆசிரியர்களும் கிடைப்பது கடினம்தான் இதனால் பல்வேறு நடைமுறைப்பிரச்சினைகளையும் அனுபவிக்கின்றார்கள்.

சில ஆசிரியர்களின் பதவி உயர்வுகள்,இடமாற்றங்களில் அரசியல் செல்வாக்கு,உயரதிகாரிகளின் தலையீடு போன்ற காரணங்களினால் எதுவித பிரச்சினைகளும் இருப்பதில்லை. இதனால் இளைய வயதினரும், உயர்கல்வி பெற்றவர்களும்,செல்வாக்கு மிகுந்தவர்களும் தமக்குப் பொருத்தமான இடங்களில் வேலைக்கு அமரும் போது செல்வாக்கு அற்ற வயதில் கூடிய ஆசிரியர்கள் தமது குடும்பத்தை விட்டு தொலை தூரத்தில் கடமை புரிவதும் ஆசிரியர் மத்தியில் பெரும் விரக்தியை ஏற்படுத்துகின்றன.

## பாடசாலை நிர்வாகத்தின் செயற்பாடுகள் :-

பாடசாலை நிர்வாகத்துக்கும் தொழில் திருப்திக்கும் இடையில் முக்கிய தொடர்பு உண்டு. நிர்வாகத்தின் நெகிழ்வற்ற கெடுபிடி ஆசிரியர்களுக்கு மிகுந்த வெறுப்பைக் கொடுக்கின்றது. சிறப்பாகச் செயலாற்ற முடியாத ஒருவனையும் ஒரு நிர்வாகி சரியான முறையில் வழிப்படுத்தி நெறிப்படுத்தி நடத்தும் போது சிறப்பான நடத்தை மாற்றங்களை அவன் வெளிப்படுத்துவான் இதனை விடுத்து அதிகாரத் தொனியில் எதையும் செய்விப்பது கடினமாகும் அவ்வாறு அதிகாரத்துக்கு கட்டுப்பட்டு வேலை செய்கின்ற போதும் அது மனநிறைவோடு செய்கின்ற வேலையாக அமையாது.

ஆசிரியர்களுக்கு பொருத்தமாக நிர்வாகச் செயற்பாடுகள் அமையும் போது அவர்கள் மனநிறைவோடு வேலை செய்வார்கள். சில இடங்களில் நிர்வாகத்தின் சில பொருத்தமற்ற நிலைகளைத் தட்டிக் கேட்கும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படும் நிலையில் அவர்களிடம் வேலைத் திருப்தி ஏற்படுமா என்பது பெரும் கேள்விக்குறியாக அமைகின்றது. கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் வசதிகளை அளித்து அவற்றை விருத்தி செய்வது கல்வி நிர்வாகத்தின் பிரதான சேவைகளில் ஒன்றாகும். பாடசாலை மேற்பார்வையிலும் ஆதிக்கம் செலுத்தப்படுவதோடு குறைகள் அதிகம் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இன்று பல அதிபர்களுக்கு நிர்வாகத் துறையில் போதிய பயிற்சிகள் இல்லை. ஒரு தடவை பெற்ற அறிவோடு செயற்படுகின்றார்கள். காலத்துக்கேற்ற ஆளுமைப் பண்புகளையும் கல்வியையும் பெற்றுக் கொள்ள தவறி விடுகின்றனர். இதனால் ஆசிரியர்களின் உயர் கல்வி நடவடிக்கைகளுக்கும் அவர்கள் இடமளிப்பதில்லை. ஆசிரியர்கள் மேல் தமக்கிருக்கும். அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் பொருத்தமற்ற மேற்பார்வைகள் செய்யப்படுகின்றன. மேற்பார்வை என்பதன் பொருளை சரியான முறையில் விளங்கிக் கொள்ள இவர்களால் முடிவதில்லை. பாடசாலை மேற்பார்வை என்பது. சிறந்த கற்பித்தலை ஊக்குவிப்பதாகவும், தூண்டுவதாகவும் அமைவதோடு அத் தொழிலுக்கு வேண்டிய பக்குவ நிலையை வளர்க்கக் கூடிய் சூழலை விருத்தி செய்வதாகவும் அமைய வேண்டும்.

ய.தோமஸ் என்பவருடைய கருத்தின் படி ஆசிரியர்களின் அடிப்படைத் தேவைகள் பின்வருமாறு அமைகின்றது.

1. பாதுகாப்புத் தேவை
2. ஆதரவு தேவை
3. கணிப்புத் தேவை
4. ஒன்றினைவுத் தேவை

என்பனவாகும். இவ்வகையில் பாடசாலையில் தமது வேலையை ஒரு வித பிரச்சினையுமின்றிச் செய்யும் போதும், பாடசாலை நிர்வாகத்தில் தனது பங்களிப்பும் உண்டு. என்று எண்ணித் தனது வேலையைச் செய்யும் போதும் தொழில் மனநிறைவு ஏற்படுகின்றது.

## சமூகத்தின் செயற்பாடுகள் :-

சமூகத்தில் ஒரு ஆசிரியருக்கு அவருக்குரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். எமில்டர் கைம், கூலிங்வுட் போன்ற அறிஞர்களின் கருத்தின் படி சமூகத்தில் யாரும் ஆசிரியர்களின் நிலையைக் குறைத்து மதிப்பிட முடியாது என்று குறிப்பிட்டுள்ளனர். இன்றைய சமூகம் ஆசிரியர்களிடம் நிறைய எதிர்பார்க்கின்றது.இதனால் அவற்றை நிறைவு செய்தலில் ஆசிரியர்கள் சிரமப்படுகின்றார்கள் என்று மாரி (marie) என்பவர் குறிப்பிடுகின்றார். தமது பிள்ளைகளின் பொருட்டு பல விடயங்களை எதிர் பார்க்கும் சமூகம் அவர்களுக்கு போதியளவு மதிப்பினைக் கொடுப்பதில்லை. இதன் காரணமாக அச்சமூகத்தை சார்ந்த பிள்ளைகளுக்கு கற்பிப்து ஆசிரியர்களுக்கு வெறுப்பை ஊட்டுகிறது.

ஆசிரியர் ஒருவர் உண்மையில் சமூகத்துக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். பிள்ளைகள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆனால் இன்று ஆசிரியர்களின் பொறுப்புகள் அதிகரித்துள்ளன. இந் நிலையில் பெற்றோர்களைச் சந்தித்து பிள்ளைகளின் முன்னேற்றம் தொடர்பாக அறிவதற்கும் அவர்களுக்குப் பல பிரச்சினைகள் உண்டு. இதனை விட சில பெற்றோர்கள் ஆசிரியர்களைச் சந்தித்து கொள்வதற்கும் முன் வரமாட்டார்கள். நேரமின்மை,கூச்சம்,கல்வி விழிப்புணர்வு இன்மை போன்ற காரணிகளும் இவ் விடயத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன.

ஒரு பாடசாலை எச் சமூகத்தில் அமைந்துள்ளதோ அச் சமூகத்தின் இருப்பை வெளிப்படுத்துவனவாகப் பாடசாலைகள் விளங்க வேண்டும். இக் கருத்தினை ஏற்றுக் கொள்ளும் போது அப்பாடசாலைகளின் செயற்பாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்களாக விளங்கும் ஆசிரியர்களின் கடமை பற்றி எவரும் உணர்ந்து கொள்ளலாம். இவ்வகையில் சமூகத்தின் வளர்ச்சியில் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆயினும் சமூகமானது ஆசிரியப் பணியினைப்பெரிதளவில் மதிப்பதில்லை. இதனால் ஆசிரியர்கள் மனஉளைச்சல்களுக்கு ஆளாகின்றார்கள். ஆசிரியர்கள் சமூக நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளுதல் மாணவர்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதில் அக்கறை கொள்ளுதல். சமூக நிகழ்வுகளில் பங்கு கொள்ளுதல். போன்றவற்றைச் சரியான முறையில் செயற்படுத்தும் போது அவர்களின் சமூக மதிப்பு உயரும். புராதன

கல்வி முறைகளில் சமூகத்தில் ஆசிரியர்கள்தான் உயர்வாக மதிக்கப்பட்டார்கள். சமூகத்தின் தலைமைத்துவ பணியினை மேற் கொள்வதில் கூடியளவு அக்கறை ஆசிரியர்களுக்கு இருந்தது.

இன்று ஆசிரியர்களே சமூகப் பணியிலிருந்தும்,சமூகத் தொடர்புகளிலிருந்தும் விலகி நடக்கின்றார்கள். இன்றுள்ள சிக்கலான வாழ்க்கை முறை, நாட்டுச் சூழல் காரணமாக சமூகத் தொடர்பை ஓர் வரையறைக்குட்படுத்தியுள்ளனர். பெரும்பாலான ஆசிரியர்கள் தமது வருமானத்தை உயர்த்த மேலதிக வருமான மூலங்களைத் தேட வேண்டியவர்களாகவும், தம்முடைய சொந்த குடும்ப பாரங்களை சுமக்க வேண்டியவர்களாகவும் இருப்பதனால் ஓய்வு நேரமோ அல்லது சமூக சேவையில் முழு ஈடுபாட்டுடன் செயற்படுவதற்கு வேண்டிய கால அளவோ அற்றவர்களாக இருப்பது இன்றைய நவீன உலகில் வாழ்வதனாலேயாகும் என்பது உணரப்படுகின்றது.

இவ்வகையில் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டிகளாக அமையும் ஆசிரியர்கள் இன்று பல வித பொறுப்புகளால் பிணைக்கப்பட்டு இருப்பதனால் சமூகத்தின் பொறுப்புகளுக்கு வகை கூறுபவராக விளங்குவதில் பல பிரச்சினைகள் உண்டு. இதனால் அவர்கள் மத்தியில் ஒரு விதமான தாழ்வுணர்ச்சி ஏற்படும் நிலையில் தொழில் விரக்தி ஏற்படுகின்றது.

இவ்வகையில் தொழில் விரக்திக்கும் பல விதமான காரணிகளின் செல்வாக்கு உண்டு. பேராசிரியர் எஸ்.சந்தானத்தின் கருத்தின் படி ஆசிரியர்களது மனநலனைப் (mental health) பாதிக்க்கூடிய காரணிகள் இன்று சமூதாயத்தில் காணப்படுகின்றன. ஏனைய உயர்ந்த தொழில்களை விட இதில் ஊதியம் குறைந்து காணப்படுவதனால் தமது மதிப்பு நிலை குறைந்துள்ளது என்ற எண்ணமும் இதன் விளைவாக தோன்றுகின்ற காப்புணர்வின்மை (Insecurity) மனமுறிவு(Frustration) போன்றனவும் ஆசிரியர்களது தொழி திருப்தியின்மைக்கு காரணமாகின்றது. என்கின்றார்.

இவ்வகையில் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களிடத்தில் தொழில் திருப்தியை ஏற்படுத்துவதில் பல காரணிகள் செயற்படுகின்ற போதும் பாடசாலை சார் காரணிகளின் தாக்கம் அதிகமாகும் பாடசாலை அதிபர் செயற்பாடுகளும் இவ் விடயத்தில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. தொழிற் திருப்தியை ஏற்படுத்த வேண்டுமானால் அதிபர்கள் சில செயற்பாடுகளை மேற்கொள்ளல் அவசியமாகும். அதிபர்கள் எப்போதும் சர்வதிகாரப் போக்குக்கு இடமளித்தல் கூடாது.

1. அதிபர் ஆசிரியர்களுக்கு இடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும்.
2. ஆசிரியர்களின் கற்றலுக்கு ஊக்கமளித்தல் வேண்டும்.
3. ஆசிரியர்களுக்கான தேவையான வசதிகளையும் ஒத்துழைப்பினையும் வழங்க வேண்டும்.
4. சமூகத்தின் மத்தியில் ஆசிரியரின் நற் பெயரைக் காப்பாற்ற வேண்டும்.
5. வேலைப் பகிர்வு சிறந்த முறையில் அமைந்திருத்தல் வேண்டும்.
6. இயலுமானவரை முரண்பாடுகளை நீக்குதல் வேண்டும்.

இதே போன்று கோட்டம்,வலயம்,மாகாணம் போன்றவற்றின் உயரதிகாரிகளின் மேற்பார்வையின் போதும் அவர்கள் சில உபாயங்களைக் கையாள்தல் வேண்டும்.

மேற்பார்வையின் போது ஆசிரியர்களிடம் குறையை மட்டும் காண்பது நோக்கமாக இல்லாமல் சிநேக பூர்வமான முறையில் விடயங்களை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

1. சம்பள நிலுவைகள்,கடன் விண்ணப்பங்கள் போன்றவைகளை உரிய காலத்தில் சரிப்படுத்தல் வேண்டும்.
2. ஆசிரியர்களை கௌரவத்தோடு நடத்துதல் வேண்டும்.
3. இடமாற்றம் தொடர்பான விடயங்களில் பார பட்சமின்றி செயற்பட வேண்டும்.
4. மொழிப் பிரச்சினைகள் காரணமாக ஆசிரியர்களின் தொடர்பாடல் பிரச்சினைகளுக்கு இடமளிக்கக்கூடாது.
5. சுற்று நிருபர்கள், கருத்தரங்குகள் என்பன ஆசிரியர்களுக்குரிய தாய்மொழியில் அமைதல்வேண்டும்.
6. அரசியல் ஊடுருவலை இயலுமானவரை தவிர்த்தல் வேண்டும்.

இவ் வகையில் இன்றைய ஆசிரியர்கள் மத்தியிலே தொழிற் திருப்தியின்மைக்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன. ஏனைய உத்தியோகத்தர்களிடமும் தொழிற் திருப்தி ஏற்படுகின்றமை தவிர்க்க முடியாதது. ஆயினும் அது அவர்களை மட்டும் தாக்குகின்றது. ஆனால் ஆசிரியர்களிடத்தில் தொழிலில் திருப்தியில்லாவிடில் மாணவ சமுதாயம் முழுமைக்கும் அதன் தாக்கம் ஏற்படும். ஆகவே ஆசிரியருக்கும் பாதிக்கின்ற அக, புறக் காரணிகளின் தாக்கங்கள் பாதகமாக இருக்கும் நிலை குறைக்கப்பட்டு தொழிலில் மகிழ்ச்சியாகப் பணி புரியும் சந்தர்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் எதிர்காலச் சமூகம் சிறப்பான மாற்றங்களைச் சந்தித்து மேம்பாடு அடையும்.

## அடிக்குறிப்புக்கள்


1. சின்னத்தம்பி .மா 2004, ஆசிரிய முகாமைத்துவம், விஸ்டம் பப்ளிகேஷன்ஸ், கொக்குவில்
2. கருணாநிதி .மா, 2004, பாடசாலைகளில் மாணவர் கற்றல் - ஆசிரியருக்கான வினைத்திறன்கள், அகவிழி, கொழும்பு .
3. மீனாட்சி சுந்தரம்.அ, 2010, கல்விப் புதுமைகள் மற்றும் மேலாண்மை,காவ்யமாலா பப்ளிஷர்ஸ் - தமிழ்நாடு
4. Jeffrey chin, 2002, Included in sociology, American sociological Association.
5. பெத்தேல்.எம், 2002, புத்தாக்க வாழ்வியல் கல்வி, நஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
6. chaurasia 4 ,1987,challenges and Innovations in Education,sterling publishers Pvt Ltd,New Delta.
7. Daniel.L.D, 1984, Teaching - The imperiled Profession, state university of new York Press
8. Peter.J, 1984, Teachers and Teaching in the Education, croom Helm, London
9. Luxmy devi, 1999, Educational Development and planning, Anmol Publications Pvt Ltd, New delhi.



# இலங்கைத் தமிழர் பெருளாதாரமும் அபிவிருத்தி சார் பிரச்சினைகளும்.

-மாணிக்கம் லோகசிங்கம்-
B.B.A(Hons),Dip.in Edu,Dip.inPup.Adm,
Dip.in.Econ - SLTS - I
J/U.A.M. College

## அறிமுகம்

இலங்கைத் தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர் பொருளாதாரத்தின் நிலவளம் அல்லது இயற்கை வளங்களின் அளவினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. 9996 சதுர கிலோ மீற்றர் விசாலமான கிழக்கு மாகாணமும் 8884 சதுர கிலோ மீற்றர் விசாலமான வடக்கு மாகாணமும் இலங்கையின் பரப்பளவில் முறையே இரண்டாவதும், மூன்றாவதும் பெரிய மாகாணங்களாக அமைந்து ஏறத்தாள 29 சதவீத பரப்பளவை இலங்கையில் இடம்பிடித்துள்ளது. இவ்விதம் கனதியான வளங்களைக் கொண்ட வடக்கு, கிழக்கு பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்னெடுப்பதன் மூலமே முழு இலங்கையின் அபிவிருத்திக்கு வித்திட முடியுமாதலால் தமிழர் பொருளாதாரத்தின் அபிவிருத்தி முடுக்கி விடப்படட வேண்டிய நிலையிலுள்ளது.திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என்ற 03 மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணம் 43 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 1081 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இதே போல் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைததீவு, வவுனியா என்ற 05 மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்கு மாகாணம் 30 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 912 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக அமைகின்றது.

2010 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின் படி கிழக்கு மாகாணம் சுமார் 16 இலட்சம் மக்களையும், வடக்கு மாகாணம் 12 இலட்சம் மக்களையும் கொண்டு இலங்கையின் மொத்த சனத்தொகையில், அவை முறையே. 7.5 வீதம், 5.8 வீதம்,என்ற அளவைக் கொண்டு மனித வளத்தின் இயலுமையை எடுத்தியம்புகின்றது. இவ்விதமாக தமிழர் பொருளாதாரம் இயற்கை வளங்களின் இருப்பையும் அபிவிருத்திக்கான ஆற்றலைக் கொண்ட இயற்கையான திருகோணமலைத் துறைமுகம், வயல் நிலங்கள், விவசாய நிலங்கள், மீனவத் தொழிலுக்கான கடலக வளங்கள், உல்லாசப் பயணிகளைக் கவரும் பிரதேசங்கள், சிறு நடுத்தரக் கைத்தொழிலுக்கான சாதகமான நிலமைகள் வனப் பகுதிகள், பற்றைக் காடுகள் போன்றன தமிழர் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியிருப்பதற்கான முதலாவது காரணமாக அமைகின்றது.

30 வருட காலம் யுத்தத்தினால் சிதைக்கப்பட்ட பொருளாதாரத்தையும் யுத்தத்தில் ஈடுபட்டவர்களையும் சேர்த்து அரசியல் சமிக்ஞையை பராமரிக்க வேண்டியுள்ளதால் தமிழர் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய கட்டாய நிலை அடுத்த காரணமாக அமைகின்றது. இலங்கையின் கரையோரப் பகுதியில் 40 வீதத்திற்கு மேற்பட்டதை வடக்கும் 20 வீதத்திற்கு மேற்பட்டதை கிழக்கும் என ஏறத்தாழ 2/3 பகுதியைத் தன் வசப்படுத்தியுள்ளமை இலங்கையின் மீன்பிடி உற்பத்தியில் முக்கிய இடத்தைப் பெறுவதும் உல்லாசப் பயணிகளைக் கவரும் பிரதேசங்களையும் கனிய வள இருப்புகளையும் கொண்டுள்ளமை அதன்

அபிவிருத்தியைப் படம் போட்டுக் காட்டுகின்றது. சுனாமிப் பேரழிவையும் சந்தித்த இப் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் என்பது மற்றுமோர் காரணமாகும்.

இலங்கைத் தமிழா் பொருளாதாரம் சில கைத்தொழில்களை மேற் கொளவதற்கான கவா்ச்சிகரமான இடமாகவும் அமைந்துள்ளமை வெளிப்படை உண்மையாகும். கந்தளாய், கிங்குரான சீனித் தொழிற்சாலை, கல்லோயா, மாதுறு ஓயா நீா்ப்பாசனத்திட்டங்கள், வாழைச்சேனை கடதாசிச் தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை, ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை, திக்கம் சாராய வடிசாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, புல்மோட்டை இல்மனைட் செயற்திட்டம், கோதுமை, மற்றும் சீமெந்து செய்முறைத் திட்டங்களைக் கொண்ட திருகோணமலை நகரம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மற்றும் உப்பளம் போன்றன எல்லாம் இயங்கு நிலைக்கு கொண்டு வந்து ஆரோக்கியமான பொருளாதாரத்தை உருவாக்க வேண்டுமானால் தமிழா் பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் என்பது மற்றுமோா் காரணமாகும். ஆனாலும் நாட்டில் நிலவி வந்த அடிப்படையிலான ஜனநாயக அரசியல் கட்டமைப்பிற்கு அமையவே சமூக பொருளாதார மாற்றங்களும் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் விரைவானதும் அடிப்படையானதுமான மாற்றங்களை காண்பது கடினமாகவுள்ளது.

## பிரதேசத்தின் பொருளாதாரதின் பங்களிப்பு:-

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பதிக்கு 2009 ஆம் ஆண்டு வடக்கு மாகாணம் 3.3 சதவீதத்தையும் கிழக்கு மாகாணம் 5.8 சதவீதத்தையும் மாத்திரமே வழங்கின. ஆனால் இலங்கையின் இலங்கையின் பரப்பளவில் வெறும் 6 சதவீதத்தைப் கெபறும் மேல் மாகாணம் ஏறத்தாழ 45 சதவீதம் வரை பங்களிக்கின்றமை இலங்கையில் காணப்படும் பிராந்திய ஏற்றத் தாழ்வுகளை எடுத்தியம்புகின்றது. 3 தசாப்தங்களாக இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகள் தமிழா் பொருளாதாரத்தின் விவசாயம், கைத்தொழில், மீன்பிடி போன்றவற்றை நாசமாக்கியதன் விளைவே இதுவாகும். தனக்கே உரித்தான புராதன நீா்ப்பாசன முறையைக் கொண்டிருந்த கிழக்கு மாகாணம் கமத்தொழிலில் தன்னிறைவையும் கெண்டிருந்தது. ஆனால் அவற்றில் பெரும் பகுதி இன்று அழிந்து போயுள்ளன. இலங்கையின் நெல் உற்பத்தழிக்கு யுத்தத்திற்கு முன்னா் 70 சதவீதம் வரையில் வடக்கு கிழக்கு பங்களிப்பை வழங்கியது எனினும் இன்று இது 30 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. எவ்வாறாயினும் நெல் உற்பத்தியில் வளம் மிக்க வடக்கு மன்னாரிலும் , கிழக்கு அம்பாறையிலும் அரிசி ஏற்றுமதி வலயங்களை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது. இது வரவு செலவுத்திட்ட அறிக்கை மூலம் மட்டும் நின்றுவிடக் கூடாது.

தேசிய கடற்தொழில் உற்பத்திக்கு யுத்ததிற்கு முன்னா் வடக்கு மாகாணம் 40 சதவீதத்திற்கு மேலும் கிழக்கு மாகாணம் 40 வீதமும் என சுமாா் 56 சதவீதத்தினை வடக்கு கிழக்கு நல்கியது. ஆனால் இன்று வடக்கின் பங்கு சுமாா் 10-12 சத்வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது எனினும் கிழக்கு மாகாணம் பெரியளவில் பாதிக்கப்படாது சுமாா் 20 வீதம் வரை பங்களிக்கின்றது.

உப உணவுப் பயிா்ச்செய்கை, விலங்கு வளா்ப்பு என்பவற்றிலும் வடக்கு கிழக்கு பிரதேசம் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கையின் சின்ன

வெங்காயஉற்பத்தியிலும் மிளகாய் உற்பதியிலும், 1980 களில் வடக்கு முறையே 56 வீதம் 26 வீதம் எனக் காணப்பட்டமை அது ஏனைய பிரதேசங்களிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முறையையும் அதன் பணச் சம்பாத்தியத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. இதே போன்று பால் உற்பத்தியிலும் வடக்கு கிழக்கும் குறிப்பாக யாழ்ப்பாணமும் மட்டக்களப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்பட்டது. இதுவெறுமனே பால் உற்பத்தியோடு மட்டுப்படுத்தப்படாமல் பாற்பண்ணை உற்பத்திகளுக்கும் வழி சமைக்கின்றது. எனினும் நீண்டகால யுத்தமும் மக்களின் இடப்பெயா்வும் இவற்றை நன்கு பாதித்துள்ளது.

## புறக்கணிக்கப்பட்ட தமிழர் பொருளாதாரம்:-

வடக்கு கிழக்கு பொருளாதாரம் புறக்கணிப்பு என்பது சுதந்திரத்திற்கு பின்னர் மாத்திரமல்ல அது அந்நிய ஆட்சியாளர் காலத்திலிருந்தே முடுக்கி விடப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது.பிரித்தானிய ஆட்சியாளர்கள் வடக்கு மாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்துக்குமிடையிலான ஊடு தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளத்தகு வகையில் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளத் தவறியுள்ளனர். இதனால் வடக்கிற்கும் கிழக்கு மக்களுக்கும் இடையிலான பொருளாதார தொடர்புகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டன. அது மாத்திரமல்லாமல் அவர்கள் தமது தேவைகளை நிறைவேற்ற கொழும்பு நோக்கிய பாதையினையே திறந்து விட்டனர் இது தமிழர் வேறு மாகாணத்திற்கும் அல்லது வெளிநாடுகளுக்கு இடப் பெயர்வொன்றினை மிகவும் அழகான முறையில் ஏற்படுத்திக் கொண்டது. இந் நிகழ்வானது தமிழர் பிரதேசத்து இன விகிதம் மாற்றம் அடைந்து செல்வதற்கும் பொருளாதாரம் பின்னடைவதற்கும் ஒரு காரணமாக அமைகின்றது.

பிரித்தானியர்கள் தேயிலை, இறப்பர் போன்ற பயிர்ச்செய்கையில் அக்கறை காட்டியதன் மூலம் வடக்கு கிழக்கு பிரதேசத்தின் மா, பலா, வாழை போன்றவற்றுக்கு ஏற்றுமதி அந்தஸ்த்தை கொடுக்கத் தவறியது. மாத்திரமல்லாமல் அதன் முக்கித்துவத்தையும் வெளிப்படுத்தத் தவறியுள்ளனர். அது மாத்திரமல்லாமல் தமிழர் பிரதேசத்திற்கே உரித்தான பனை மரங்களையும் கவனிக்கத் தவறியுள்ளனர். யாழ்ப்பாணமாவட்டத்தில் 3.5 மில்லியன், கிளிநொச்சி மாவட்டத்தில் 3.5 மில்லியன், மன்னார் மாவட்டத்தில் 3.0 மில்லியன் என காணப்படும் பனை மரங்களை விஞ்ஞான ரீதியாகப் பயன்படுத்தத் தவறியுள்ளமை இந்தப் பிரதேசத்தின் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியை மழுங்கடித்து விடும் என்றே கூறலாம்.

இலங்கை மேற்குலக ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னரும் கூட தேசிய திட்டமிடலில் பிரதேச அபிவருத்தி என்ற எண்ணக்கரு முழுமை பெறவில்லை என்றே கூறலாம். அதிலும் குறிப்பாக உலர்வலய மாகாணங்களான வடக்கும் கிழக்கும் தொடர்ந்தும் புறக்கணிப்பட்டதாகவே இருந்துள்ளது. 1970 களின் இறுதிப் பகுதியில் இருந்து தொடக்கி வைக்கப்பட்ட துரித மகாவலி கங்கை அபிவிருத்திட்டம், நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி, சுதந்திர வர்த்தக வலயம் என்பவற்றிலிருந்தும் நன்மைகள் பெறுவதும் தவிர்க்கப்பட்டுளது. ஈற்றில் இத்தகைய அபிவருத்தி திட்டங்களால் நன்மையடையாத மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கிராமிய

அபிவிருத்தி நிகழ்சித்திட்டங்கள் பிரதேச அபிவருத்தி சமநிலையின்மைகளை நீக்குவதற்காக ஆரம்பித்து வைக்கப்பட்டன. எனினும் துரதிஸ்ட வசமாக 1980 களின் ஆரம்பபகுதியோடு ஆயுதமேந்திய யுத்த நிலை தொடர்ந்து சென்றமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முற்றாக நிராகரித்தது. மாத்திமல்லாமல் இருக்கின்ற பொருளாதாரத்தையும் காப்பாற்றி விட முடியாத அளவிற்கு புறக்கணிப்பு தொடர்ந்தது. காலனித்துவ காலம் முதல் கட்டியயெழுப்பப்பட்ட பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் பெரும் அழிவுக்குள்ளாயின. இலங்கைத் தமிழரின் நாளாந்த பொருளாதார நடவடிக்கைகள் கூட பெருமளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டன. இத்தகைய பிரச்சினைகள் மூளைசாலிகளின் வெளியேற்றத்திற்குக் காரணமாக அமைந்ததுடன் மனித வளப் பற்றாக்குறையையும் ஏற்படுத்தி நவீன பெருளாதாரத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு மேலதிகமான சவால்களை எழுப்பி விட்டுள்ளன. இத்தகைய புறக்கணிப்புக்கள் வடக்கு,கிழக்கின் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி என்பவற்றைத் தடுத்ததன் மூலம் இனமோதலை உண்டு பண்ணியது. ஈற்றில் இனமோதலே முழுமொத்தப் பொருளாதாரத்தின் வளர்ச்சி அபிவிருத்தி என்பவற்றின் தோல்விக்கும் வித்திட்டது.

## சமகாலப் பிரச்சினைகள்

பெருந் தொகையான நிலப்பகுதி நிலக் கண்ணி வெடிகள் அகற்றப்படாத பிரதேசங்களாகவும் உயர் பாதுகாப்பு வலயங்களாகவும் இருப்பதனால் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியாதுள்ளது. அது மாத்திரமல்லாமல் விவசாய அபிவிருத்திக்கான இயந்திர உபகரணங்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்களை இன்னமும் உள் வாங்க முடியாதிருப்பதும் தொழில்நுட்ப மாற்றங்களை விரைவாக உள்வாங்க மறுப்பதும் விவசாய உற்பத்திகள் மீது பாதிப்பினை ஏற்படுத்தி விடுகின்றது சார்பளவில் கிழக்கினை விட வடக்கில் இது பாரதூரமான பிரச்சினையாக உள்ளது. நெல் உற்பத்திக்கான அரைக்கும் ஆலைகள் போதியளவில் காணப்படாமை அவற்றின் உற்பத்திச் செலவுகளை உயர்த்திவிடுகின்றது. வடக்கும் கிழக்கும் இலங்கையின் பிரதான விவசாய மாவட்டங்களாக இருந்த, பொழுதும் அவை தொடர்பான நிபுணர்களையும் நிறுவனங்களையும் மேம்படுத்த தவறுகின்றமை அடிப்படையான பிரச்சினையாக உள்ளது.

மீன்பிடித் தொழிலைப் பொறுத்து பெருந்தொகையான கடலோரப்பகுதிகள் மீன்பிடிப்பதற்கு தடை செய்யப்பட்டிருப்பதும் நீண்ட நேரம் தொழில் செய்வதற்கான தடையும் கூடிய வலுவுள்ள இயந்திரப் படகுகளைப் பயன்படுத்துவதற்கான தடை போன்றன அத் தொழிலின் மீது பாரியதொரு சுமையினை ஏற்படுத்தியுள்ளது. இந்திய மீனவர்களின் எல்லை கடந்த வருகையும் வடக்கு கிழக்கு மீனவர்களுக்கு பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. இத்தகைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடுமானால் விவசாயத்துறை இலகுவாக வளர்ச்சி அடைவது சாத்தியமானது. மாத்திரமல்லாமல் தன்னிறைவுத் தன்மையினை அடைந்து ஏனைய பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யவும் முடியும். இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கருத்தாடல்களில் விவசாய ஏற்றுமதி என்பது எப்போதும் வலியுறுத்தப்பட்டு வருவதொன்றாகும் அதற்கு வடக்கும் கிழக்கும் வாய்ப்பான பிரதேசமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்

# வடக்கு கிழக்கில் சனத்தொகைப்பிரச்சினை

1901 ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீடுகளின் படி இலங்கையின் மொத்த சனத்தொகையில் வடக்கு மாகாணம் 9.5 சதவீதத்தைப் பதிவு செய்துள்ளது. இன்று சுமார் 5.8 வீதம் என வீழ்ச்சியடைந்துள்ளமை பல்வேறு துறைசார்ந்தவர்களாலும் குறிப்பாக அரசியல்வாதிகளால் முன்வைக்கப்படும் பிரச்சினையாகவுள்ளது 1950 களிலிருந்து காணப்பட்ட அபிவிருத்தி நிலைமைகளின் படி அதிகளவு சனத்தொகை குடும்பங்கள், நாடுகளின் அபிவிருத்தி மீது ஒரு சுமையாக மாறி அபிவிருத்தியை தடுக்க முற்பட்டது.அதனை இலகுவில் புரிந்து கொண்ட வடக்கு மக்கள் குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையினை விரைவாகவே மட்டுப்படுத்த முற்பட்டனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பொறுத்து அபிவிருத்தியுடன் இணைந்த வகையில் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கையைக் குறைத்தனர். இது இயல்பானதொரு அபிவருத்தி செயன் முறையாகும்.

ஆனால் தமிழர்களை பொறுத்த வரையில் அபிவிருத்திக்கு முன்னதாகவே சனத்தொகையைக் கட்டுப்படுத்திவிட்டனர். ஆசைக்கு ஒன்று ஆஸ்த்திக்கு ஒன்று மற்றும் நாம் இருவர் நமக்கு இருவர் போன்ற வாசகங்கள் அதற்காகவே உருவாக்கப்பட்டன. இதுவே இன்றைய மனித வளப்பிரச்சினைக்கு காரணமாக அமைகின்றது. சமீபத்தில் உலக அபிவிருத்தி நிலமைகளின் படி சனத்தொகை கூடிய நாடுகளே வேகமாக வளர்ச்சியடைகின்றன. உதாரனமாக சீனா, இந்தியா, பிரேசில் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.ஆகவே தமிழர்கள் மேலும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்கள் வேறு மாவட்டங்களுக்கும் குறிப்பாக வெளி நாடுகளுக்கும் புலம் பெயர்ந்து சென்றமை சனத்தொகைப் பிரச்சினையைத் தீவிரப்படுத்தியுள்ளது.

அண்மைக்கால மதிப்பீடுகளின் படி வடக்கின் சனத்தொகை வீதம் குறைத்து மதிக்கப்பட்டிருப்பது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். யுத்த அபாயம் காரணமாகவே பெருந்தொகை மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் அவர்களைச் சேர்க்கத்தவறிய குடித்தொகை மதிப்பீடு சரியா என்பது கேள்விக்குறியாகும் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும் கூட மக்கள் தமது வாழ்விடங்க்ளில் மீளக்குடியேறுவதற்கான சூழ் நிலை உருவாக்கப்பட்டுள்ளதா என்பது அடுத்த பிரச்சினை ஆகும்.

தமிழ் அரச அதிகாரிகளும் அலுவலர்களும் இடம்பெயர்தோரை குடித்தொகைக் கணக்கேடுகளிலிருந்து நீக்கிவிடுவதற்கு எவ்வித தயக்கமும் காட்டுவதில்லை. இவையாவும் இணைந்த வகையில் குடித்தொகைப் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது மறு வகையில் வெளிநாட்டுக்கு புலம்பெயர்ந்தோர் தமிழர்களுக்கு மேலதிகமான வளமாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும் எவ்வாறாயினும் தற்போதைய உறவு முறைகள் காலம் கடந்தால் அந்த வளம் அருமையானதாகிவிடும். ஆகவே அவர்களது பண அனுப்பங்கள் வடக்கு கிழக்கின் முதலீடாக மாற்றப்பட்டு சந்தைப்படுத்தல் வசதிகளையும் பெற்றுக் கொள்வது அவசியமான விடயமாகும். புலம் பெயர்ந்தோர் பண அனுப்பீடுகளே இலங்கையர்கள் பிரதான அந்நிய செலாவணி மூலம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# சமீபத்தில் வங்கிக் கிளை விரிவாக்கம்

கிழக்கிலும் குறிப்பாக வடக்கிலும் இலங்கையின் வர்த்தக வங்கிகள் உட்பட அனைத்து நிதி நிறுவனங்களும் காப்புறுதி நிறுவனங்கள் உட்பட தமது கிளைகளை நாளாந்தம் உருவாக்கி வருகின்றன. அவை வடக்கு கிழக்கு மக்களின் அபிவிருத்திக்கு உதவுதல் என்பதனை விட நிதி இடமாற்றம் செய்கின்ற முகவர்களாகவே அமைந்து விடுகின்றன. வடக்கு கிழக்கு பிரதேசத்தில் திரட்டுகின்ற நிதியினை அம்மக்களுக்கே பகிர்ந்தளிப்பர் என கூறிவிட முடியாது. ஏனெனில் வடக்கு கிழக்கில் பாரிய தொழில் முயற்சிகள் பெருந்தொகையில் காணப்படவில்லை.

அது மாத்திரமல்லாமல் மக்கள் கடன் பெறுவதற்கான கட்டுப்பாடுகள் அவர்களை அந்த நோக்கத்தில் இருந்தும் தவிர்த்து விடுகின்றது ஆகவே வடக்கு கிழக்கு மக்களுக்கு சொந்தமான நிதி நிறுவனங்கள் தாபிக்கப்படுதல் அவசியமாகும். எவ்வாறானயினும் அதிகளவான நிபந்தனைகளோடு பலர் சுய தொழில் முயற்சிக்கான கடன்களைப் பெற்றுள்ளனர். அத் தொகை மிகவும் சிறு தொகையாக இருப்பதும் அவற்றைப் பெற்றுக் கொண்ட வாடிக்கையாளர்களில் பலர் நுகர்வு நோக்கில் பயன்படுத்தப்படுவதும் வங்கி அதிகாரிகள் உட்பட எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும். அதனையும் விட வேடிக்கையான விடயம் என்னவென்றால் அக் கடன் தொகையைப் பெற்றோர் எல்லோரும் வேலைவாய்ப்பினைப் பெற்றவர்களாக கருதி வடக்கு கிழக்கு பகுதிகளில் நிலவிய வேலையின்மை நன்கு குறைத்துக் காட்டப்பட்டமையாகும்.

# - அரசியலும் அா்த்த சாஸ்த்திரமும் -



பரஞ்சோதி ஜோதீஸ்வரன்
**B.A,P.G,Dip.in.edu,M.A,S.LT.S1**
யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி,

## அறிமுகம்

மானிட வாழ்விலே மனிதனானவன் பொதுவாகத் தனித்து வாழ்வதனைப் பெரிதும் விரும்புவது இல்லை. மனிதன் இயல்பாகவே ஏனையவா்களோடு கூடி வாழும் இயல்புடையவன். இதனால் மனிதன் "சமூகப் பிராணி" எனப்பட்டான்.

மனிதன் தன் வாழ்வியல் தேவைகளை தனியொருவனாகப் பூா்த்தி செய்து கொள்ள முடிவதில்லை. இதனால் மனிதனது வாழ்கைத் தேவைகளும் பிற மனிதரோடு கூடி வாழ அவனைக் கட்டாயப்படுத்துகின்றன. இதனாலேயே மனிதன் பிறரோடு கூடிவாழும் சமூக வாழ்வை ஏற்படுத்திக் கொண்டான்.

மனிதா் பலா் ஒன்று கூடி சமூகமாக வாழும் போது பிரச்சினைகள், முரண்பாடுகள் தோற்றம் பெறுவது இயல்பு. இத்தகைய பிரச்சினைகள் , முரண்பாடுகளைத் தீா்த்துக் கொள்ளவும் ஒருவரோடு ஒருவா் கொள்ளும் பல்வேறு வகையான பரஸ்பர தொடா்புகளை ஒழுங்குபடுத்தவும் சட்டதிட்டங்கள் தேவைப்பட்டன. இச் சட்ட திட்டங்களை உருவாக்கவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் ஓா் அமைப்பு தேவைப்பட்டது இவ் அமைப்பே அரசாங்கம் (Goverment) எனப்பட்டது. அரசாங்கத்தைப் பெற்ற ஒரு சமூகம் அரசு (state) என்று அழைக்கப்பட்டது.

அரசைப் பெறாத சமூகம் அகப் புற பரிணாம வளா்ச்சியை அடைய மாட்டாது. ஒரு மனிதனால் சமூகமும், அரசும் இன்றி அமைதியாகவோ, நிம்மதியாகவோ, பாதுகாப்பாகவோ வாழ முடியாது. வளா்ச்சி அடையவும் முடியாது.

மேற்குறித்த உண்மையினை மெய்ப்படுத்தும் வகையில் மனிதன் இயல்பாகவே ஓா் அரசியல் பிராணி என்றும் அவன் அரசு இல்லாமல் இருப்பானாயின் ஒன்று மனிதத் தன்மைக்கு மேலானவனாக இருக்க வேண்டும். அல்லது கீழானவனாக இருக்க வேண்டும். என கிரேக்க அறிஞா் அரிஸ்ரோட்டில் கூறியிருந்தாா்.

## அரசியல் என்பதன் பொருள் விளக்கம்

தமிழ் மொழியிலே அரசியல் என சொல்லப்படுவதை வடமொழியில் "இராஜதா்மம" எனக் குறிப்பிட்டனா். இச்சொல் தா்மசாஸ்த்திரங்களின் காலத்திலேயே வழக்கிற்கு வந்துவிட்டது. இச் சொல் அரசனது எல்லா கடமைகளையும் குறித்து நிற்கின்றது. இச் சொல்லிற்கு மகாபாரதம் ஷத்திரியதா்மம் எனக் குறிப்பிட பௌத்த நூல்கள் இதனை "கத்த விஜ்ஜா" (அரச வித்தை) எனவும் கத்த தா்மா (அரச தா்மம்) எனவும் குறிப்பிடுகின்றது. வான்மீகி இதனை "ஷத்ர வித்யா" எனவும் ஷத்ர தா்மம் எனவும் கவிக்கரசா் கம்பன் அரசியல்,கோவியல் போன்ற சொற்களை கையாளுகின்றாா்.

ஆங்கிலத்திலே அரசியல் Politics என்று வழங்கப்படுகின்றது. இச்சொல்P Polis என்ற கிரேக்க வோ்ச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றது. Polis என்ற கிரேக்க சொல் ஆரம்பத்தில் கிரேக்க நாட்டலிருந்த நகர அரசை (city state) குறித்தது. பிற்காலத்திலே அரசு அரசாங்கம் பற்றிய அனைத்துப் பொருள்களையும் பற்றியும் குறிக்கும் வகையில் ஒரு பரந்த பொருளுடைய சொல்லாகிவிட்டது.

தற்கால நடைமுறைக்கேற்ப Politics என்ற சொல்லிற்கு பொருள் விளக்க வந்த கில்கிறைஸ்ட் என்ற அரசியல் அறிஞா் அரசியல் என்பது இக் காலத்தில் பண்பில் மிகுதியும் பொருளியல் தன்மையும் அறிவியல் பொருளில் அரசியல் தன்மையும் கொண்ட அரசாங்கத்தின் நடப்புப் பிரச்சினைகளைக் குறிக்கின்றது என்று கூறுகின்றாா். இச்சொல் பொதுவாக ஊா், நகரம், மாநிலம், நாடு, உலகம் ஆகியவற்றின் அரசியல் பிரச்சினை பற்றிய அறிவியலாகப் பொருள் கொள்ளப்படுகின்றது.

## கௌடில்யா்

உலக ராஜதந்திரிகளின் வரிசையில் முதலிடம் பெறுபவா் கௌடில்யா் ஆவாா். இவா் சாணக்கியா், விஷ்ணு குப்தன் போன்ற பெயா்களால் அழைக்கப்படுகின்றாா். சந்திரகுப்த மௌாியனின் அமைச்சராக இருந்தவா் இவருடைய கால கட்டம் கி.மு 325 - கி.மு297 வரையானது இவரது அரசியல் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் அா்த்த சாஸ்த்திரம் வாழ்க்கை நெறிகளைப் போதிப்பதில் மகாபாரதத்துடன் ஒப்பிடக் கூடியது இந்திய தேசம் தந்த அரசியல் சிந்தனையாளரான கௌடியலிாின் கருத்து எடுத்த காாியம் முடிக்க வேண்டும். இலக்கை அடைய வேண்டும். வாழ்க்கையின் அா்த்தமே செல்வங்களைத் தேடிக் கொள்வதில்தான் இருக்கின்றது. எல்லாக் காாியத்திற்கும் பணம் தான் வேண்டும். கஜானாவில் கவனம் வையுங்கள் என்பதாகும்.

கௌடில்யா் தா்மத்தை விட சட்டம் பொிது என்பதனை உறுதிப்படுத்தினா். மதகுருவை விட சட்டம் பொிது என்பதனை உறுதிப்படுத்தினாா். மதகுருவை விட மன்னனுக்கே அதிக முக்கியத்துவத்தை வழங்கினாா். இந்திய அரசியல் களத்தில் கௌடியரது வருகை மனித சக்தியை மகத்தானதாக்கியது நல்லது நிலைக்க வேண்டுமானால் தீமையை தீமையால் அழிக்க வேண்டும் என்பதில் அவா் உறுதியாக இருந்தாா்.

ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கவும் அதனை வலுப்படுத்தவும் கௌடில்யா் மேற்கொண்ட முயற்சிகளை இன்றைய அரசியல் தலைவா்கள் சிந்திக்க வேண்டும். இதுவரை தாங்கள் அறிந்திராத பாிமாணங்களை அறிந்து கொள்வாா்கள்.

## அரசியற் சிந்தனைகள்

அா்த்த சாஸ்த்திரம் அரசியல் பற்றிக் கூறும் நூல். இது இராஜசாஸ்த்திரம்,ராஜநீதி,தண்ட நீதி, எனப் பல பெயா்களினால் அழைக்கப்படுகின்றது. அரசியலை அா்த்த சாஸ்த்திரம், என பிற்காலத்தில் வட மொழியினா் வழங்கலாயினா். அா்த்த என்பது மனித வாழ்க்கைக்கான வழிவகை எனப் பொருள்படும் என்று கௌடில்யா் கூறுகின்றாா் மற்றொரு வகையில் அா்த்த என்பது மனிதா்கள் நிறைந்த பூமியைக் குறிக்கும் என்றும் அா்த்த சாஸ்திரம் என்பது நிலத்தை அடைவதற்கும் காப்பதற்கும் உாிய முறைகளைக் கூறுவது எனவும் கௌடியல்யா் விளங்குகின்றாா்.

அா்த்த சாஸ்த்திரன் பிரதான நோக்கமானது இந்திய ஆட்சியைப் பற்றி விாிவாகக் கூறுவதாகும் தமிழ்மொழியில் திருக்குறளுக்கு வழங்கப்படும். சிறப்பும் பெருமையும் வடமொழியில் அா்த்த சாஸ்த்ரத்திற்கு வழங்கப்படுகின்றது.

முடியாட்சி நிலவிய புராதன இந்தியாவில் மன்னா் செங்கோலுன்றுவதற்கும், மக்களை நெறிப்படுத்தி காப்பதற்கும் அவா்களுக்கு பல அதிகாரங்கள் இருந்தன. அரசனின் மேன்மை,அவனது அதிகாரம் , பிறதேசங்களை கைப்பற்ற அவன் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகளை அா்த்த சாஸ்த்திரத்தில் கௌடில்யா் குறிப்பிடப்பிடுகின்றாா். அா்த்த சாஸ்த்திரமானது அதிகரணம்,பிரகரணம்,அத்தியாயம் என்ற மூன்று பெரும் பிாிவுகளையுடைய 15 அதிகரணங்களாலும் 150 அத்தியாயங்களாக 180 பிரகரணங்களாக 6000 சுலோகங்களை கொண்டுள்ளது.

இந்நூலானது அரசினைக் கட்டி ஆழ்வது பற்றியும்,போாினைத் திறம்பட நடாத்துவது பற்றியும் கூறுகின்றது. அத்துடன் நாட்டுப் பொருளாதாரத்தினை ஒழுங்கு படுத்துவது பற்றியும் கூறுகின்றது.

அர்த்த சாஸ்த்திரமானது அரசியல் பற்றிக் கூறும் போது அரசன், அமைச்சரவை, நாடு, அரண்,படை, செல்வம், நட்பு, பகை எனும் எட்டு உறுப்புக்களை பகுத்துக் காட்டுகின்றது. இவ் எட்டு உறுப்புக்களிலும் பொதுவான அரசியல் தத்துவம், பொருளியல், அரசதந்திரம், வெளிநாட்டுறவு என்பன சிறப்பானவை.

நாட்டிற்கு முதல் அமைச்சரை நியமிக்கும் போது அவன் தன் மன்னனின் நாட்டில் பிறத்தல், உயர்குடிப்பிறப்பு, நல்ல சுற்றத்தாரை உடைமை, யானை, குதிரை முதலியவற்றில் கலைப்பயிற்சி, பொருள் நூல் உணர்ச்சி, அறிவு நுட்பம், மறதி இன்மை, சோர்வின்மை, செயல்வன்மை, காலம் இடங்களிற்கேற்ற அறிவுடமை, எதிர்ச் செயல் மாற்றம், ஆண்மை, பெருமை, துன்பம் பொறுத்தல், தூய்மை, அன்புடைமை, மன்னனுடன் உறுதியான அன்பு, ஒழுக்கம், உடல் வலிநோய் இல்லாமை, காட்சிக்கு இனிமை,பகை செய்யாமை இவற்றை நன்கு அறிந்தே நியமிக்க வேண்டும். என அர்த்த சாஸ்த்திம் கூறுகின்றது.

மன்னன் தன் மகனே ஆனாலும் தன் பகைவனே ஆனாலும் சமமான முறையில் குற்றங்களுக்கு தக்க தண்டனையை விதிக்க வேண்டும். யானை, குதிரை, தேர், காலாற்படை எனும் நால் வகை உறுப்புக்களை உடைய மூலப்படை, கூலிப்படை, காட்டுப்படை, நாட்டுப்படை, பகைப்படை என்ற படைகள் மூலம் போருக்கு செல்ல வேண்டும் எனவும் குற்றம் களைதல், படையை நிலைப்படுத்தல், காட்டில் இருத்தல், வஞ்சித்தல் இவை படை விதனங்களை நீக்குவதற்கு கருவிகள் என இந்நூல் குறிப்பிடுகின்றது.

பகைவனை கொடிய விசங்களால் பலவீனப்படுத்தலாம் எனவும் அர்த்த சாஸ்த்திரம் குறிப்பிடுகின்றது. பகைவனை அழிப்பதாயின் முதலில் ஒற்றையடி வழியிலும்,மலை,தூண்,வேலி தடங்கல்,உட்பற நீர் ஆகியவற்றிலும் தன் நிலைப் படையால் கொல்ல வேண்டும் ஆறு,ஏரி,குளங்களின் அனைக்கட்டினை விரைந்து அழிப்பதால் மிதக்கச் செய்தல் வேண்டும். நிலவரண்,காடு,சுரங்கம் ஆகியவற்றுடன் உள்ள பகைவனை வஞ்சித்தல், பகை என்பவற்றால் வேண்டும் எனவும் கூறுகின்றது.

பூதி ஆஞ்ச இலை, அரிதானம் மனோசிய குண்டும் ,செம்பருத்தி,வைக்கோல் என்பவை சிவப்பெருக்கு, லவணசாரம், பசுவின் சாணம் சிறுநீகளுடன் கூட்டி அரைக்கப்பட்டால் அவற்றின் புகை குருட்டுத்தன்மையை உண்டாக்கும் எனக் கூறிய கௌடில்கர் மேலும் பல்வகை விஷ தீயைப் பற்றியும் புகைகளையும் பற்றியும் கூறியுள்ளார்.

கௌடில்யர் அரசனை மட்டும் உருவாக்கவில்லை. அரச நிர்வாகத்தையே ஒருகலையாக உருவாக்கிக் காட்டி உள்ளார். அரசன், அமைச்சர்கள், அதிகாரிகள் செய்ய வேண்டிய கடமைகளை அவர் அழகாக விபரிக்கின்றார். அர்த்த சாஸ்த்திரத்தில் மனித வாழ்வின் எந்த அம்சத்தையும் அவர் தொடவே செய்தார். அனைத்துத் துறையிலும் நழுவல் போக்கு இல்லாமல் திடமானதாகவே இருந்தது.

அப்பாவிகள் தர்மத்திற்கு பயந்தார்கள், அறிவாளிகள் சட்டத்திற்கு பயந்தார்கள்எல்லோருக்கும் தப்பு செய்வது பற்றி ஒரு பயம் இருக்க வேண்டும். அப்போதுதான் நெறிமுறைகள் காக்கப்படும். வாழ்க்கை பாதுகாப்பாக இருக்க முடியும். எனக் அர்த்த சாஸ்த்திரம் கூறுகிறது.

பொதுவாக நோக்கும் போது கௌடில்யரின் அர்த்த சாஸ்த்திரமானது வாழ்வியலின் ஒவ்வொரு அம்சத்தைப் பற்றிய அறிவையும் எமக்கு வழங்குகின்றது. ஒரு தனி மனிதரின் யதார்த்த நோக்கில் மதம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம் போன்ற எல்லா விடயங்களையும் கௌடில்யர் கூறியுள்ளார். இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு பொருந்துகின்ற கருத்துக்களாக அர்த்த சாஸ்த்திரக் கருத்துகள் அமைகின்றன. அவை எக் காலத்திலே பொருந்தும் வண்ணம் அமைந்திருப்பவை. கௌடில்யரது அறிவுத் திறமையும் தொலை நோக்கையும் காட்டுகின்றது. அர்த்த சாஸ்த்திரம் கூறும் சமூக நீதி போதிப்பது. இராஜநீதி சாதிப்பது இவை இரண்டிலும் கௌடில்யரின் தொலை நோக்கு இருக்கின்றது. அது இன்றைய வாழ்க்கை முறைகளை ஊடுருவி இன்றும் அதிகயுகங்களுக்கு தொடருவதாக அமைவதுடன் காலத்தால் அழியாத எந்த ஒன்றும் நாம் கடைப்பிடிக்கத்தக்கது என்பதையும் உணர்த்துகின்றது.

# நிர்வாக நடவடிக்கைகளில் மேலாண்மையும் தலைமைத்துவமும்



திரு.கந்தசாமி ஜெபநேசன்(SLTSI)

R.C (s.p.Trd),B.A,Dip.in.Edu,M.A(Pub.Ad)
யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி.

இன்றைய சமுதாயத்தில் காணப்படும் பல்வகைப்பட்ட நிறுவன அமைப்புக்கள் உன்னதமான முறையில் செயற்பட்டுக்கொண்டிருப்பதற்கு அதன் மேலாண்மையும், தலைமைத்துவமும் முக்கிய பொறுப்பினை கொண்டிருக்கின்றது. இதனடிப்படையில் நிர்வாக அலகை சிறப்பிக்க அதன் மேலாண்மையும் தலைமைத்துவமும் வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கியுள்ளமை சிறப்பு மிக்கதாகும். ஆகையினால் சிறப்பான மேலாண்மையும் தலைமையும் கொண்டிருக்கின்ற விசேட குணவியல்புகளை ஆழமாக நோக்குவது இன்றியமையாததாகும்.

நிாவாக நடவடிக்கைகளில் மேலாண்மை என்பது ஒரு நிாவாகத்தின் இதயமென "டாக்டர் அப்பில்சி கூறுகின்றார். மேலாண்மை நிர்வாகத்தின் முழுமையை தன்னகத்தே கொண்டுள்ளது. சிறப்பான தலைமைக்கு இம் மேலாண்மை முக்கிய இடமாகக் கொள்ளப்படுகின்றது. ஏனெனில் ஒரு நோக்கத்தை அடையும் பொருட்டு குழுக்களை அமைத்தும் அதனை வழிப்படுத்தியும் செயற்படுத்தியும் வருவதனாலாகும். எனவேதான் இம் மேலாண்மைக்கு நுட்பத்திறன் அவசியமாக காணப்படுகின்றது. வளர்ந்துவரும் அறிவியல் நிலைக்கேற்ப இவை வளப்படுத்தி செயற்படுத்தப்படல் வேண்டும். மேலாண்மை என்பது ஒரு கூட்டுமுயற்சியாகும். இது அனைவரினதும் ஒத்துழைப்போடும் நிர்வாகப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வழிசமைப்பது எனவும் கருதப்படுகிறது. அதிகாரத்தையும் பொறுப்பையும் தனியே பயன்படுத்துவதாக மட்டும் இருந்து விடாது அவற்றினை நிறைவு செய்யக்கூடிய வகையில் மேலாண்மைத்திறன் காணப்பட வேண்டும். மேலாண்மைக்கு அடிப்படை அதிகாரம் என கருதப்பட்டாலும் இவ்வதிகாரம் படிநிலைக்கேற்ப பயன்படுத்தல் சிறப்புமிக்கதாகும். அத்துடன் மேலாண்மை பொறுப்பு வாய்ந்ததாக இருப்பதுடன் அனைவரிற்கும். பதிலளிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். தான்தோன்றித் தனமாக செயற்படாது சிறப்பான மேலாண்மையானது நியாயமாகவும், நேர்மை நீதியாகவும் செயற்படல் வேண்டும் இவ்வகையிலே இன்று மேலாண்மையானது. மூன்று வகையாக செயற்பட்டு வருகின்றது.

1. உயர் மேலாண்மை
2. இடை மேலாண்மை
3. செயல் களம்

இம் மூன்று வகை மேலாண்மை நன்மைகளும் படிநிலை ஒழுங்கில் அமைக்கப்பட்டு வருகின்றது. உயர் மேலாண்மையாளர்கள்.நிர்வாகத்தை செயற்படுத்தும்

பொருட்டு வழிகாட்டுபவர்களாகவும், செம்மைப்படுத்துபவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களின் நிர்வாகம் செம்மையாக செயற்படவும் திறமையான செயல்கள் எவையெனத் தீர்மானிக்கவும் அவை எப்படி செயற்பட வேண்டுமென வழிகாட்டலினை மேற்கொள்பவர்களாகவும் காணப்படுவார்கள். இவ்வகையினர் செய்யும் செயல்கள் யாவற்றிற்கும் தாங்களே பொறுப்பானவர்களாகவும் காணப்படுவர்.

இடை மேலாண்மையாளர்கள் நிர்வாகத்தின் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளும் செயற்பாட்டாளர்களாகவும் காணப்படுவர். உயர் மேலாண்மைக்கும் செயல் களத்திற்கும் இடையில் இப்பணியாளர்கள் காணப்படுவர். உயர் மேலாண்மையின் பணிகளிற்கு செயல்களம் அமைக்கும் போது ஏற்படும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்து வைக்கலாம். என்பது பற்றி பரிசீலனை செய்து அதனை உயர் மேலாண்மைக்கு அனுப்பி வைக்கும் செயற்பாட்டினை இடை மேலாண்மையினர் மேற்கொண்டு வருகின்றனர். இதனடிப்படையில் தான் நிர்வாகப் பிரிவில் இடை மேலாண்மையினர் அதிகளவில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர் . இன்னொரு வகையில் பார்க்கும் போது இவர்களே நிர்வாகம் சம்பந்தமான விடயங்களிற்கு கருத்து வழங்கும் பொறுப்பினையும் கொண்டிருக்கின்றனர். எனவே நிர்வாக ஒழுங்கு முறைகளை நன்கு தெரிந்தவர்களாகவும் இவர்கள் இருக்க வேண்டும் எனக்கொள்ளப்படுகின்றது. அனைவரையும் அரவணைத்து பணி செய்ய ஊக்குவிப்பாளர்களாகவும் தலைமைத்தன்மை உடையவர்களாகவும், அனுபவ அறிவு அதிகம் உள்ளவர்களாகவும் காணப்படுதல் இவர்களின் பதவியை வலுவுள்ளதாக்கும்.

செயல்கள நிலையினர் படிநிலை ஒழுங்கில் வரும் விடயங்களை செயற்படுத்துவது பற்றிய கடமைப்பாடு உடையவர்களாக இருத்தல் வேண்டும் இவ்வாறான மேலாண்மை முக்கியத்துவத்தை வலியுறுத்தி தலைமைப்பண்பினை கொண்டிருப்போர் பின்வரும் விடயங்களை முதன்மைப்படுத்துபவராக காணப்படுகின்றனர்.

தலைமை என்பது சிறந்த வழிகாட்டியாகக் காணப்படுகின்றது. இன்றைய வளர்ந்து வரும் அமைப்புக்களில் அதன் எண்ணிக்கையளவுகள் - தனித்துவம் - தொழில்நுட்ப வளர்ச்சி - சமூகத் தேவை ஆகியன தலைமையில் பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன. அமைப்பின் சிக்கல்களைக் காப்பதும், அதன் தடைகளைக் களைவதும் பொறுமையாக செயற்படுவதும், அமைப்பினை சுதந்திரமாக செயற்படுத்தி முன்னிலையில் வைக்கும் பெருமையும் சுதந்திரமான தலைமையின் முக்கிய செயற்பாடுகள் என செஸ்டர் ஐ பார்னார்டு கூறியுள்ளார்.

உயர் அதிகாரம், உயர் தத்துவம், உயர் அறிவு, உயர் மதிநுட்பம், உயர் முடிவெடுக்கும் ஆற்றல் ஆகியவை தலைமைக்கு பெருமை சேர்ப்பன. இவற்றில் சிலவற்றையேனும் தலைமையானது பெற்றிருக்க வேண்டும். அத்துடன் தலைமை மேம்பாடு - உடையவராகவும் - முன்னோடியாகவும் - சிறப்புற்றவராகவும் -ஆணையிடுபவராகவும் வழிகாட்டியாகவும் ,செயற்படுத்தும் அதிகாரம் கொண்டவராகவும் இருத்தல் தலைமையின் முக்கிய பண்பாக அமைதல் வேண்டும். தலைமையின் வெற்றியானது தனது பணியாளர்களை இணங்க வைத்தல் கட்டாயப்படுத்தல் அகத்தூண்டுதல் ஆகிய செயற்பாடுகளிலே தங்கியுள்ளது. எனலாம் தலைமை தனக்குக் கீழுள்ள பணியாளர்களை உற்சாகப்படுத்தி ஒருங்கிணைக்க

அவர்களின் ஒத்துழைப்போடு அமைப்பை இயங்க வைத்து நோக்கத்தை அடைவது சிறப்பான நிர்வா செயற்பாடு எனக் கொள்ளப்படும்.

'விரைவாக முடிவுகளை எடுக்கக் கூடியவர்கள் சிறப்பான தலைவர்கள் அல்ல' என மேரி பார்க்கர் போலண்ட் குறிப்பிடுகின்றார். முன் கூட்டியே சிந்தனை செய்து செயலாற்றுவது தலைமையின் இரகசியம் ஆகும். இதன் மூலம் வரக்கூடிய பிரச்சினைகளை முன்கூட்டியே திட்டமிட்டு அதனைத் தடுக்கக் கூடிய வழிவகைகளை மேற்கொள்ள முடியும் இவ்வாறு செயற்பட்டால் நிறுவன அமைப்புகளில் பிரச்சினைகள் உருவாகுவதை தடை செய்ய முடியும் பிரச்சினைகள் வந்தாலும் அதனை எளிதாக தீர்க்க முடியும். தலைமையானது எல்லாச் செயற்பாடுகளோடும் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். அப்படி செயற்பட்டால் மட்டுமே முழுமையான தலைமைப் பண்பை வெளிப்படுத்த முடியும்.

தலைமை பதவியால் மட்டும் வருவது ஒன்றல்ல. அது அறிவால் வருதல் வேண்டும். அதுவும் செயல்முறை அறிவால் வருதல் வேண்டும். தலைமை தன் பணியாளர்களை கட்டுப்படுத்த வேண்டும். ஆயினும் தன் கருத்தை பிறர் கருத்தோடு மோதல் நிலை உருவாகாமல் ஏற்றுக் கொள்ள வைப்பது உன்னதமான தலைமைக்கு அடையாளமாகும். இல்லாவிடில் அமைப்பை ஒன்றினைத்து ஒருங்கிணைக்க முடியாத நிலை காணப்படும். இதனடிப்படையில் தலைமையினர் பின்வருமாறு 03 வகைப்படுத்தப்படுகின்றனர்

1. அதிகாரத் தலைமை - இது ரெயிலரின் அறிவியல் மேலாண்மைக் கருத்தினால் உருவாக்கம் பெற்றது.
2. பங்கேற்புத் தலைமை - இது எல்டன் மாயோவின் செயற்பாட்டுப் பணியாளன் நல்வாழ்வுத் தன்மையில் உருவாக்கம் பெற்றது.
3. வசீகரத் தன்மை - இது விசேடமான குணவியல்புகளைக் கொண்ட தலைமைப் பண்பினைக் கொண்டதாக உருவாகியது.

மேற்படியான விடயங்களை உட்படுத்தி தலைமையானவர் ஒருவர் பின்வரும் தன்மைகளை தன்னகத்தே கொண்டிருப்பது சிறப்புடையதாகக் காணப்படும்.

1. உடல் ஆரோக்கியத்துடன் திறமையாளராக இருத்தல்.
2. தன்னம்பிக்கையுடன் வேலை செய்யும் மனப்பாங்கு காணப்படுதல்.
3. பிறரை மதிப்பதும், பிறர் நலன் கருதி அன்போடு பழகுபவராக இருத்தல்
4. தகவல்களைப் பெற்று தன்னை வளர்ப்படுத்திக் கொள்பவராக இருத்தல்.
5. நேர்மையையும் ஒழுக்க உணர்வுகளையும் தன்னகத்தே கொண்டு நியாயத்துடன் பணியாற்றுபவராக' இருத்தல்.
6. பணியாளர் குறைகளைக் கேட்டு அதற்குப் பரிகாரம் கண்டு அவர்கள் மேல் விசுவாசம் கொண்டவராக இருத்தல்.
7. சுயநலத்தன்மை அற்றவராக இருத்தல்.
8. உளவியல் பண்பினை உணரக் கூடியவராக இருத்தல்
9. தங்கள் முடிவினை மற்றவர்கள் ஏற்க வைக்கக் கூடிய திறமையாளராக இருத்தல்.

தனது திறன்களைக் காட்டி பிறரைக் கட்டுப்படுத்தியாளும் ஆற்றல் கொண்டவர். தலைமையாளர் என்பது முன்னைய கருத்து ஆனால் இன்று இந்நிலை

மாற்றப்பட்டுள்ளது. தலைமையாளர் தன்னைப்போல் தனக்கு கீழ் உள்ளவர்களையும் முன்னேறச் செய்யும் தன்மை கொண்டவர் என்பது இன்றைய தலைமையாளர் பண்பெனக் கொள்ளப்படுகிறது. பொருத்தமான கல்வியையும் தேவையான பயிற்சியையும் வழங்க முன் வருவதுடன் வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றங்களுக்கு ஏற்ப மனித சமூக உறவினை வளர்த்துக் கொள்ள வேண்டும். அமைப்பின் ஒற்றுமையைக் காக்கக் கூடியவராகவும், அதிக பொறுப்புக்களை உடையவராகவும் காணப்படல் வேண்டும். இன்றைய தலைமைப் பணியின் முக்கிய விடயங்களை வலியுறுத்தி சில கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1. திறமைக் கோட்பாடு
2. சமூக அளவுக் கோட்பாடு
3. சூழ்நிலைக் கோட்பாடு
4. பொதுத் திறன் கோட்பாடு

மேற்படி கோட்பாடுகளை உள்வாங்கி சிறப்பான தலைமையினை உருவாக்குவது. இன்றைய காலத்திற்கு பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. இந்தவகையில் பால்ஹெய்ச் அப்டில்சி பொதுத் துறைத் தலைவர்களிற்கு பின்வருவன முக்கியமான தகுதியெனக் கருதுகின்றார்.

1. பொறுப்பை ஏற்கும் விருப்பம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
2. தன்னுடைய அறிவையையும் திறமையையும் வளர்த்துக் கொள்ள முயற்சியுடையவராக இருத்தல் வேண்டும்.
3. கொள்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதிப்பாடு உடையவராக இருத்தல் வேண்டும்.
4. தகவல்களை அவதானிப்பதோடு, அதன் குறைகளையும் அவதானித்தல் வேண்டும்.
5. பணியாளர்களோடு எவ்வாறு நல்லுறவினை ஏற்படுத்திக் கொள்ளலாம் என அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
6. தன்னைச் சுற்றி திறமையான பணியாளர்களை வைத்திருத்தல் வேண்டும்.
7. அமைப்பின் வளங்களை வீணடிக்காது முழுமையாக பயன்படுத்தத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
8. அதிகாரத்தை ஆவணமாக பயன்படுத்த கூடாது.
9. பிரச்சினைகளை அறிந்து அதனைத் தீர்க்கும் பக்குவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
10. பிரச்சினைகளை உடனடியாக தீர்க்காமல் விடுவது நாளடைவில் அது பாரிய பிரச்சினையாக இருக்கும் என்பதை உணர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

மேலாண்மையும், தலைமையும் இன்றைய நிறுவன அமைப்புகளின் வெற்றிக்கு முதற்படியானவையென மேற்படி விடயங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இதனை ஆதாரமாகக் கொண்டு நிறுவனக் கட்டமைப்பின் முதன்மையாளர்கள் செயற்பட்டுபவரின் நல்ல பணியாளர்களை உருவாக்கி அவர்களின் செயற்பாடுகளை காத்திரமுள்ளதாக்கி நிறுவன அமைப்புகளை நல்ல முறையில் செயல்படுத்தி நல்ல அடைவுகளையும், வெளியீடுகளையும் வழங்கிவரின் நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பி அதன்மூலம் நாட்டினை செம்மைப்படுத்தின் அது அனைத்து வெற்றிக்கும் ஆக்கபூர்வமானதாக அமையும் எனலாம்.

# தாபன விதிக்கோவையில், வேதனக் கடன்



திரு.ஆனந்தராஜா.விமலராஜா
B.A,Dip.in.Edu,M.A,(SLPS III)
பிரதி அதிபர்,
யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி

பொதுவாக எந்தவொரு நிறுவனத்திற்கும் அந்தந்த நிறுவனங்களின் சட்டதிட்டத்திற்கு அமைய விதிப் பிரமாணம் ஏற்படுத்தப்பட்டிருக்கும். குறிப்பிட்ட அந்த நிறுவனம் அரசாங்க நிறுவனமாகவோ அல்லது தனிநபர் நிறுவனமாகவோ இருந்தாலும் கூட குறிப்பிட்ட அந்த நிறுவனத்திற்கு என இலங்கை அரசாங்கத்தின் சட்டதிட்டத்திற்கு அமைய விதிப் பிரமாணங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். அந்த வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு என 1972 ம் ஆண்டு வரை தாபன விதிக் கோவை ஏற்படுத்தபடவில்லை. காலத்திற்கு காலம் வெளியிடப்பெற்ற பல திறைசேரிச்சுற்றறிக்கைகள்,திறைசேரிச் சுற்றறிக்கைக் கடிதங்கள் என்பனவே தாபன விடயங்கள் சம்பந்தமான அறிவுறுத்தல்களின் இருப்பிடமாக விளங்கிவந்துள்ளன. பல்வேறு அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் தாபன வேலை ஆற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு என ஏற்படுத்தப்பட்ட இச் சுற்றறிக்கைகள் கோவை வடிவத்தில் இல்லாமையால் அவர்களிடம் சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் தொடர்பில் முடிவு மேற்கொள்வதில் திணைக்களத் தலைவர்கள் சிரமமுற்றனர்.

இதன் விளைவாக முடிவுகளை மேற்கொள்வதில் கால தாமதம் ஏற்பட்டதுடன் அடிக்கடி பல கேள்விகளும் எழலாயின. ஆதலினால் இலங்கை அரசாங்க நிருவாகத் திணைக்களமானது திறைசேரிச் சுற்றறிக்கைகளையும்,சுற்றறிக்கைக் கடிதங்களையும் ஏற்புடைய நிதி நிருவாக ஒழுங்கு விதிகளையும் மீள நோக்கிக் கோவைப்படுத்தும் பணியினை மேற்கொண்டது. சுற்றறிக்கைகள்,கடிதங்களில் காணப்பட்ட காலத்திற்கு பொருந்தாத பலவற்றை நீக்கி செப்பமான புதிய ஏற்பாடுகளையும் புகுத்தியும் இலங்கை அரசிற்கு என 1972ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் அரசாங்க நிருவாகத் திணைக்களமானது “இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக் கோவை” வடிவிலான விதிப் பிரமாணத்தை வெளியிட்டது. இது நூல் வடிவில் இல்லாது கோவை வடிவில் வெளியிட்டமைக்கு காரணம் தாபனக் கோவை விதியானது நிலையான சாதனமாக இல்லாமல் காலத்திற்கு காலம் திருத்தம் செய்ய வேண்டி இருந்ததால் இது கோவை வடிவில் வடிவமைக்கப்பட்டது. அமைச்சுக்கள்,திணைக்களங்கள் தாபன விடயங்கள் சம்பந்தமான முடிவுகளை அவைகளே மேற்கொள்ள உதவும் நோக்கிலேயே தாபன விதிக்கோவை ஏற்படுத்தப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் தாபனக் விதிக் கோவையானது 46 அத்தியாயங்களாகவும் அதன் உப பிரிவுகளைக் கொண்டு கோவைப்படுத்தப்பட்டுள்ளது.

## அத்தியாயம் I

1. பொருள் கோள்
2. விதிக் கோவைக்கியலும் திருத்தங்கள்
3. விநியோகம்

## அத்தியாயம் II

### ஆட்சேர்ப்பு நடைமுறைகளும்,நியமிப்புக்களும்

1. பொது
2. நியமிப்பு பதவி உயர்வுத் திட்டம்
3. விளம்பரம்
4. நியமிப்புத் தத்துவம்
5. நியமிப்புக்கள்,பதவி உயர்வுகள் செய்வதற்கான நடைமுறைகள்
6. நியமிப்புக்கள்,பதவி உயர்வுகள் சார்பாக திருப்தியளிக்க வேண்டிய முன் நிபந்தனைகள்
7. அரச சேவை நியமிப்பு சார் தகமைக் கோடு
8. நியமிப்புக் கடிதங்கள்
9. மீள வேலைக்கு அமா்த்துதல்
10. நியமிப்பு நடைமுறை
11. தகுதி கூா்நிலை
12. நியமிப்புக்கள் சார் பிற பொது நிபந்தனைகள்
13. பதில் நியமிப்பு
14. முது முறை
15. வினைத்திறமை காண் தடை
16. திணைக்களப் பரீட்சைகள்

## அத்தியாயம் III

### இடமாற்றங்கள்

1. பொது
2. இடமாற்றம் பணித்தற்குரிய அதிகாரி
3. இடமாற்றச் சபைகள்
4. இடமாற்றம் பற்றிய அறிவுறுத்தல்கள்
5. மேன் முறையீடுகள்
6. இடமாற்றங்கள் தொடா்பான நடவடிக்கைகள் சாா் கால அட்டவணை

## அத்தியாயம் IV

### மாதச் சம்பளம் தற்காலிக தகுநிலை,நிரந்தரத் தகுநிலை ஓய்வூதியம் பெறுநிலை ஆகியன வழங்கல்

1. தகுநிலையின் வரைவிலக்கணம்
    1. பதவியின் தகுநிலை
    2. பணியாளரின் தகுநிலை
2. மாற்று நிலையினா் அமய,தற்காலிக,நிரந்தரப்பணியாளா் என்பவற்றின் வரவிலக்கணம்.
3. அமைய அடிப்படையில் ஆட்சோ்ப்பு

4. தற்காலிக தகுநிலையும்,மாதச் சம்பளமும் வழங்கல்.
5. நிரந்தரத் தகு நிலை வழங்கல்
6. ஓய்வூதியம் சேர் பதவியும் ஓய்வூதியம் பெறு நிலையும்

## அத்தியாயம் V

## விடுபாடு,மீள்வு,தொழில் முடிவுறுகை

1. அரசாங்க சேவையில் பிறிதோர் பதவியில் நியுமித்தற்பொருட்டான விடுபாடு
2. அரசாங்க சேவைக்கு வெளியே உள்ள சேவைப் பொருட்டு விடுபாடு
3. மீள்வு
4. விலகல்
5. இளைப்பாறுகை
6. நியமனம் முடிவுறல்
7. பதவி விட்டு நீங்கல்
8. பதவி நீக்கம் போல்வன,பெற்ற உத்தியோகஸ்தர்கள் பற்றிய விபரத்திரட்டு, சுட்டு என்பன.

## அத்தியாயம் VI
## சேவைப்பதிவுகள்,அறிக்கைகள்,சான்றிதழ்கள்

1. பொது
2. வரலாற்றுத் தாள்கள்
3. பெயர்வழிப் பதிவுக் கோப்புகள்
4. அந்தரங்க அறிக்கைகள்
5. சேவைச் சான்றிதழ்கள்

## அத்தியாயம் VII
## வேதனம்

1. பொது
2. ஆண்டின் அல்லது மாதத்தின் பகுதிக்கான வேதனத்தின் தொகைக் கணிப்பு
3. முதல் நியமனத்தின் போது வேதனம்
4. வேதன அளவுத்திட்ட மீளாய்வின் போது வேதனம்
5. பதவி உயர்வின் போது வேதனம்

6. மீள்வின் போது வேதனம்
7. இடை நிறுத்தலின் போது வேதனம்
8. மீளப் பணிக்கமர்த்தல்,மாற்றுப்பணி,விடுபாடு ஆகியவற்றின் மீதான வேதனம்
9. வேதன ஏற்ற அனுகூலம்
10. வேதன ஏற்றங்கள்
11. இறந்த உத்தியோகத்தரின் வேதனம்
12. பதிற் சேவை வேதனமும் விசேட மேலதிக ஊதியமும்

## அத்தியாயம் VIII
## படிகள்

1. விவாகப்படி
2. வேலை நிலையப்படி

## அத்தியாயம் IX
## கட்டணங்கள்

1. பொது
2. அரசாங்க சேவைக்கு கட்டணம் பெறல்
3. பகிரங்க நிறுவனங்களுக்கும்,தனியார் நிறுவனங்களுக்கும் ஆற்றிய சேவைசார் கட்டணங்கள்
4. ஒலி பரப்புரைகள் விரிவுரைகள்
5. பெறுமதிக் கணிப்புக் கட்டணம்
6. விரல் அடையாளப் பதிவாளர் சேவைகள்
7. பிசுக் கால் கட்டணங்கள்
8. மாவட்டமன்று, விண்ணப்பமன்று,நீதவான் மன்று,முதலியனசார் கட்டணங்கள்
9. கச்சேரிகளிலும் பிறதிணைக்களங்களிலும் தேடல் மொழிபெயர்ப்புக் கட்டணங்கள்
10. நாட்டுவரி திணைக்களத்தின் படி எடுத்தற் கட்டணம்
11. அரசாங்க சாதன நிருபணக் கட்டளைச் சட்டத்தின் 3ம் பிரிவின் கீழ் படி எடுத்தற் கட்டணம்
12. பிணைக்கள் பற்றிய அறிக்கை சார் கட்டணம்
13. நீதித்துறைசார் வேலைப் பொருட்டு மருத்துவ உத்தியோகஸ்தர்களுக்கு அமைந்த கட்டணங்கள்
14. தொழிலாளர் நட்டஈட்டு சார் சேவைகள் தொடர்பில் மருந்து உத்தியோகஸ்தர்களுக்கு கட்டணங்கள்
15. விசேட சந்தர்ப்பம் சார் மருத்துவச் சிகிச்சைக்குரிய சேவைக் கட்டணங்கள்
16. கணக்கிடல்

## அத்தியாயம் X
## மேலதிக நேரம்,விடுமுறை,விடுமுறைச் சம்பளம்

1. நிதி ஏற்பாடுகளும் செலவினஞ்சார் அதிகாரமும்
2. மேலதிக நேரக் கட்டுப்பாடு
3. மேலதிக நேரக் கொடுப்பனவுக்குரிய சந்தர்ப்பங்கள்
4. மேலதிக நேரக் கொடுப்பனவிற்கு வழமையில் தகுதி இல்லாத தரங்கள்
5. கணக்கில் கொள்ளத்தகு கால எல்லைகள்
6. கொடுப்பனவு வீதங்கள்

7. வரம்புகள்
8. விடுமுறைகள்
9. விடுமுறைச்சம்பவம்

## அத்தியாயம் XI
(கோவையில் சேர்க்கப்படவில்லை)

## அத்தியாயம் XII
## லீவு

1. பொது
2. லீவு வழங்கும் அதிகாரி
3. வேலை நிலையத்தில் இல்லாதிருப்பதற்கான லீவு
4. ஒரு நாளின் ஒரு பகுதிக்கான லீவு
5. அமைய லீவு
6. பினி லீவு
7. பதில் லீவு
8. ஓய்வு லீவு
9. விபத்து லீவும் விசேட லீவும்
10. காலங்கடந்த லீவு
11. இளைப்பாறுகை நோக்கிய லீவு
12. விசேட லீவு
13. கடமை லீவு
14. முழுச் சம்பள படிப்பு லீவு
15. சம்பளம் அற்ற படிப்பு லீவு
16. சம்பாதித்த லீவு
17. பிரசவ லீவு
18. அரசாங்க எழுதுநர் பரீட்சைக்குத் தோன்றும் உத்தியோகத்தர்களுக்கு லீவு
19. கட்டாய லீவு
20. அரைச் சம்பள லீவு
21. சம்பளம் வழங்கப்படா லீவு
22. தீவுக்கு வெளியே கழிக்கவுள்ள லீவு
23. ஆசிரியர்களுக்கு லீவு
24. பருவமன்று ஆணையாளருக்கு லீவு
25. உபநிலை உத்தியோகத்தர்களுக்கு லீவு
26. சிறு நிலைப் பணியாளர்களுக்கு லீவு
27. நாட் சம்பள பணியாளருக்கான லீவு
28. குறிப்பிட்ட ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தத்தின் கீழ் சேவையாற்றும் தற்காலிக உத்தியோகத்தர்களுக்கு லீவு
29. திட்டவட்டமான சில வருட காலங்களுக்கு என ஒப்பந்தங்களின் கீழ் சேவை செய்யாத தற்காலிக உத்தியோகத்தருக்கான லீவு
30. பொலிசு சாசன்கள், ஊர்காவலர்களுக்கான லீவு

31. சிறைக் காவலர் தரத்திற்கு கீழ் நிலையில் உள்ள சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான லீவு
32. பயிலுநர் பயிற்சியாளர்க்கு லீவு
33. அமைய பணியாளருக்கு லீவு
34. யாக்கங்களின் சேவையாற்ற விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு லீவு
35. புதிதாகச் சேர்ந்தவர் அல்லாத உத்தியோகத்தர்க்கு லீவு

## அத்தியாயம் XIII
## புகையிரத ஆணைச் சீட்டுக்கள்

1. பொது
2. புகை வண்டி ஆனைச் சீட்டுக்கள் வழக்கப்படுதற்குரிய நோக்கங்கள்
3. பயன்படுத்தப்படாத ஆணைச்சீட்டுக்கள் அல்லது பயனச் சீட்டுக்கள்
4. ஆணைச் சீட்டுக்கள் தயாரித்தல்
5. பொட்டணங்கள், பயன மூடைகள் கொண்டு செல்லல்.
6. அட்டைச் செல்கைச் சீட்டுக்கள்,சலுகைப் பருவப் பயணச் சீட்டுக்கள்

## அத்தியாயம் XIV
## கடமைப் பொருட்டு உள் நாட்டிற் பிரயாணம்

1. பொது
2. பயனத் தொடக்கத் தினம்
3. சிக்கனம்
4. இணைந்தபடி
5. பிரயாணவகை
6. வீதி வழிப் பிரயானம்
7. தனிப்பட்ட வாகனம் அல்லது வாடகை வாகன வழிப் பிரயாணம்
8. மைற் கூலி - கார் வண்டிகள்
9. மைற்கூலி - ஏனைய வாகனங்கள்
10. இரவல் மோட்டார் வண்டிகளைப் பயன்படுத்துதல்
11. ஒருவருக்கு மேற்பட்ட உத்தியோகத்தரால் ஒரு வாகனம் உபயோகிக்கப்படல்.
12. நிலையானவும் மாற்றிப் பெறுவனவுமான படிகள்
13. நிலையான போக்குவரத்துப் படிகள்
14. மாற்றிய படிகள்
15. தொழிலாளர் சலார்
16. வாகனத்தைப் புகை வண்டி வழி கொண்டு செல்லல்
17. பிரயாணம் நிமிர்த்தமான ஏனைய இடைநேர் செலவுகள்
18. புகை வண்டிப் பயண வகுப்பு
19. புகை வண்டி ஆணைச் சீட்டுக்கள்
20 வண்டிச் சாரதிகள், காரியாலய காரிய சகாயர்கள் வேலையாளர்கள்
21. நிலைய மாற்றப் பொருட்டான பிரயாணச் செலவுகள் - இனைந்த படிகள்
22. நிலைய மாற்றப் பொருட்டான பிரயாணச் செலவுகள் - உத்தியோகத்தார், குடும்பத்தினர் செல்கை

23. நிலைய மாற்றப் பொருட்டான பிரயாணச் செலவுகள் - வேலையாளர்கள்,தளபாடங்களைக் கொண்டு செல்லல்.
24. சொந்த ஊர் நிலையத்திற்கு எடுத்துச் செல்லல்
25. குறுகிய கால அறிவித்தலில் இடமாற்றம்,இடமாற்றம் பின் போடல் நீக்கல் ஆகியன.
26. கெட்ட நடத்தை காரணமாக இடமாற்றம்
27. ஆணைக் குழுக்கள்,விசேட குழுக்கள் சார் உறுப்பினர்கள்
28. பிரயாணச் செலவு பொருட்டான முற்பணம்
29. பிரயாணச் செலவுக் கோரிக்கைகள்
30. சிலவகை உத்தியோக ரீதியான பிரயாணங்கள்
31. அரசாங்க சேவையாளர் அல்லாத பிறர்
32. தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள்

## அத்தியாயம் XV
## படிப்பு பயிற்சி அல்லது கடமை பொருட்டான வெளிநாட்டுப் பிரயாணம்

1. இவ் விதிகளின் அமைவுடமை
2. பயிற்சி படிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்
3. தகுதி
4. முழுச் சம்பளப்படிப்பு லீவுப் பொருட்டான உடன்படிக்கைகள் முறிகள்
5. சம்பளமற்ற லீவுப் காலத்து அமையும் உடன்படிக்ககைகள்
6. புலமைப்பரிசில்,பயிற்சிப் படிகள் முதலியன
7. உணவுப்படி - மூன்று மாதத்துக்கு மேற்படாத காலத்திற்குரியது
8. உணவுப்படி - மூன்று மாதத்திற்கு மேற்படு காலத்திற்கு
9. அணியடுக்குப் படிகள் முற்பணங்கள்
10. பிரதம அமைச்சரின் அனுமதி
11. பிரயாண வகுப்பு
12. பிரயாண மார்க்கம்
13. உடன் கொண்டு செல்லாப் பயணப் பொதிகளை ஏற்றிச் செல்லல்
14. காப்புறுதி - வான்வழி விபத்துக்கள்
15. மருத்துவச் சோதனை

## அத்தியாயம் XVI
## அரசாங்கம் பணியாளர் மீது கொண்டுள்ள உரிமைகள்

1. உத்தியோகத்தர்களின் வழக்கமான பணிக்கு அல்லது அலுவலகத்திற்கு வெளியே இயலும் சேவைகள்
2. புதுக் கண்டு பிடிப்புக்களும் ஆக்கவுரிமையும்

## அத்தியாயம் XVII
## விடுமுறைப் பிரயாணம்

1. உரித்துடைமை
2. ஆணைச் சீட்டுக்கு விண்ணப்பித்தலும் ஆணைச் சீட்டு வழங்கலும்
3. பயன்படுத்தப்படாத ஆணைச் சீட்டுக்கள் பயனச் சீட்டுக்கள்
4. ஆணைச் சீட்டு,பயனச் சீட்டுக்களைத் தவறாகப் பயன்படுத்துதல்

5. பதிவேடு,கணக்கீட்டு நடைமுறை
6. வான்வழிப் பிரயாணம்
7. வான்வழிப் பிரயாணத்திற்கான ஆணைச் சீட்டு வழங்கல் கணக்கிடுதல் இவற்றிற்கான நடைமுறை

## அத்தியாயம் XVIII
## உத்தியோக வதிவிடங்கள்

1. மகாதேசாதிபதி,பிரதம அமைச்சர்,சபாநாயகர்
2. பிரதம நீதியரசர்

## அத்தியாயம் XIX
## அரசாங்க இலக்கங்கள்

1. வகைப்பாடு
2. இல்லங்கள் அமைத்தல்
3. இல்லங்களைத் தயார்படுத்தல்
4. குறித்தளித்தல்
5. வாடகை
6. குடியிருப்பு நிபந்தனைகள்
7. தண்டம்
8. பொருட் பதிவேடு பேணல்
9. உடைமை மீட்பு

## அத்தியாயம் XX
## விடுமுறை வங்களாக்கள்

1. கிடைக்கத் தகும் வங்களாக்கள்
2. விண்ணப்பங்கள்
3. தகுதித் தரங்கள்
4. தங்கி இருக்கும் கால உச்ச அளவு
5. குறித்தளித்தல்
6. வாடகை
7. உடைவுகள் சேதங்கள்

## அத்தியாயம் XXI
## தொழிற் சங்க உறுப்பினர்களுக்குள்ள சலுகைகள்

1. ஒப்பப் பணம் அறவிடல்
2. கடமை லீவு
3. புகைவண்டி ஆணைச்சீட்டு
4. தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் இடமாற்றம்
5. திணைக்களச் சுற்றிக்கைப் பிரதி வழங்கல்
6. தொழிற் சங்கமென்பதன் பொருள்

## அத்தியாயம் XXII
## பாதுகாப்பு உடையும் கோல உடையும்

1. வழங்கல் நிருணயக் கோட்பாடுகள்
2. பொதுத் தரங்கள்
3. வழங்கற் பங்கு
4. ஏனைய தரத்தினர்

## அத்தியாயம் XXIII
## நலனோம்பு வசதிகள்

1. நிதி ஏற்பாடு
2. விண்ணப்ப முறை
3. தடை விதிக்கப்பட்டுள்ள செலவினம்
4. முதன்மை
5. பொருட்பதிவேடு ஆகியன
6. உண்டிச்சாலை மின்சாரம்
7. அனுமதிக்கப் பெற்ற செலவின விடயங்கள்

## அத்தியாயம் XXIV
## சில்வகை நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பிலான விசேட சலுகைகள் நிபந்தனைகள்

1. விசேட முழுச் சம்பள லீவு
2. எடுத்தொழிந்த லீவு
3. காலாந்தரப் பரீட்சைகள்
4. அனுகூலமான சுவாத்தியமும் இலேசான கடமைகளும்
5. மறுசீரமைப்பு

## அத்தியாயம் XXV
## வேதனக் கடன்

1. பொது
2. கடன் வழங்கத் தகு நோக்கங்கள்
3. கடன் வழங்கத்தகு பொது நிபந்தனைகள்
4. கடன் வழக்கிலுள்ள காலத்தில் இளைப்பாறும் அல்லது இறக்கும் அல்லது சேவை முடிவு பெறும் உத்தியோகத்தர்களும் யாக்கச் சேவையின் பொருட்டு விடுபாடு பெற்ற உத்தியோகத்தர்களும்
5. கடன் அனுமதிக்கும் அதிகாரி
6. கடன் கொடுப்பனவுக்கு வகை செய்யும் உத்தியோகத்தரின் பொறுப்பு
7. மோட்டார் வண்டி வாங்குவதற்கு கடன்
8. மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு கடன்
9. மிதி வண்டி வாங்குவதற்கு கடன்
10. "இடுக்கண்" முதலாகிய கடன்
11. விழா முற்பணம்

12. கட்டடக் காணி அல்லது வீட்டு ஆதனம் வாங்குவதற்கான கடன்

## அத்தியாயாம் XXVI
## உலோகூர்ச் சீமாட்டி கடனுதவு நிதியம்

1. பொது
2. விண்ணப்பங்கள்
3. நேரடிக் கடன்கள்
4. அறவிடல் கணக்கிடல்
5. இடமாற்றம் அல்லது யாக்கத்தின் பொருட்டு விடுபாடுசார் நடைமுறை
6. சேவை நிறுத்தல்
7. அறவிடற் பொறுப்பு

## அத்தியாயம் XXVII
## சலுகைப் பருவச் சீட்டுக்கள்

1. தகுதி
2. பருவச் சீட்டுக்களை ஒப்படைத்தல்,பயன்படுத்தாக் காலங்கள்
3. வேலையாளர் சீட்டுக்கள்
4. சீட்டுகளைத் தவறாகப் பயன்படுத்துதல்

## அத்தியாயம் XXVIII
## மருத்துவப் பராமரிப்பு

1. பொது
2. வீதங்கள்
3. மருத்துவ சலார் அறவிடல்

## அத்தியாயம் XXIX
## செலவு மீளளிப்புகள்

1. சிவில் வழக்கு நடவடிக்கைகளின் செலவினத்தைப் பொறுத்தற்கான முற்பணம்
2. சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் செலவு மீளளிப்பு
3. அந்நிய நாட்டு அதிதிகளின் உபசரணைசார் செலவு மீளளிப்பு

## அத்தியாயம் XXX
## நட்டஈடு

1. இழப்பு அல்லது சொத்துச் சேதப்பொருட்டான நட்டஈடு
2. ஆளுக்கு ஊறு ஏற்படின் நட்டஈடு

## அத்தியாயம் XXXI
கோவையில் சேர்க்கப்படவில்லை

## அத்தியாயம் XXXII
## பொது நடத்தையும் ஒழுகலாறும்

1. பொது நடத்தை
2. கொடைகளும் ஒப்பப் பணங்களும்
3. பணமுட்டு

4. அரசாங்க நிதிகளைச் சொந்த நோக்கங்களுக்குப் பயன்படுத்துதல்
5. புதினத் தாள்களுக்கு அல்லது, பொதுமக்களுக்கு அரச கரும தகவல் வழங்கல்
6. புத்தகங்கள், கட்டுரைகள், ஒலிபரப்பு பேச்சுக்கள் முதலியனவற்றின் வெளியீடு

## அத்தியாயம் XXXIII
## காணி கொள்ளல், முதலீடு செய்தல், ஈடுவைத்தல்

1. பொது
2. சொத்துக்களின் பிரகடனம்
3. காணி கொள்ளல்
4. முதலீடு செய்தல், பங்குகள் பிறபாக்கியதைகள்

## அத்தியாயம் XXXIV

(கோவையில் சேர்க்கப்படவில்லை)

## அத்தியாயம் XXXV
## அவை நடத்துகை கருத்து வெளியீட்டு உரிமைகளைப் பிரயோகித்தல்

1. அவைகளின் உறுப்புரிமை
2. அவைகள், அரசாங்கத்திடம் முறைப்பாடு செய்தல்
3. கருத்துத் தெரிவித்தலும் அரசாங்கக் கொள்கை அல்லது நிருவாக நடவடிக்கைகளைக் கண்டித்தலும்

## அத்தியாயம் XXXVI
## அரசியல் உரிமைகளைப் பிரயோகித்தல்

1. தம் அரசியல் உரிமைகளைப் பிரயோகிக்க உரித்துப் பெறாத உதியோகத்தர் மீது விலக்கு
2. அரசியல் உரிமைகளைப் பிரயோகிக்க உரித்துடைய உத்தியோகத்தார்கள் அவற்றைப் பிரயோகித்தல்.
3. அரசியல் உரிமைகளைப் பிரயோகிக்க உரித்துடைய உத்தியோகத்தார்களுக்கு இடமாற்றம் சார் சலுகைகள்

## அத்தியாயம் XXXVII

(கோவையில் சேர்க்கப்படவில்லை)

## அத்தியாயம் XXXVIII
## பெறுப்பு வரிசை அணியும் தொடர்பிணைப்பு வழிகளும்

1. மகாதேசாதிபதி
2. அமைச்சரவை
3. சட்டத்துறை அதிபதி
4. நிரந்தரச் செயலாளர்
5. திணைக்களத் தலைவர்
6. அரசாங்க அதிபர்
7. மாவட்ட இனப்புக் குழு
8. பகுதி இணைப்புக் குழு

## அத்தியாயம் XXXIX
## நிருவாக நடைமுறைகளும் செயல்முறைகளும்

1. பொது
2. உத்தியோகபூர்வச் சுற்றுச் சாரிகைகள்
3. உத்தியோக பூர்வ கடிதத் தொடர்பு
4. உத்தியோக பூர்வக் கடிதத் தொடர்புகளினதும் உத்தியோக பூர்வ ஆவனங்களினதும் படி எடுத்தல் அல்லது வழங்கல்
5. அரசாங்க உத்தியோகத்தரது முறைப்பாடுகள்.
6. பொது மக்களிடம் இருந்து அல்லது தனிப்பட்ட முறையில் ஓர் அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள்
7. அறிக்கைகள்
8. நாட்குறிப்பேடுகளும் மீளாய்வுகளும்
9. உத்தியோக பூர்வமான ஆவனங்களின் கட்டுக்காப்பும் பாதுகாப்பும்,அழிப்பும்
10. உத்தியோகத்தரினதும்,நெருங்கிய இனத்தவரினதும் முகவரி
11. விழாக் கொண்டாட்டங்கள்
12. பல்லினம்

## அத்தியாயம் XL
## மதியுரைக் குழுக்கள்

1. எங்கே மதியுரைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது
2. அமைப்பு அளவு உத்தியோகக் காலம்
3. வாக்களிப்பதற்கும் தேர்தலில் நிற்பதற்குமான தகுதி
4. தேர்தல்கள்
5. கூட்டங்கள்
6. பதவி துறத்தலும்,வெற்றிடங்களை நிரப்புதலும்
7. தத்துவங்களும் கடமைகளும்
8. முகாமைக் கடமைகள்

## அத்தியாயம் XLVI
## வரிமதிப்பாளர், யூரிமார், சாட்சிகள், உத்தியோக முறையற்ற நீதவான்கள், விசாரனையாளர் என்போருக்கும் பலவினச் சேவைகளுக்குமான கொடுப்பனவுகள்

1. வரிமதிப்பாளர், யூரிமார், சாட்சிகள் ஆகியோர்க்குக் கொடுப்பனவுகள்
2. உத்தியோக முறையற்ற நீதவான்களுக்குக் கொடுப்பனவுகள்
3. விசாரணையாளர்களுக்கு கொடுப்பனவு
4. பலவினச் சேவைகளுக்குரிய கொடுப்பனவுகள்

தாபன விதிக் கோவையின் 25ம் அத்தியாயத்திலே அரசாங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு உரிய வேதனைக் கடன்பற்றி கூறப்பட்டுள்ளது அதாவது,

## அத்தியாயம் XXV

1. பொது
2. கடன் வழங்கத் தகு நோக்கங்கள்
3. கடன் வழங்கத் தகு பொது நிபந்தனைகள்
4. கடன் வழக்கிலுள்ள காலத்தில் இளைப்பாறும் அல்லது இறக்கும் அல்லது சேவை முடிவு பெறும் உத்தியோகத்தர்களும் யாக்கச் சேவையின் பொருட்டு விடுபாடு பெற்ற உத்தியோகத்தர்களும்
5. கடன் அனுமதிக்கும் அதிகாரி
6. கடன் கொடுப்பனவுக்கு வகை செய்யும் உத்தியோகத்தரின் பொறுப்பு
7. மோட்டார் வண்டி வாங்குவதற்கு கடன்
8. மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு கடன்கள்
9. மிதிவண்டி வாங்குவதற்கு கடன்
10. இடுக் கண் முதலாகிய கடனகள்
11. விபா முற் பணம்
12. கட்டடக் காணி அல்லது வீட்டு ஆதனம் வாங்குவதற்கான கடன்

ஆகியன பற்றி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக அரசாங்க ஊழியர்களைப் பொறுத்த வரை ஏதோ ஒரு தேவை கருதி வேதனக் கடனை பெற முனைவார்கள் அப்பொழுது வேதனக் கடன் பற்றிய தெளிவான விளக்கம் தெரிந்திருப்பது சாலச் சிறந்தது

மேற் கூறப்பட்ட 6 வகையான கடன்களுள் ஓரளவு கூடிய தொகை உள்ள கடனாகக் காணப்படுவது கட்டடக்காணி, அல்லது வீட்டு ஆதனம் வாங்குவதற்கான கடன் ஆகும்.

5 வருடத்திற்கு குறையாத ஓய்வூதியம் பெறுநிலைச் சேவையுடைய,நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட நிரந்தர ஓய்வூதியம் பெறுநிலை உத்தியோகத்தர்கள்,அவரோ, அவரின் வாழ்க்கைத் துணைவியோ அவரால் தங்கி இருப்பவரோ, வீட்டு ஆதனமேனும் கட்டக்காணியேனும் இல்லாதவராக விளங்குவதுடன் தேசிய வீடமைப்பு ஆணையாளரது வாடகை வழிக் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் வீடுபெற்றும் இல்லாதவராயின் கடனுக்கு விண்ணப்பிக்கலாம் கொள்வனவு செய்யப்படும் காணி.

1. பிறரொருவரின் சீவிய உருத்துடையதாய் இருத்தல்
2. சொரியல் காணியாக இருத்தல்
3. கட்டடத்திற்கு பொருத்தமில்லாத தோட்டக் காணியாக நெல் வயலாக இருத்தல்..
4. குறிப்பிட்ட காணி அவரின் மனைவிபெயரிலே அல்லது அவரின் தங்கி இருப்போரின் பெயரிலே இருத்தல்.

மேற்கூறப்பட்ட நிலையில் இருக்கும் காணிகளைக் கொள்வனவு செய்ய முடியாது.

கணவன், மனைவி இருவரும் அரசாங்க ஊழியர்களாயின் இருவரில் ஒருவர் மட்டுமே வீட்டுக் கடன் பெற முடியும். கடன் தொகை இரண்டு வருட வேதனம் ஆகும். விண்ணப்பப்படிவம் உத்தியோகத்தரால் பொதுப்படிவம் 262 பூர்த்தி செய்து திணைக்களத் தலைவரின் அனுமதியுடன் அனுமதியளிக்கும் அதிகாரிக்கு அனுப்பி வைக்கலாம்.

ஒரு வருட வேதன முற்பணத்திற்கு 5 வருடத்திற்கு குறையாத மேல் தொடர்சேவை,இரண்டு வருட வேதன முற்பணத்திற்கு 10 வருடத்திற்கு குறையாத மேல் தொடர்சேவை இருத்தல் அவசியம்.

விண்ணப்பிப்பவர் பின்வரும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

1. உரித்து அறிக்கை
2. பெறுமதி அறிக்கை
3. அளவைப் படம்
4. காணி விவரணம்
5. தத்துவ அதிகாரம்
6. பிணை (கடன் தொகை ஒரு வருட வேதனத்திற்கு மேம்படாதவிடத்து பிணைகாரர் 5 வருடங்களுக்கு குறையாத ஓய்வூதியம் பெறுநிலைச் சேவையுடைய அரசாங்க உத்தியோகச் சேவை உடையவராய் இருத்தல் வேண்டும்.
   கடன் தொகை ஒரு வருட வேதனத்திற்கு மேற்படுமிடத்து பிணைகாரர் 10 வருட ஓய்வூதியம் பெறுநிலைச் சேவையுடையவராய் இருத்தல் வேண்டும்)
7. சாதனங்களின் செம்மை
8. ஆதன உரிமை மாற்றம்
9. அரசாங்க அதிபர் வலுவளித்தல்
10. காப்புறுதி

மேற்கூறப்பட்ட ஆவண விடயங்களை முழுமையாக செம்மையாக ஒப்படைப்பதன் மூலம் கட்டடக் காணி அல்லது வீட்டு ஆதனம் வாங்குவதற்கான கடனை இலகுவாகப் பெறமுடியும்.

பொதுவாக அரசாங்கத்தால் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்களின் வட்டிவீதம் மிகக் குறைவாகவே காணப்படுவதால் அரச ஊழியர் அனைவரும் இக் கடனை பெற முயற்சி செய்வார்கள். எனவே தேவையின் முக்கியத்துவத்தைப் பொறுத்து நாம் இக் கடனைப் பெற முயல்வோம்.

உசாத்துனை நூல்
இலங்கை அரசாங்க தாபன விதிக் கோவை



# ஆளுமை (Personality)

திருமதி.ஆனந்தி சிவகுமாரன்
Bsc.Dip.in.Ed.M.E.D
(பகுதித்தலைவர்)
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

இன்றைய உலகில் ஆளுமை என்பது நிரந்தரமான இடத்தைப் பெற்றுள்ள ஒரு விடயமாகும். ஆளுமை என்றால் என்ன? என நோக்கின் ஆளுமையைப் பலர் பலவிதமாக வரைவிலக்கணப்படுத்துவர். வாழ்க்கையில் ஒருவர் பெறும் வெற்றி தோல்விகள், நடத்தைக் கோலங்கள், சீராக்கங்கள், உடலியக்கத்திறன்கள், அடைவுகள், நுண்மதித் திறன்கள் என்பன ஆளுமையாகக் கொள்ளப்படும். ஒவ்வொரு மனிதனிடமும் தனித்துவமான சில பண்புகள் காணப்படும். இத் தனியாள் வேறுபாடுகள் அவர்களது ஆளுமைத்திறனை விருத்தி செய்கின்றன. ஆளுமைப் பண்புக் கூறுகள் ஒருவனிடத்தே நிரந்தரமாகவோ அன்றி தற்காலிகமாகவோ காணப்படலாம். ஒருவனின் ஆளுமைப் பண்பில் இருவகையான காரணிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

1. பரம்பரைக் காரணி
2. உடலியற் காரணி

ஒரு பிள்ளையின் பரம்பரைச் சூழலானது அதனது ஆளுமையில் கணிசமானளவு செல்வாக்கு செலுத்துவதாக உளவியலாளர்கள் நம்புகின்றனர். ஒரு பிள்ளையின் விசேட ஆற்றல்கள்,நுண்மதி எந்தளவிற்கு ஆளுமையை கொண்டு செலுத்துகின்றதோ அதேயளவு பரம்பரை காரணிகளும் பிள்ளையின் ஆளுமை பற்றிய செல்வாக்கு செலுத்துகின்றது. என்பது ஆய்வாளர்களின் கருத்து.

இவ்வாறே உடலியற் காரணிகளும் ஒரு பிள்ளையின் ஆளுமை வளர்ச்சியில் தங்கியுள்ளது. ஒரு பிள்ளையின் உடலியற் குறைகளில் அல்லது நோய்களின் தாக்கங்கள் அவனது நேரான ஆளுமைக்கு தடையாக அமைகின்றது. எனவே பரம்பரைக் காரணிகளாலோ உடலியற் காரணிகளாலோ தனியாட்களுக்கிடையே ஒரே விதமான ஊக்கல்களுக்கு பல்வேறு விதமான துலங்கல்களைக் காண முடியும். இவ் ஆளுமைப் பண்புக் கூறுகள் ஒருவன் வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பான் என்பதைத் தீர்மானிக்கும் காரணிகளாக இருக்கின்றன.

ஒருவன் திடகாத்திரமான உடற்கட்டமைப்பையோ, உயரத்தையோ, கவர்சிசிகரமான தோற்றத்தையோ கொண்டிருந்தால் மட்டும் அவன் சிறந்த ஆளுமை உடையவனாகத் திகழ முடியாது. அவனது நடை உடை பாவனை என்பனவே அவனை ஆளுமையுடையவனாகக் காண்பிக்கும்.

சிறந்த ஆளுமையுடைய ஒருவனின் நிறைக்கூறின் முக்கியமானதாகக் கருதப்படுவது அவனது தன்னம்பிக்கை. தன்னம்பிக்கையுடைய ஒருவன் தன்னைச் சார்ந்தோரையும் சூழலையும் வசியப்படுத்திக் கொள்கின்றான். இதன் மூலம் அவனது ஆளுமைப் பண்பு விருத்தியடைகிறது.

ஒருவனிடத்தே பல்வேறு விதமான ஆளுமை கூறுகள் காணப்படினும் அதி உன்னதமான பண்புக் கூறாக ஒன்றே ஒன்றுதான் இருக்கும். இதனை அடியொற்றிதான் அவனது ஆளுமை உருவாகும்.

ஒருவனது வெளிப்பாடுகளும் அவனது ஆளுமையை வெளிக்காட்டடும் கண்ணாடியாக இருக்கிறது. என்றும்கூறலாம். ஆற்றுகைகள், நடிபங்குகள், நடத்தைகள், பேச்சு, எழுத்து என்பன வாயிலாகவும் ஆளுமையை அறியாமல் எனக் கூறுவோரும் உள்ளனர்.குழந்தை குடும்பத்தில் வளர்க்கப்படும் முறை சகபாடிகளுடனான தொடர்பு, ஒருவனுக்கு கிடைக்கின்ற கல்வியறிவு, ஒருவன் பெற்றுக் கொள்ளும் சமூகமயமாக்கல் அனுபவங்கள் ஒருவனுக்குக் கிடைக்கின்ற தொழில், சமூகத்தில் அவன் வகிக்கும் நிரலமைப்பு, அந்தஸ்து இவற்றின் மூலமும் ஆளுமைக் கோலம் ஏற்படுகிறது எனலாம்.

அதாவது ஆளுமை என்பது ஒரு சமூகவிளைபொருளாகவோ அன்றி கல்வி அறிவாலேயோ பரம்பரைக் காரணிகளாலேயோ தீர்மானிக்கப்படலாம். எவ்வாறாயினும் பாடசாலையை நோக்குமிடத்து ஆளுமை என்பது ஆசிரியருக்கும், மாணவருக்கும் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது. ஆளுமையை வளர்க்கும் ஒரு உன்னத சக்தியாக பாடசாலை விளங்குகிறது. மாணவரைக் கட்டுப்படுத்தி கற்றலைத் திறம்படச் செய்வது கற்பிக்கும் ஆசிரியரின் ஆளுமையில் தங்கியுள்ளது. கண்டிப்பு என்றால் அதட்டுவதாலேயோ. அடிப்பதாலேயோ ஏற்படுத்தபடவேண்டிய அவசியமில்லை. பொருள் பொதிந்த ஆசிரியரின் பார்வையில் மாணவர் அதன் உட்கருத்தைப் புரிந்து கொள்ளல் வேண்டும். இது ஆசிரியரின் ஆளுமை விருத்தியில் தங்கியுள்ளது.

மாணவரின் ஆளுமை என்பது சக மமாணவனைத் தன்வயப்படுத்தி வகுப்பறைக் கட்டுப்பாட்டைப் பேணும் தலைமைத்துவம் உடையது. நேரான ஆளுமையை வளர்த்தெடுத்தலில் ஒரு முக்கிய சாதனமாக பாடசாலை விளங்குகின்றது. மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணரும் ஒரு களமே பாடசாலை. இதன்மூலம் ஆளுமை விருத்தி ஏற்படுகிறது. கல்விகற்று மேதையாகிவிட்ட போதிலும் ஆளுமைப் பண்புக் கூறு ஒருவரிடத்தே விருத்தியடையவில்லை எனின் அவன் வாழ்க்கையில் தோல்வி கண்டவனாகி விடுகின்றான். எனவே சிறந்த ஆளுமையுடன் கூடிய கல்வியே நல்லுலகிற்கு பயன்படும் என்பதில் ஐயம் இல்லை.

# சமகால முறையியலில் புலத்தோற்றப்பாடு



## (PERCEPTION OF PRESENT METHODOLOGY)

ANANANTHARASA PRABANANTHAN
B.A(HONS),M.A,DIP.IN.EDU
J/U.A.M. College

கி.பி 17 ம் நூற்றாண்டளவில் அறிவு பற்றிய கருத்து நிலை முகிழ்க்கலாயிற்று. அறிவொன்றை உருவாக்கிப் பெற அனுபவத்தைப் விடப் பகுத்தறிவு முதன்னிலையானதென ஒரு சாராரும் பகுத்தறிவை விட அனுபவமே ஆதாரம் எனவும்அதுவே முதன்னிலையானதென பிறிதொரு சாராரும் வலியுறுத்தி வந்த சந்தர்ப்பத்தில் தருக்க புலனறிவாதம் என்ற புதியதோர் சிந்தனை போக்கு 19 ம் நூற்றாண்டில் தோற்றம் பெறலாயிற்று. காணப், மொறிஸ் சிலிக், ஏ.ஜே அயர் முதலானோர் இக் கருத்து நிலைகளில் முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள்.

அறிவை உருவாக்கி பெற நியாயித்தல் முறை எவ்வளவு தூரம் இன்றியமையாததோ அவ்வளவு தூரம் அனுபவ முறைகளும் இன்றியமையாத ஒன்றாகும் என தருக்க புலனறிவாதம் கருத்துரைக்கின்றது. இத்தகைய அனுபவ முறைகளுடன் தொடர்புபட்டதான ஒரு அறிவுத் தொகுதியாக புலனறிவும், இப் புலனறிவுக்கு ஆதாரமாக புலக்காட்சியும் அமைகின்றது. இப் புலக்காட்சியே புலத்தோற்றப்பாடு என்பதன் வெளிப்பாடாகும். பாரம்பரிய முறையாகிலும் சரி சமகால முறையியலாகிலும் சரி புலத்தோற்றப்பாடு என்ற எண்ணக்கரு வேறுபட்ட நோக்கு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

புலத்தோற்றப்பாடு என்பது ஆழமான ஒரு பொருள் நிலையில் அவதான மொழி (ObservationLanguage) அல்லது அவதான வாக்கியம் (Observation Sentences) என நோக்கப்படுகின்றது. எந்தவொரு புலத்தோற்றப்பாடும் ஒரு கொள்கை மீதோ அல்லது பல கொள்கைகள் மீதோ தொழிற்பட்டுக் கொண்டு இருக்கும். இவ்வாறான புலத் தோற்றப்பாடாகிய அவதான மொழி இரு நிலைகளில் நோக்கப்படலாம்.

1. அவதான மொழியின் நிலையான தன்மை
2. அவதான மொழியின் கோட்பாட்டு உள்ளடக்கம்

20 ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட முறையியல் கருத்துக்களில் தொகுத்தறிவாதம், உய்த்தறி வாய்ப்பு பார்த்தல் வாதம், உய்த்தறி பொய்ப்பித்தல் வாதம் முதலானவை

முதன்மை பெறலாயிற்று. இத்தகைய முறையியல் சார் கருத்துக்களில் இழையோடிக் கொண்டிருக்கும் ஒரு அம்சமே "அவதான மொழியின் நிலையான தன்மை" என்பதாகும். நிலையான அவதான வாக்கியங்களை ஏற்றுக் கொள்வது என்பது உய்த்தறிவாதிகளை விட தொகுத்தறிவாதிகளிடத்தே அதிகளவு நிகழ்கின்றது. தொகுத்தறி அவதானிக்கப்பட்ட அவதானங்களின் மூலம் நிகழுகின்ற பொதுமையாக்கத்தினை அடிப்படையாகக் கொண்டது. அந்த அவதானங்கள் நிலையானதாக அமைவதைப் போலவே சுயாதீனமானது என்பதும் அவர்களது ஏற்புடைமையாகும்.

மேலும் அவதான மொழியின் நிலையான தன்மை அனுபவபவாதிகளாலும் புலனறிவாதிகளாலும் மேலும் வலியுறுத்தப்பட்டதும் ஏற்றக்கொள்ளப்பட்டதுமான ஒரு கருத்து நிலையாகும்."பல்வேறு கோட்பாடுகளுக்கும் பொதுவாக அமைகின்ற புலத் தோற்றப்பாடே" அவதான மொழியின் நிலையான தன்மை என்பதன் சரியான கருத்து நிலையாகும். அவதான மொழிக்கூடாக முன்னோடிக் கொள்ளைகளை ஒன்று சேர்க்கின்ற ஆற்றல் இத்தகைய அவதான மொழியின் நிலையான தன்மைக்கு உண்டு.

அனுபவ வாதிகளினதும் புலனறிவாதிகளினதும் கருத்தமைவாக அவதான மொழியின் நிலையான தன்மை என்பது கீழ்வரும் விடயங்களால் முதன்மை பெறலாயிற்று.

- Ø கோட்பாட்டு முறை ஒழுங்கு ஒன்றில் ஆரம்பக் கொள்கை பின்னைய கொள்கைகளுக்கு ஊகங்களாகும்.
- Ø கொள்கை ஒன்றின் எண்ணக்கருக்கள் அவதான மொழியினால் அர்த்தத்தைப் பெற்றுக் கொள்வதால் அக் கொள்கையின் வழியே பல நேர்வுகளை விளக்க முடிகின்றது.
- Ø இரண்டு கொள்கைகளுக்கிடையே தீர்ப்புப் பரிசோதனை அர்த்தமுடையதாக இருக்கின்ற நிலைப்பாடு.


இருபதாம் நூற்றாண்டில் பாரம்பரிய முறையியல் சார்ந்த கருத்துக்களை தகர்த்தெறிந்து புதிய முறையியல் சார்ந்த கருத்துக்களில் மலர்ச்சி ஏற்படலாயிற்று. இத்தகைய விளக்கங்களோடு தொடர்புடைய ஒரு எண்ணக்கருவாகவே அவதான மொழியின் கோட்பாட்டு உள்ளடக்கம் என்பது முதன்மை பெறுகின்றது. (Theory Ladenness of Observation Language) இந்த வகையில் தோமஸ்கூன் என்பாரின் சார்பு வாதக் கருத்து நிலை (அர்த்த வேறுபாட்டுக் கொள்கை) முதன்மைபெற்றுக் காணப்படுகின்றது. தொகுத்தறிவாதம் வாய்ப்புப் பார்த்தல் வாதம், பொய்ப்பித்தல் வாதம் முதலானவற்றில் இழையோடிக்கொண்டிருந்த முறையியல் சார்ந்த கருத்துக்கள் உடைக்கப்பட்டு சார்பு வாதத்தின் மூலம் புதிய எண்ணக் கருக்கள் வெளிப்படுத்தப்படலாயிற்று இதில்

முதன்மை பெற்ற ஒரு விடயமாக கோட்பாட்டு உள்ளடக்கம் சிறப்புத் தன்மை பெறுகின்றது. புலக்காட்சி வெறுமனே தொடர்பாடலை மட்டும் கருத்திற் கொள்ளாமல் புலனுறுப்புக்கள், அவை சார்ந்த பொருட்களுடன் தொடர்புபடுவதாக மாத்திரமல்லாது "முன் எண்ணக்கருக்களினால் அல்லது கோட்பாடுகளின் வழியே உருவாக்கப்படுபவை கோட்பாட்டு உள்ளடக்கம் என நாம் விவரணப்படுத்தலாம்." அவதான வாக்கியங்கள் வெளிப்படுத்தும் மொழி வெவ்வேறு நம்பிக்கைகள், கருத்துக்கள் என்னபவற்றினால் உருவாக்கப்பட்டவை என்ற நிலைப்பாட்டால் உருப்பெற்றதே கோட்பாட்டு உள்ளடக்கமாகும்.மரபு ரீதியான புவிமைய உலகில் வாழ்ந்தவர்களுக்கு வான் பொருட்கள் பூமியினைச் சுற்றி வட்ட வடிவில் செல்கின்றன.

என்பதனை விட வேறான ஒன்றைப் பார்ப்பதற்கோ அல்லது சிந்திப்பதற்கோ முடியாதிருக்கும் இவர்களது புலக்காட்சி பின்னர் கொப்பனிகசின் புலக் காட்சியிலிருந்து வேறுபட்ட வடிவில் அர்த்தப்படுத்துவது வெவ்வேறுபட்ட முன் எண்ணக் கருக்களின் நிலைப்பாடினாலேயே ஆகும். அவ்வாறு மரபு ரீதியான பௌதீகவியலில் திணிவு காப்பு விதி உண்டு. இத்தகைய பாரம்பரிய கோட்பாடு $E = mc^2$ என்ற சமன்பாட்டில் ஐன்ஸ்டைனின் மூலம் வேறு ஒரு அர்த்தப்பாட்டில் மாற்றமுறுவதைக் குறிப்பிடலாம். இவ்வாறு கட்டளை படிமத்தின் மூலமாக முழுமை நிலையாக புலக்காட்சியுள்ள உலக நோக்கு மாற்றமுறும் நிலைப்பாட்டை இங்கு சுட்டிக் காட்ட முடியும். இதனேயே தோமஸ்கூன் என்பவர் ஒரு உலகில் மறைந்துள்ள பொருள் புலக் காட்சிக்கூடாக இன்னொரு பொருளாக அர்த்தப்படுத்தப்படலாம் என விவரணம் கூறுகின்றார்.

முடிவாக அவதான மொழியினது நிலையான தன்மையினையும் கோட்பாட்டு உள்ளடக்கத்தினையும் தொடர்புபடுத்தி நோக்குவோமே ஆயின் இவ்விரு எண்ணக்கருக்களுக்குமிடையே எதிர்நிலைத் தொடர்பு ஒன்றினைச் சுட்டிக் காட்ட முடியும் அதாவது" அவதான வாக்கியங்கள் கோட்பாட்டு உள்ளடக்கம் கொண்டவையாக அமையுமாயின் அவை நிலையானவை அல்ல" என்ற கருத்து நிலையினை கோடிட்டுக் காட்ட முடியும். இத்தகைய விளக்கங்கள் காள்பொப்பரின் மாணவனாகிய போல்பைராபண்ட் முதலான முறையியல் வாதிகளினால் உயர் நிலைக் கோட்பாடுகளாக முன்னெடுத்துச் செல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும்.

# மாணவரின் ஆளுமை வளர்ச்சியில் ஆசிரியரின் வகிபங்கு



திரு.செ.ஜெயமோகன்
ஆசிரியர்,
யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி,
வல்வெட்டித்துறை.

நாளைய உலகின் வச்சிரத்தூண்களாக மிளிரப் போகிறவர்கள் இன்றைய சிறுவர்களே ஆவார். அவர்களே எதிர்கால உலகை சிருஷ்டிக்க போகிறவர்கள். எமது சிறுவர்களை அவர்களுக்கே உரித்தான தனித்துவமான பண்புகளுடன் அவர்களின் ஆளுமை விருத்தியை மேம்பாடடையச் செய்வது ஆசிரியர்களினதும் பெற்றோர்களின் மிக முக்கிய பொறுப்பாகும். உண்மையில் பிள்ளைப்பருவம் என்பது மானிட வாழ்வின் மிக முக்கிய கட்டமாகும். இப் பருவத்தில் ஒரு பிள்ளையினுடைய ஆளுமை மிகச் சிறப்பாக கட்டமைக்கப்பட வேண்டும். இப் பிள்ளைப்பருவத்தில் பிள்ளை தான் அனுபவிக்க உரித்தான அத்தனை உரிமைகளையும் அனுபவிப்பதற்குரிய பூரண சுதந்திரத்தை பெற்றுள்ளது.

ஒரு பிரதேசத்தின் உண்மையான அபிவிருத்தி என்பது குறித்த சமூகம் அறிவு,பண்பாட்டியில் துறைகளில் பெரும் வளர்ச்சியையே குறித்து நிற்கிறது எனலாம். அதாவது ஒரு சமூகம் தன்னை கல்வித்துறையில் எவ்வளவு தூரம் வளப்படுத்திக் கொள்கின்றதோ அந்தளவு தூரம் அபிவிருத்தியைப் பெற்றுக் கொள்ள முடியும். அப்பொழுதே அச்சமூகத்தின் உண்மையான அபிவிருத்தி சாத்தியமாகும். எனவே எந்தவொரு சமூகமும் தனது அபிவிருத்தியின் அடிநாதமாக விளங்கும் கல்வியின் மீது தனது கூடுதலான கரிசனையைக் காட்ட வேண்டியுள்ளது. எனவே ஒரு சமூகம் அறிவு ரீதியாக தன்னை வளப்படுத்திக் கொள்ள வேண்டிய பாரிய தேவையுள்ளது. ஒருநாடு பல்வேறு வளங்களைப் பெற்றிருந்தாலும் அது கொண்டுள்ள மனித வளமே மிகவுயர்ந்த வளமாக கருதப்படுகிறது. இவ்வரிய மனித வளத்தை செயற்திறன்மிக்கதாக மாற்றியமைக்க வேண்டிய பாரிய பொறுப்பு உள்ளது.

அந்த வகையில் ஒரு நாட்டினை எதிர் காலத்தில் வழி நடத்த போகிறவர்கள் இன்றைய மாணவர்களேயாகும். எனவே இவ் மாணவ சமுதாயத்தை அதன் ஆரம்ப கட்டத்திலிருந்தே மிகச் சிறந்த ஆளுமை மிக்க பிரஜைகளாக வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரிய சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது. எனவே இச் சவாலை எதிர் கொள்வதற்கு ஏற்ற வகையில் பாடசாலைகள் பல்வேறு பரிமாணங்களிலும் அபிவருத்தி பெற வேண்டிய நிலையில் உள்ளன. ஆசிரிய சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள இப்பாரிய பொறுப்பை எதிர் கொள்ளத் தக்க வகையில் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கற்றல்,

கற்பித்தல் செயற்பாடுகளில் பண்புத்தரத்தை மேம்படுத்துவதும் மிக முக்கியமானதாகும். உண்மையில் ஒரு மாணவனின் கல்வி வளர்ச்சியை தனியே ஆசிரியர்களால் மட்டும் மேம்படையச் செய்வது சாத்தியமற்றது. உண்மையில் இது மாணவர், ஆசிரியர், பாடசாலை, சமூகம் என்ற அனைத்துத் தரப்பினதும் கூட்டுச் செயற்பாடாகும்.

அந்த வகையில் உளவியல்,சமூகவியல் ரீதியாக நாம் நோக்கும் போது ஒரு மாணவனின் ஆளுமை வளர்ச்சியில் உள,சமூகக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன எனலாம். தனியே மாணவனுக்காக வகை கூறும் முழுப் பொறுப்பையும் ஆசிரியர்கள் மீது சுமத்தி விட முடியாது. பரம்பரை ரீதியாக ஒருவன் கொண்டுள்ள நுண்ணறிவு,திறன்கள் போன்ற உளக் காரணிகளாலும் ஒருவன் உருவாக்கப்படுகின்றான். இருப்பினும் ஆசிரியரும் மாணவன் சார் பாடசாலைச் சூழலும் ஒரு மாணவனின் ஆளுமையில் கூடுதல் பங்களிப்பைச் செலுத்த முடியும் ஒரு பிள்ளைக்கு இரண்டாம் பெற்றோர் என சிறப்பிக்கப்படும் ஆசிரியர்களுடன் தனது குடும்பத்திற்கு அடுத்ததாக,மிக நீண்ட காலத்திற்கு ஊடாட வேண்டிய ஒரு நிலை காணப்படுகிறது. எனவே எந்தவொரு ஆசிரியரும் மாணவர்களது விருப்பு வெறுப்பு திறன்களை மிகச் சரியாக இனங் காணும் திறன்களை கொண்டிருத்தல் வேண்டும் என கல்வியுலகு எதிபார்க்கின்றது.

பல்வேறுபட்ட சமூகச் சூழல்களிலிருந்தும் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் வேறுபட்ட திறன்களை, அடைவு மட்டங்களை கொண்டிருக்கக்கூடும். எனவே அவர்களின் ஆற்றல், திறமைகள் என்பவற்றிற்கு ஏற்ப தனியாள் வேறுபாடுகளைக் கருதி அவர்களுக்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகளையும், நுட்பங்களையும் மேற்கொள்வதும் அதன் மூலம் அவர்களது சீரான ஆளுமை வளர்ச்சி பெற உதவுவதும் ஆசிரியர்களின் தலையாய கடமையாகும்.

ஆசிரியரது நடை, உடை, பேச்சு, செயற்படும் விதம் போன்றவற்றை ஒரு மாணவன் நன்கு அவதானித்து ஆசிரியரை தனக்கு ஒரு முன் மாதிரியாகக் கொண்டு தனது நடத்தைக் கோலங்களைத் தீர்மானிக்கின்றான். எனவே ஒரு ஆசிரியரானவன் பிள்ளையின் ஆளுமை வளர்சியில் பங்காற்ற வேண்டிய நிலையில் உள்ளதால் சிறந்த ஆளுமைப் பண்புகளை பிள்ளைகளின் முன் வெளிப்படுத்த வேண்டியவராகின்றார்.

உண்மையில் கற்பித்தல் என்பது மாணவர்கள் தமது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வளர்த்து நாட்டிற்கு ஒரு நல்ல குடிமகனாக வாழ உதவும் பணியேயாகும் ஒவ்வொரு பாட ஆசிரியரும் மேற்படி பண்புக் கோலங்களை மாணவர்களிடம் வளர்த்தெடுக்க தாம் கற்பிக்கும் பாடத்தை ஒரு கருவியாகக் கொள்ள வேண்டும். இதற்கு குறித்த ஆசிரியர் தனது பாடத்தில் சிறந்த தேர்ச்சியை கொண்டிருக்க வேண்டியவராகின்றார். எனவே ஓர் ஆசிரியர் கல்வி தொடர்பான உளவியல் கோட்பாடுகளையும் கல்வி உளவியல் பற்றிய புலமைத்துவ ஆற்றலையும் கொண்டிருக்க வேண்டும். இந்த வகையில் கற்பித்தல் செயன் முறையில் ஈடுபடும் ஒரு ஆசிரியரின்

மிக முக்கிய பொறுப்பு முதலில் அம் மாணவர்களை இனங் காண்பதாகும். இதன் மூலம் மாணவர்களின் ஆளுமையை பாதிக்கும் உள சமூகக் காரணிகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்ய முடியும்.

பொதுவாக மாணவர்களின் ஆளுமையை தீர்மானிக்கும் காரணிகளாக பின்வருவனவற்றை கொள்ள முடியும்.

1. அகக் காரணிகள்:-
   மந்த புத்தி, உடலியல் குறைபாடுகள்,தாழ்வுச்சிக்கல் எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இல்லாதிருத்தல் போன்றன.
2. புறக்காரணிகள்:-
   குடும்பம்,பாடசாலை,அவன் சார் சமூகம் போன்றவை


குடும்ப அங்கத்தவர்களின் பிரிவு, வீட்டு வன்முறை, பெற்றோர் கவனிப்பின்மை, பெற்றோர் அடக்குமுறை, பெற்றோரிடமிருந்து போதிய அன்பு, ஆதரவு போன்றவற்றை பெற முடியாத நிலைமை போன்றவை ஒரு மாணவனின் ஆளுமை வளர்ச்சியில் பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லன.

பாடசாலைச் சூழலுடன் தொடர்புடையதாக அமையும் ஆசிரியர்களின் கடினமான தண்டனைகள், பாதகமான கல்விச் சூழல், பொருத்தமற்ற கவன நிலை போன்றவையும் இடம்பெயர்வு, யுத்தம், இயற்கை அனர்த்தங்கள் கலாச்சார சீரழிவு போன்றவையும் ஒரு மாணவனின் ஆளுமையை பாதிக்கும் காரணிகளாக அமையக் கூடியன.

எனவே இவை தொடர்பில் ஆராய்ந்து மாணவர்களின் சீரான ஆளுமை வளர்ச்சிக்கு பங்காற்ற வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுடையது ஆகும்.

உண்மையில் ஓர் ஆசிரியர் நிலைமாற்று வகிபாகத்தினூடாக வளவாளராகச் செயற்பட்டு மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை ஆற்ற வேண்டிய நிலையிலுள்ளார். எனவே எதிர்கால சமூகத்தை வடிவமைக்கும் பாரிய பொறுப்பை சுமந்துள்ள ஆசிரிய சமூகம் புதிய புதிய விடயங்களை இற்றைப்படுத்திக் கொள்பவர்களாகவும், தொழில் வாண்மை பெற்ற ஆசிரியர்களாகவும் தங்களை தக்க வைத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் மிக முக்கிய தேவையாகும்.

# தாய் மொழிக்கல்வியில் இலக்கியநோக்கு



சிவலிங்கம் லிங்கனதாஸ்
(B.A,P.G.Dip.in Edu,P.G.Dip.in Poli)
யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி,

ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்கல்வி முதலானபலகல்வித் துறைகளிலும், அவற்றைக் கற்பிக்கும் முறைகளிலும் புதியஉத்திகள் கையாளப்படும் இவ்வேளையில் தாய் மொழிக் கல்வியில் எல்லாநிலைகளிலும் இலக்கியநோக்கம் எவ்வாறு தலை சிறந்து விளங்குகிறது என்பதை ஆராய்வது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பொதுவாக மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயப்பாடில்லை. மக்கள் முதன்முதலில் நாடு தேசமின்றி நாடோடிகளாக வாழ்ந்து பின்னர் ஒரு நாட்டில் ஒன்று கூடி ஒரு சமுதாயமாய் வாழத்தலைப்படவே மொழி தோன்றலாயிற்று. இவ்வாறு மொழியானது ஒன்றுபட்ட மக்களின் பொது வாழ்க்கைக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. பல்வேறுபட்டகொள்கைகள், குறிக்கோள்கள், சமயங்கள், சாதிகள், தொழில்களால் வேறுபட்டமக்களும் தாம் பேசும் மொழியால் ஒன்றுபடுகின்றனர். மொழியினால்தான் ஒவ்வொருவரும் எண்ணும் எண்ணம் வெளிப்படுத்தப்படுகிறது.

சர்வதேசரீதியில் பலமொழிகள் தோன்றி வளர்ந்து மறைந்து போய்விட்டன. சில தொன்றுதொட்டு நிலவுவதோடும் பொன்றாப் புகழுடன் பழமையும் புதுமையும் ஒருங்கே கொண்டு விளங்குகின்றன. நாடுகள் தோறும் மொழிகள் வேறாயிருப்பினும் ஒருநாட்டில் பிறந்தது முதல் அந்நாட்டினர் கேட்டுவரும் மொழியும் மிகப் பழங்காலந்தொட்டு வழிவழியாகக் கேட்டும் பேசியும் படித்தும் எழுதியும் வரும் மொழியே தாய்மொழி எனப்படும். தாயின் கருவில் இருக்கும் போதே ஒருசேய் தன் தாயின் ஊனிலும் உள்ளத்திலும் உயிரிலும் ஒன்றுபட்டு அவள் வழியாக அம்மொழியுணர்ந்து கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றைக் கற்றுக்கொண்டு பிறப்பதால் அச்சேயின் மொழி தாய்மொழி என்பதில் வியப்பொன்றுமில்லை. அச்சேய் பிறந்து மொழிபயிலும் காலம் முதல் அதன் தாய் பாலூட்டிதாலாட்டிபின் சீராட்டிப் பாராட்டும் மொழியேசேய்க்கும் தாய்மொழி ஆயிற்று. இவ்வாறே சேயும் தாயாகிதன் சேய்க்கும் புகட்டும் மொழியும் அதுவே ஆகும். இச் சிறப்புக் கருதியே எம் மொழி" பால்வாய்ப் பசுந் தமிழ்"என்று போற்றப்படுகின்றது.

தமிழர்களின் தாய்மொழியாகிய தமிழ் அமிழ்தினும் இனிதென்று எல்லோராலும் போற்றப்படுவதும் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தது" என கூறப்படுவதோடு பழமையும் பெருமையும் வாய்ந்த புதுமையும் பொருந்தி போற்றுதற்குரியது. இலக்கிய விரிவிலும் இலக்கண அமைதியிலும் சிறந்து காணப்படுவதோடு" தான்வழங்கும் நாட்டின் கண்ணுள்ள பலமொழிகட்கும் தலைமையும் அவற்றிலும் மிக வேதகவுடைமையும் உள்ள உயர்மொழியும்" என்றும் "தான்வழங்கும் நாட்டில் பயிலும் ஏனைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் கொண்டதே தனிமொழி" என்றும் "திருந்திய

பண்பும் சீர்ந்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகழ் செம்மொழியாம்" என்றும் இம் மூன்றிலக்கணங்களையும் தன்னகத்தே கொண்ட தமிழ் மொழியும் உயர் தனிச் செம்மொழியாக போற்றப்படுவதோடு அது தற்காலத்திலும் பிற்காலத்திலும் வியந்து நிற்கக்கூடிய புது மொழியாகவும் காணப்படுகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நம் தாய்மொழிபாடசாலைகளிலும் கல்விக் கூடகங்களிலும் பல் நோக்கம் கொண்டு கற்பிக்கப்பட்டு வருகின்றது. ஒருவருக்கொருவர் கருத்துக்களை வாய்மொழி, எழுத்து ஆகிய இரு வழிகளிலும் வெளியிட்டு உள்வாங்கும் கருவியாகப் பயிற்றுதல், கருத்துக்கள் மட்டுமன்றி உணர்ச்சிகளையும் மனவெளிச்சிகளையும் பண்படுதல், பன்முக அறிவை மிக உயர்ந்தளவு திரட்டிக் கொள்வதற்குரிய அறிவுவாயிலாக அமைத்துக் கொள்ளல், இலக்கிய நயமுணர்ந்து இன்புறல், படைப்போரின் படைப்பாற்றலுக்கு உதவுதல், ஒருநாட்டின் வரலாறு, அரசியல், சமயம் முதலிய பன்முகச் சிறப்பை எடுத்துக்காட்டும் இலக்கிய வரலாற்றுச் சான்றாகப் பயன்படுத்தல். மொழிப்பற்றினடியாக மிளிரும் நாட்டுப்பற்று, நல்லொழுக்க நந்நெறிகளைக் காட்டி ஆற்றுப்படுத்தல் முதலியன கைவரப் பெறவேண்டும். எனினும் குறிக்கோளுடனே தமிழ் மொழிக் கற்றலுக்கு தனியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என மொழியியலாளர்களும் கல்வியியலாளர்களும் ஒருங்கே கூறுகின்றனர்.

இவ்வாறான நோக்கங்கள் பலவற்றுள்ளும் பாடசாலைகளிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் பயிலும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு இலக்கிய நோக்கம்தான் தலையாயநோக்கமாக அமைய வேண்டும் என்பதாகும். ஒருமொழியின் இலக்கியத்தில் உரைநடை நூல்கள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், நாட்டார்பாடல்கள் முதலியபல வகைகள் இருப்பினும் தனிநிலை, சொற்றொடர்நிலை, பொருள் தொடர் நிலையாகவுள்ள செய்யுட்களே இலக்கியத்தின் 'உயர் நிலையாகிய பகுதியாகும். சிறந்த புலவர் பெருமக்களுடையவாழ்க்கை நுகர்வுகளிலிருந்தும் பட்டறிவிலிருந்தும் எழும் உணர்ச்சிகளையும், உயர்கருத்துக்களையும், ஓசை இனிமை, சொல்நயம், பொருள்நயங்களோடு வெளிப்படுத்துவதுசெய்யுளேயாகும். வியன் கலைகளில் செய்யுள் முதலிடம் பெறுகிறது. சிறந்த புலவர்களின் செய்யுள்கள் சிறந்தவாழ்க்கையின் சிறந்த இயல்புகளை எடுத்துக் கூறுவனவாக உள்ளன. ஒருபுலவர் தம்மைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருட்களையும், மக்களையும்மக்களின் இயற்கையோடு ஒன்றிய வாழ்வியலையும் தம் நுண்ணறிவால் கூர்ந்துநோக்கி அவற்றைத் தம் மனக்கண்ணில் நிலைநிறுத்திக் கொள்ளுவர். பின்னர் அவற்றைச் சிறந்த செய்யுட்களின் வாயிலாகப் புதிய கற்பனையோடு தாம் கண்டவற்றை புதியதான ஒரு கவின்பெறு காட்சியாகவும் சொல்லோவியமாகவும் ஆக்குகின்றனர். இவற்றைப் படிப்போருக்கு இவை ஒரு சிறந்த மனக்காட்சியாகக் காட்சியளிப்பது கண்கூடு.

மனதில் தோன்றியெழும் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் ஏற்றசொற்களில் இசைநயம் பொருந்தக் காவியப்புலவன் பாடுகின்றான். இவற்றையே ஓவியப்புலவனும் வண்ண உயிர் ஓவியங்ளாகத் தீட்டி விடுகின்றான். இது போன்றே மற்றொரு கலைஞன் கல்லில் செதுக்கியும் செம்பில் வார்த்தும் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் சிலைகளில்

வடித்தெடுத்துக் காட்டி விடுகின்றான். பாடற்புலவனும், ஆடற்புலவனும் இவ்வாறே எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தத்தம் கலைகளிற் கவினுறக் காட்டுகின்றனர். எனினும் இவ் அழகுக் கலைகளுக்கு எல்லாம் இல்லாத சிறப்பியல்பு இலக்கியக் கலைகளுக்கு உண்டு. காலத்தாலும் இடத்தாலும் கருத்தாலும் ஓவியம்,சிற்பம், இசை முதலிய கலைகள் கட்டுப்பட்டுக்கிடக்கின்றன. ஆனால் செய்யுள் இப்படிப்பட்ட தடைகளால் கட்டுப்படாமல் தன்னுரிமை பெற்றுள்ளது. மேலும் ஏனையவைகண்டும் கேட்டும் உணரவிருக்க செய்யுளை கேள்வியின்பத்தால் மட்டும் அறிவதோடு செய்யுள்களில் உள்ளடங்கியிருக்கும் கருத்தும் அதை எடுத்துரைக்கும் சொல்லும் நகமும் தசையும் போல் ஒன்றை விட்டு ஒன்று பிரியாது உடன் போதலால் அவற்றின் பொருளை இன்புற்று இதிற் காணப்படும் பல விடயங்களை மனக்கண்ணால் காணலாம். இன்னும் புலவன் எழுதும் மொழி நடையும் அந்நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பயின்றுவரும் தாய்மொழியிலேயே அமைந்திருப்பதால் குழந்தைகள் முதல் பெரியோர்வரை பாமரர்முதல் புலவர்வரை எல்லோருக்கும் அவை எளிதில் விளங்கும். ஆனால் சிற்பம், ஓவியம், இசை, நடனம் முதலிய பிறகலைகள் இவ்வாறு சுவைத்தின்புறுவது எளிதானதல்ல.

இத்தகைய இலக்கியச்சுவையை ஊட்டுவதெற்கெனவும் வாழ்நாளில் இலக்கியத்தைச் சுவைத்து இன்புறுவதற்கும் வழிகாட்டியாக இருப்பதற்கும் தமிழ்ப்பாடநூல்கள் உறுதுணையாக அமைகின்றன. இவை மொழியறிவை வளர்ப்பதோடு இலக்கியச் சுவையுணர் ஆற்றலையும் இலக்கியப்பற்று, தாய்மொழிப்பற்று என்பவற்றை விளைவித்து இவை நிலைத்திருக்குமாறு செய்யவல்லன. இப்பாட நூற்படிப்பை ஆழ்ந்தபடிப்பு, அகன்றபடிப்பு என இருவகையாகப் பிரிக்கலாம். அகன்ற படிப்புபரந்த பொது அறிவை வளர்க்கவும் விரைவாகப் படிக்கவும் உதவுவது. இதை நூலகப்படிப்பு துணைப்பாட நூற்படிப்பு, இதழ்ப்படிப்பு, சிறுகதைகள், கட்டுரைகள் முதலியனவற்றைக் கற்றலால் வளர்த்துக் கொள்ளலாம்.

ஆழ்ந்தபடிப்பு என்னும் போது வகுப்புக்களில் செய்யுள், உரைநடை நூல்கள் என்பன பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள சிறந்த செய்யுள் உரை நடைப் பகுதிகளை பொருளும் சுவையும் உணர்ந்து மாணவர்கள் விளங்கிநுட்பமாக ஆராய்ந்து படிக்க வேண்டும். பொருள் உணர்தலோடு சொல்நயம்பொருள் நயங்களைச் சுவைத்து இன்புற வேண்டும். மேலும் அவற்றுள் பாட அமைப்பின் ஒழுங்குகட்டு கோப்புக்களுணர்தல், இலக்கணக்குறிப்புக்கள், அரியசொல்லாட்சிகளை அறிதல் போன்றமுறைகளில் படித்தின்புறல் இவ்வாழ்ந்தபடிப்பின் குறிக்கோளாகும். இது மேலெழுந்தவாரியாக நுனிப்புல் மேயாமால் ஆழ்ந்து நுட்பமாகக்கவனிக்கும் பழக்கத்தை வளர்க்கும்.

இத்தகைய இலக்கியங்கள் நம் முன்னோர்களாகிய தெய்வப்புலமைச் சான்றோர்கள் தங்கள் வாழ்நாட்களில் பட்டறிந்து கண்டுணர்ந்த உண்மைகள் என்பதோடு இவை விலைமதிக்க முடியாத செல்வங்களும் ஆகும். இவற்றைப் பெற்று மகிழ்வது அவர்கள் பின்வந்த தலைமுறையாளரின் தலையாய கடமையாகும். இவற்றைப் பயின்று இவற்றில் இலைமறை காய்களாகச் செறிந்து கிடக்கும் பொருள் நயங்களையும் அவற்றின் வெளித் தோற்றங்களாகிய சொல் நயங்களையும் கண்டுணர்துசுவைத்து இன்புறுதலே தாய்மொழிப்படிப்பின் தலைசிறந்த நோக்கமாகும்.

உலகத்தில் நாம் பல்வேறு மக்களோடு பழகும்போதும் வயிற்றுப் பிழைப்புக்காக பலதுறைகளிலும் கிடந்துழன்று ஓடியாடித் திரிந்து உழைத்து அலுத்துப்போகும் போதும் தோன்றக்கூடிய வெறுப்பை இலக்கியங்களே போக்கவல்லன. கவியின்பத்தைச் சுவைத்து மகிழ்வடைவதை விடச் சிறந்த இன்பம் வேறில்லை என்பர் ஆன்றோர். அளவுக்கு மிஞ்சினால் நோய்க்கும் இடந் தரும். செவிவழியாகச் சிந்தையால் உணரவல்ல கவிச்சுவையே தெவிடாத தெள்ளமுதாய் மேலும் மேலும் வளர்ந்து நினைக்கும் போதெல்லாம் புத்தின்பம் பயப்பதாய் நமது உள்ளத்தை என்றும் இன்பத்தில் ஆழ்த்தவல்லதாய் இருக்கின்றது.

"கவிப்பாஅமுதம் இசையின் கறியோடு

கண்ணற் குண்ணற் குளிப்பான்"

என்ற அடிகளில் கம்பர் கவிப்பாவை இன்ப அமிழ்தெனவும் இசையைக் கறியெனவும் உருவகப்படுத்தி தெரிந்தவாய்ச்சுவை உவமைவாயிலாய் தெரியாத கவிச்சுவைக்கு அழைத்துச் செல்லும் சிறப்பைக் காணலாம். செய்யுள் இன்பத்தில் ஒருவர் எவ்வளவில் ஈடுபட்டு இன்புறுதற்குரியவர் என்பதைகவியோடு ஊனும் உயிரும் ஒன்றிக்கலந்த அந்நிலையை எடுத்துரைப்பதை கீழ்வரும் பாவினால் உணரலாம்.

"வான்கலந்தமாணிக்க<br>
வாசகரின் வாசகத்தை<br>
நான்கலந்துபாடுங்கால்<br>
நற்கருப்பஞ்சாற்றினிலே<br>
தேன்கலந்துபால்கலந்து<br>
செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்<br>
ஊன்கலந்துஉயிர்கலந்து<br>
உவட்டாமல் இனிப்பதுவே"என்பதாகும்.

கவிநயத்திலேயே ஆழ்ந்து அமிழ்ந்ததிருவள்ளுவரும் "நவில் தொறு நூனயம் போலும்" என்றசிறந்த உவமையைப் பண்புடையோர்தொடர்பில் பயில் தொறும் மிகும் இன்பத்தைவிளக்க அமைத்துள்ளார். "செவியிற் சுவை"உணராதாரைஅவர்மக்கள் வரிசையில் வைக்காமல் "மாக்கள் வரிசையில் வைத்தெண்ணுவதையும், தமிழ் மக்கள் பொதுவாகவும்,தமிழ் மாணவர்கள் சிறப்பாகவும் கவனித்து இலக்கியச் சுவையில் ஈடுபடல் வேண்டும். சுருங்கக்கூறின் பசி, கவலை, முதுமை, தளர்ச்சி முதலியவற்றைப் பேக்கிமட்டில்லா மகிழ்ச்சியை ஆக்கி என்றும் இளமையை நல்க வல்லது இவ்வின்பம்.

எந்தத் தொழிலில் எவர் ஈடுபட்டிருந்தாலும் இலக்கியச் சுவையை நுகர்வதில் தடையொன்றுமில்லை. அவரவர்தம் தொழிலுக்கிடையே இலக்கியச் சுவையிலும் ஈடுபடும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

பண்டைப் புலவர்களில் பலரும் தாம் ஒரு தொழிலை வயிற்றுப் பிழைப்புக்காக மேற்கொண்டிருந்ததோடு இலக்கிய இன்பங்களையும் நுகர்ந்து, அரிய பெரிய செய்யுட்களையும் காவியங்களையும் எழுதியுள்ளனர். இக்காலத்திலும் அங்ஙனமே பலர் இதில் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிகிறது. எனவே தாய் மொழியில் இலக்கியம் ஆனது அக்காலத்தில் மட்டுமன்றி தற்காலத்திலும் சிறந்து விளங்குவதை காணமுடிகின்றது.

# ஆசிரியர்களுக்கான (லீவு) விடுமுறைகள்



திரு.கி.பாக்கியநாதன்
(உடற்கல்வி ஆசிரியர்)
(கல்விமாணி 3ம் வருடம்)

ஆசிரியர் தொழில் ஒரு உன்னதமான சேவைத் தொழிலாகும். அது சமூகத்தில் அனைவராலும் மதிக்கப்படும் ஒரு உயர்ந்த நிலைத் தொழிலாகும். மாணவர்களிடையே காணப்படும் குற்றங்களைக் களைந்து அறிவூட்டுவதுடன் சமூகத்தில் நற்பிரஜையாக்கும் சிற்பிகளாகவே ஆசிரியர்கள் விளங்குகின்றனர். இதனால் ஆசிரியர் பணியின் அந்தஸ்த்து அதன் மதிப்பு என்பன மிக உயரியதாகும்.

எனவே சமூகத்தில் உயர்நிலை சேவை புரியும் ஆசிரியர்களுக்கு உள்ள உரிமைகளையும் சலுகைகளையும் அறியும் போது ஆசிரியர்கள் மகிழ்வடைவதுடன் ஆசிரியத்துவத்தின் கனதி என்றும் சோடைபோவதற்கு இடமில்லை. என்பது திண்ணமாகும்.

அனுபவ ஆற்றல் மிக்க நிர்வாகத்திறனுடைய அதிபராக இருந்தாலும் அன்றைய தினம் சில ஆசிரியர்கள் பாடசாலைக்கு வராவிட்டால் அவ் அதிபரின் முழுத்திட்டமும் கேள்விக்குறியாகிவிடும். மேலதிக ஆசிரியர்கள் இருக்கும் பாடசாலைகளில் மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். ஆனால் பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதனால் ஆசிரியர்களின் லீவு பாடசாலை திட்டமிடலுக்கு சவாலாக இருந்து வருகிறது.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2003/38 இலக்கம் கொண்ட ஒரு பாடசாலையின் ஆசிரியர் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் ஆசிரியர்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல் என்ற சுற்றறிக்கையில் ஆசிரியர்களின் கற்பித்தல் நேரம் தொடர்பாக பின்வரும் விதியுண்டு.

பாடம் தொடர்பான கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள்வாரமொன்றுக்கு 40 நிமிடங்களைக் கொண்ட 35 பாடவேளைகளும், வகுப்புக்கு பொறுப்பாகவுள்ள ஒரு ஆசிரியர் 33 பாடவேளைகளும் கற்பித்தல் வேண்டும். உயர் தரப் பரீட்சைப் பாடங்களை கற்பிப்பதற்காக இயன்ற சகல சந்தர்ப்பங்களிலும் பட்டதாரிகளையே ஈடுபடுத்தல் வேண்டும். அவர்கள் வாரத்திற்கு குறைந்த பட்சம் 30 பாடவேளைகளாவது கற்பிக்க வேண்டும்.

சராசரியாக ஒரு ஆசிரியர் நாள் ஒன்றுக்கு ஆறு பாடவேளைகளில் குறைந்த பட்சம் ஈடுபடுகின்றார். சராசரி 35 பிள்ளைகளைக் கொண்ட வகுப்புக்கு ஒரு நாள் ஆசிரியர் வராது விட்டால் $35 \times 40 \times 6 = 8400$ நிமிடங்கள் அல்லது 140 மனித மணித்தியாலங்கள் மாற்று ஏற்பாடுகள் இல்லாவிட்டால் பலன் இழந்து போகும். நிலையே ஏற்படும்.

ஆசிரியர்களும் மனிதர்களே. அவர்களுக்கும் குடும்பம், சுகயீனங்கள், பல்வேறு தேவைகள் என பல உண்டு. எனவே அவர்களும் தேவைக்காக லீவு எடுப்பதை யாரும் குறை சொல்ல முடியாது.

ஆசிரியர்களின் விடுமுறை தொடர்பாக தாபனக் கோவையில் தனியான பிரிவு ஒன்று உண்டு. ஐம்பதுகளில் வெளியிடப்பட்ட கல்வி அறிவுறுத்தல் 1,2

ஆகிய சட்டக் கோவையிலும் பல விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன. புதிது புதிதாக பல சுற்றறிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும் பாடசாலைகளிலும் லீவு தொடர்பான விடயங்களில் தெளிவின்மை காணப்படுகின்றது.

ஆசிரியர்களுக்கு விடுமுறை (லீவு) ஓர் உரிமையன்று. அது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். ஒரு சலுகையாகவே கருதப்படுகின்றது. சேவையின் முக்கியத்துவத்தையும் அவசரத் தன்மையும் கருதியே லீவு வழங்கப்படுகிறது. இதனால் அனுமதிக்கப்பட்ட விடுமுறையைக் குறைக்கவோ அல்லது விடுமுறையிலிருக்கும் ஓர் ஆசிரியரைச் சேவைக்கு அழைக்கவோ விடுமுறை அனுமதித்த அதிகாரிக்கு உரிமை உண்டு.

லீவை எடுக்கும் முறை, அனுமதித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக அதிபர், ஆசிரியர்கள் போதிய தெளிவு பெறாமை காரணமாக பல வித முரண்பாடுகள் பெரும்பாலான பாடசாலைகளில் காணப்படுகின்றன.

ஆசிரியர்களுக்கான லீவு முறைகள் வருமாறு

1. சமயோசித விடுமறை
2. சுகவீன விடுமுறை
3. அரை நாள் விடுமுறை
4. குறுகிய கால விடுமுறை
5. கடமை விடுமுறை
6. ஓய்வு விடுமுறை
7. பிரசவ விடுமுறை
8. அரைச்சம்பள,முழுச்சம்பள மற்ற விடுமுறை
9. விசேட விடுமுறை
10. அவசர விபத்து விடுமுறை
11. படிப்பு விடுமுறை
12. தந்தையர்களுக்கான விடுமுறை
13. இலங்கைக்கு வெளியே விடுமுறை
14. பரீட்சை விடுமுறை
15. ஆசிரியர் உதவி விடுமுறை
16. கட்டாய விடுமுறை

விடுமுறையில் செல்ல முன்னர் கோரிய விடுமுறை அனுமதிக்கப்பட்டிருத்தல்.வேண்டும். இரண்டு பிரதிகளில் விண்ணப்பித்து அனுமதி பெற்று ஒரு பிரதியை விண்ணப்பதாரி வைத்திருப்பது பாதுகாப்பானது ஆகும். முன்னறிவித்தலின்றி சேவைக்கு வராமலிருத்தல் தன்னைத்தானே சேவையிலிருந்து நீக்கியதற்குச் சமனாகும். அவசரமான சந்தர்ப்பங்களிலும் எதிர் பாராதவிதமான சுகவீனத்திற்காகவும் முதல் லீவு பெற வேண்டி ஏற்படின் தந்தி அடித்தல் மூலமும் பதிவுத் தபால்மூலமும் அதிபருக்கு லீவு கோரி விண்ணப்பிக்க வேண்டும். லீவு விண்ணப்பப்படிவம் அரசாங்கத்தால் அல்லது பாடசாலை நிர்வாகத்தால் தயாரிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். லீவுகள் கணிக்கப்படும் போது சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, பகிரங்க விடுமுறைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

1. சமயோசித லீவு

நிரந்தர சேவையிலிருக்கும் சகல ஆசிரியர்களும் அவசர,சொந்த

தேவைகளுக்கென வருடமொன்றுக்கு 21 நாட்கள் இந்த லீவை பெற்றுக் கொள்ளலாம். இந்த லீவைக் கோரும் தினத்திற்கு 07 நாட்களுக்கு முன் அதிபருக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஒரே முறையில் 06 நாட்களுக்கு மேல் இவ்லீவைப் பெற்றுக் கொள்ள முடியாது. அத்தியாவசிய அலுவல்களுக்கு 07 நாட்கள் பெற்றுக் கொள்ளலாம்.

சமயோசித லீவு வழங்கப்படுவதற்குரிய காரணங்கள் :-

1. விண்ணப்பதாரியின் சுகயீனம்
2. கிட்டிய குடும்பத்தாரின் சுகவீனம் அல்லது மரணம்
3. ஆசிரியரின் விவாகம்
4. குற்றவியல் அல்லது அரசாங்க வழக்குத் தவிர்ந்த ஏனைய வழக்குகளின் பொருட்டு நீதிமன்றங்களுக்கு செல்வதற்கு
5. கல்வித் திணைக்களத்தின் தொழில் சார்ந்த பரீட்சைகள், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு
6. விண்ணப்பதாரரின் சொந்த நலன் கருதிய உத்தியோக ரீதியான நேர்முகப் பரீட்சைக்காக அலுவலகத்தால் அழைக்கப்படும் போது.

2. சுகவீன லீவு

ஆசிரியர்கள் 02 நாட்கள் மட்டும் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் இன்றியும் அதன் பின்னர் எடுக்கும் லீவுகளுக்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். முன்னர் 14 நாட்களுக்கு மேல் இதனைப் பெறுவதனால் அரசாங்க வைத்திய அதிகாரியின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். தற்போது பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி பதிவு செய்யப்பட்ட ஆயுர் வேத வைத்தியர் ஒருவரின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்து தேவைப்படும் எவ்வளவு நாட்களுக்கும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

3. அரை நாள் லீவு

அரைநாள் லீவு பெறுவதற்காக குறைந்த பட்சம் பாடசாலை நேரத்தில் அரைப்பகுதி அல்லது 2½ மணி நேரம் வேலை செய்திருக்க வேண்டும்.

4. குறுகிய விடுமுறை

8.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை சேவையாற்றும் பாடசாலை நேரத்திற்குள் ஒரு மணி நேரத்திற்கு உட்பட்டதாக மாதத்திற்கு இரண்டு முறை குறுகிய நேர லீவு பெறலாம். இதற்காக பாடசாலையின் கட்டாயமாக பேண வேண்டிய குறுகிய லீவுப் புத்தகத்தில் பதிந்த பின்னர் இதைப் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலை தொடங்க முன்னர் இதைப் பெற முடியாது.

5. கடமை லீவு

பின்வரும் காரணங்களுக்காக கடமை லீவு வழங்கப்படுகிறது.

1. குற்றவியல் வழக்குகளில் அல்லது அரசாங்க வழக்குகளில் சாட்சி சொல்லுவதற்கு

2. தொழிற்சங்கங்களின் வருடாந்த பொது கூட்டங்களுக்குச் செல்வதற்கு
3. சாரணர் கொண்டாட்டம், விஞ்ஞானச் சங்கக் கூட்டம், திணைக்களங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றில் பங்கு பற்றுவதற்கு
4. கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் பரீட்சை மேற்பார்வையாளராக அல்லது நோக்குநராகக் கடமை புரிவதற்கு
5. யூரிசபையிற் கடமையாற்றுவதற்கு
6. படைப் பயிற்சிக்கு செல்வதற்கு
7. சயரோக விடுமுறைக்கு
8. திணைக்களத்தால் நடாத்தப்படும் புத்தாக்க வகுப்புகளிற்குச் செல்வதற்கு
9. கல்வி விடயம் சம்பந்தமாக அமைச்சரால் அல்லது செயலாளரால் அழைக்கப்பட்டால்
10. முன்னிற்கும் படைக் கடமைக்கு அழைக்கப்பட்டால்

6. ஓய்வு விடுமுறை

பாடசாலை தவணை விடுமுறை காலங்களிலேயே ஆசிரியர் இவ்லீவுக்கு உரித்துடையவர். குறிப்பிட்ட ஓர் ஆண்டில் ஒரு நாள் வேலை செய்திருப்பினும் பாடசாலை விடுமுறைக் காலம் சம்பளமற்ற விடுமுறைக்குட்பட்டினும் ஆசிரியர் பாடசாலை விடுமுறைக் காலத்து முழுச்சம்பளத்துக்கும் உரித்துடையவர் ஆவார்.

7. பிரசவ லீவு

ஆசிரியைகளுக்கு ஒவ்வொரு குழந்தை பிறப்பிற்காக 84 நாட்கள் முழுச்சம்பள லீவும், 84 நாட்கள் அரைச்சம்பள லீவும்,84 நாட்கள் சம்பளமற்றலீவும் பெற்றுக் கொள்ளலாம் இது நிரந்தர,தற்காலிக,அமைய,பயிலுநர் உத்தியோகத்தர்களுக்கு உரியதாகும்.

8. விசேட லீவு

சில நோய்களுக்காக விசேட லீவு அனுமதிக்கப்படுவதுண்டு. அதன்பட்டி சயரோகத்திற்காக முழுச்சம்பளத்துடன் 09 மாதங்கள்,02 வெவ்வேறு காலங்களில் இந்த விடுமுறையை பெறலாம். முதன் முறை லீவு எடுத்த பின் 01 வருடங்கள் சேவையாற்றிய பின்னரே மறுமுறை லீவைப் பெறலாம். குஷ்டரோகத்திற்காக முழுச்சம்பளத்துடன் 22 மாதங்கள் லீவைப் பெறலாம். புற்று நோய்க்காக 06 மாத முழுச் சம்பளத்துடன் விடுமுறையைப் பெற்றுக் கொள்ளலாம். மேற் குறிப்பட்ட நோய்க்கான வைத்திய அத்தாட்சிப்பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

வயிற்றோட்டம், மகாமாரி, தைபோயிற் காய்ச்சல், மற்றும் மஞ்சள் காய்ச்சல் போன்ற மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்த வேண்டிய நோய்களுக்காக சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அரசாங்க சுற்றறிக்கை 32/93ன் படி வைத்திய சபையினால் அனுமதிக்கப்படும் எந்த வகை நோய்க்கும் வைத்திய சபையினால் பரிந்துரை செய்யப்படும் சத்திர சிகிச்சையின் பின்னர் பராமரிப்பதற்கான சம்பளத்துடன் கூடிய 06 மாத லீவைப் பெற்றுக் கொள்ளலாம்.

9. விபத்து லீவு

அரசாங்க சுற்றறிக்கை மற்றும் திருத்தப்பட்ட சுற்றறிக்கையின் படி அவசர விபத்து காரணமாக லீவு வழங்கலும் நஷ்டஈடு வழங்கலும் பின்வருமாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1. கடமையை நிறைவேற்றும் போது
2. கடமையில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் உண்டாகும் செயற்பாட்டின் பிரதிபலனாக
3. கடமை நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்களிலும் பொதுவாக கடமை விடயத்திற்குட்பட்ட ஏதாவது செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது
4. வதிவிடத்திலிருந்து கடமைக்கு செல்லும் போது கடமை ஸ்தானம் வரை அல்லது கடமை நிலையத்திலிருந்து கடமைக்காக செல்லும் போது அல்லது சேவை நிலையத்திற்கு மீண்டும் வரும் நிலையத்திற்கு கடமைக்காக செல்லும் போது அல்லது சேவை நிலையத்திற்கு மீண்டும் வரும் போது உண்டாகும் அவசர விபத்துக்களுக்காக நஷ்டஈட்டையும் லீவையும் பெற்றுக் கொள்ளலாம்.

அவசர விபத்து நடைபெற்றவுடன் காயமடைந்த ஆசிரியரை அதிபர் வைத்திய சிகிச்சைக்கு அனுப்ப வேண்டும். இது பற்றி "லொக்" புத்தகத்தில் குறிப்பிட வேண்டும். காயத்திற்கு ஏற்பவும் வைத்திய சிபார்சின்படி ஒரு வருடத்துக்கு முழுச்சம்பளத்துடன் உரிமையுண்டு.

நிரந்தரமான ஊனமுற்றவர்களுக்கு 55 வயது நிறைவு பெறும் வரை அவருக்குரிய சம்பளம் வழங்கப்படும்.

10. படிப்பு விடுமுறை

ஆசிரிய கலாசாலையிற் பயிற்சி பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டால் மட்டுமே ஓர் ஆசிரியர் இவ் விடுமுறைக்கு உரித்துடையவராவார். முழுச்சம்பளத்துடன் இரண்டு வருடங்களுக்கு இவ் விடுமுறை வழங்கப்படும். இப் பயிற்சியை பூர்த்தி செய்த பின் குறைந்த பட்சம் 8 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் சேவை புரிய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

11. பல்கலைக்கழகத்திற்கான விடுமுறை

ஓர் ஆசிரியர் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிக்கான பயிற்சிக்கு அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டால் முழுச் சம்பளத்துடன் 02 வருடங்களும்,சம்பளமின்றி 01 வருடமும் விடுமுறையாகப் பெறலாம். தற்போது விஞ்ஞான முதுமாணி,கலாநிதி,முகாமைத்துவ மேல்படிப்பு போன்றவைகளுக்கும் ஆங்கில உயர்கல்விக்கும் இந்த விடுமுறை வழங்கப்படுகிறது. எந்த லீவாக இருந்தாலும் உரிய அதிகாரியால் அனுமதிக்கப்பட்ட பின்னரே பெற்றுக் கொள்வது பாதுகாப்பானதாகும்.

12. பரீட்சை விடுமுறை

தொலைக் கலவி இறுதிப்பரீட்சைகள், பட்டப்பின் படிப்பு பரீட்சைகள், பல்கலைக்கழக பாடநெறிகள், கல்விமானிப் பட்டம் இவைகளுக்காக 10 நாட்கள் இரண்டு வாரம் என இத்தகைய லீவுகள் வழங்கப்படுகின்றன. பரீட்சை அனுமதி அட்டைகளைச் சமர்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

13. கட்டாய லீவு

ஒழுக்க நடவடிக்கைகளுக்காகவும் சேவை தேவைப்படாது என்பதற்காகவும் இவ்வாறு கட்டாய லீவில் அனுமதிக்கப்படுவதுண்டு.

14. தந்தைக்குரிய விடுமுறை

நிரந்தர பயிலுநா் ஆசிரியா்கள் தமது மனைவிற்கு குழந்தை கிடைக்கும் சந்தா்பங்களில் 03 நாட்கள் விசேட லீவு பெற்றுக் கொள்ளும் உரிமை உண்டு. 03 மாதத்திற்குள் திருமணச் சான்றிதழ்,குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பிரதிகளை சமா்ப்பித்து அத்தாட்சிப்படுத்தி லீவை எடுக்கலாம்.

15. இலங்கைக்கு வெளியே விடுமுறை

இவ் லீவு பாடசாலை விடுமுறை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலை விடுமுறை தவிர்ந்த மற்றய நாட்கள் சம்பளமற்ற விடுமுறையாகக் கருதப்படும். வைத்திய தேவை,புண்ணிய ஸ்தலங்களுக்கு செல்வதற்காக பயன்படுத்தலாம்.

1. கருத்தடை சத்திர சிகிச்சைக்காக ஆண்களுக்கு மூன்று நாட்களும் பெண்களுக்கு 07 நாட்களும் விசேட லீவு உரித்தாகும்.
2. பாடசாலை ஆரம்பமாகி அரைமணி நேரத்திற்கு பின்னா் காலம் தாமதமாக வரும் ஒவ்வொரு சந்தா்ப்பத்திலும் அரை நாள் விடுமுறையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.
3. பாடசாலை ஆரம்பமாகி 15 நிமிடம் கழிந்தவுடன் சிவப்பு கோடிட்டு வரவு இடாப்பை மூடுதல் வேண்டும். பாடசாலை ஆரம்பமாகிய பின்னா் வேலை செய்யும் மூன்று நாட்கள் தினமும் அரைமணித்தியாலத்திற்கு குறைந்த காலம் தாமதமாகி பாடசாலை வந்தால் அரைநாள் விடுமுறையாக கொள்ளப்படல் வேண்டும்.

**அரச ஊழியா்களுக்கான சலுகை:-**

1. தன் குழந்தைக்கு தாய்ப்பாலூட்டும் பொருட்டு சேவை நிலையத்தை விட்டுச் செல்லும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னா் சேவைநிலையத்திலிருந்து செல்ல அனுமதி அளிக்க வேண்டும். இது குழந்தை பிறந்து ஐந்து மாதங்கள் பூா்த்தியாகும் வரை மட்டும் அனுமதிக்கப்படும்.

2. ஒரு பெண் உத்தியோகத்தா் கருத்தரித்து ஐந்து மாதங்களின் பின்னா் அரை மணித்தியாலம் பிந்தி வரவும் அரை மணித்தியாலம் முந்தி செல்லவும் விசேட சலுகை வழங்கப்படும்.


**பெற்றுக் கொள்ளாத லீவுகளுக்கான சலுகைகள்:-**

1. 2006ல் தனக்குரிய லீவைப் பெற்றுக் கொள்ளாத சந்தா்ப்பத்தில் அதற்குரிய நிதி ஊக்குவிப்பு வழங்கப்பட்டது.

2. 2007 சற்றறிக்கையின்ன் படி பெற்றுக் கொள்ளப்படாத அமைய வைத்திய லீவுகளை வைத்துக் கொண்டு 12 மாதங்களுக்கு மேற்படாது ஓய்வுக்கு முன் லீவு பெறலாம். அல்லது 60 வயதிற்குப் பின்னா் இந்தக் காலத்திற்கு சேவையாற்றலாம்.

3. ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை இவ்வாறு மிகுதிப்படுத்தும் லீவை வைத்துக் கொண்டு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ ஆறுமாதத்திற்கு மேற்படாத லீவை அனுப்பவிக்கலாம் (2006ம் ஆண்டு கொடுப்பனவை பெறாமல் இருக்க வேண்டும்)


அதிபா்களும் ஆசிரியா்களும் பாடசாலையின் பொதுநோக்கத்தை கவனத்தில் கொண்டு மேற்கூறப்பட்ட விடயங்களை சுமுகமாகப் பேணுவாா்களாயின் முரண்பாடற்ற பாடசாலைச் சூழலை உருவாக்கலாம்.



ஒழுங்காற்றுக் குழவுடன் மாணவ முதல்வர்கள் 2012




நூலகக் குழுவுடன்



உயர்தரம் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் மாணவ முதல்வர்கள் 2012



உயர்தர விஞ்ஞான மன்றம் 2012



கலை வர்த்தக மன்றம் 2012



இந்துமா மன்றம் 2012



கிறிஸ்தவ மன்றம் 2012



தமிழ் மன்றம் 2012



ஆரம்பப் பிரிவு ஆசிரியர் குழாம்



பாண்ட் வாத்தியக் குழு 2012



பாடசாலைச் சாரணர் அமைப்பு 2012



வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புக்குழு- 2012




இடைநிலைப் பிரிவு விஞ்ஞான மன்றம் 2012




பாடசாலையின் பதிவுகள் சில

மாணவர்களால் நடாத்தப்பட்டபிரியாவிடை நிகழ்வின் போது












PPIDDY


PPIDDY



# நன்றி



1. ஆசியுரை வழங்கிய சமயப் பெரியோர்களுக்கும்
2. வாழ்த்துச் செய்திகளை வழங்கிய கல்வித்துறைசார் பெரியோர்களுக்கும், பழையமாணவ சங்கத்தவர்களிற்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்க ஊழியர்களிற்கும் ஏனைய கல்லூரி நலன் விரும்பிகளிற்கும்
3. ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய அனைவருக்கும்
4. நிதி உதவியை வழங்கிய பழையமாணவர் சங்கத்தினருக்கும்
5. மலரினை சிறப்பாக வடிவமைத்துத் தந்தபிள்ளையார் அச்சகத்தினருக்கும்
6. இம் மலரினை வெளியிடுவதற்கு பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களிற்கும் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

-மலர்க்குழு-

SURXD

Natuell





பிள்ளையார் அச்சகம்

Design by :